APPOLO STUDY CENTRE

ETHICS

# JANUARY WEEKLY TEST - 2

| | | |
|---|---|---|
| 11th ETHICS | Unit -6 | தொல்குடி விழுமியங்கள் |
| | Unit -7 | அறவியலின் இயல்பும் அறச்செயல்களும் |
| | Unit - 8 | அறநெறி வாழ்வு |
| | Unit - 9 | தொழில்சார் அறங்கள் |
| | Unit-10 | அண்மைக்கால அறநெறிப் போக்குகள் |

## அலகு 6

## தொல்குடி விழுமியங்கள்

**நுழைவு வாயில்**

வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டு இன்றுவரை ஆசியா, ஆப்பிரிக்கா, வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஐரோப்பா ஆகிய ஆறு கண்டங்களிலும் தொல்குடியினர் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுள் மிகச்சிலரைத் தவிரப் பிறர் எல்லேரையும் போல உலகத்தோடு கலந்துவிட்டனர். இவ்வாறு கலந்துவிட்டவர்களின் பண்பாடுகளிலிருந்தும், ஒழுகலாறுகளிலிருந்தும், மனித சமத்துவம் சார்ந்த விழுமியங்கள் உருப்பெற்றுள்ளன. இத்தொல்குடி விழுமியங்கள், உலகப் பண்பாட்டு வரலாற்றிற்கும், தத்துவ வளர்ச்சிக்கும் மிகுந்த பயன்களை நல்கியுள்ளன.

பெண்களைப் போற்றல், மக்கட்பேற்றைக் கொண்டாடல், வீரத்தையும் வெற்றியையும் விரும்புதல், இயற்கையை வழிபடுதல், விருந்தோம்பல், மூத்தோரை மதித்தல், கூடி உண்ணல், உயிர்களை நேசித்தல், உலகை விரும்பல் ஆகிய விழுமியங்களைத் தொல்குடி விழுமியங்கள் எனலாம்.

தொல்குடி அறிவு என்பது, நிகழ்வுகளைக் கூர்ந்து நோக்கிக் கண்ணால் கண்ட பொருள்களையும் செயல்களையும் பகுத்தாராய்வதன் விளைவால் உருவானதாகும். கடுமையான உடலுழைப்பின் வழியாக இவ்வறிவை இயல்பாகக் கண்டடைந்தனர். மூங்கிலின் உரசலிலும் கற்களின் உராய்விலும் நெருப்பு மூட்டக்கற்றனர்; மலைகளில் மோதித்திரும்பும் குரல்களைக் கேட்டு எதிரொலியை அறிந்தனர்; நிலத்தைத் தோண்டிக் கிழங்கெடுக்கும் பன்றியிடமிருந்து உழவைக் கண்டுபிடித்தனர். கட்டுமரம் ஏறிக் கடலை வென்றனர்; ஏறு தழுவி உடலை உறுதி செய்தனர்; கீழாநெல்லி, மலைவேம்பு போன்ற மூலிகைகளைத் தின்று நோய் தீர்த்தனர்.

இத்தகைய பட்டறிவு, கூட்டுப்பொறுப்பு ஆகியவற்றின் இணைவில் தோன்றிய விழுமியங்களே, மாபெரும் அறங்களாக அமைந்தன. உலகளாவிய அறக்கருத்துகளின் விதைமுளைகளான இவை இலக்கியச் சான்றுகளுடன் இங்கு விளக்கி உரைக்கப்படுகின்றன.

## 1. பெண்களைப் போற்றல்

தனிச்சொத்து, தனிக்குடும்பம், அரசு ஆகியவற்றின் தோற்றத்திற்கு முன்னால் பெண்ணே சமூகத்தில் நிகழும் அனைத்துச் செயல்பாடுகளுக்கும் வழிகாட்டியாக இருந்து குடிமரபைக் கொண்டு செலுத்தியவளாகக் கருதப்படுகிறாள். இவ்வாறான பெண் முதன்மைச் சமூகத்தில் போட்டியும் பொறாமையும் பூசலும் போர்களும் குறைந்த அளவில் இருந்தன. தம்மைச் சுற்றி வாழும் அனைவரின் முன்னேற்றத்தையும் நன்மைகளையும் பெண்கள் தலைமையில் உறுதிசெய்தனர். அவர்களின் அறிவுத்திறனும் செயலாற்றலும் சமூகத்தின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கு வழிகாட்டின.

தொல்குடியைத் தொடர்ந்த இனக்குழு வாழ்விலும் பெண்களின் ஆளுமைப் பண்பு நீடித்தது. முதுகுடிப் பெண்களுக்குப் பழஞ்சமூகங்களில் பெருமதிப்பும் சிறப்பும் இருந்தன.

தொல்குடிவாழ்வில் அனைத்து வளமைகளின் அடிப்படையாகப் பெண் கருதப்பட்டாள். வேட்டையாடுவதிலும் வேளாண்மையிலும் உணவைச் சேகரிப்பதிலும் பாதுகாப்பதிலும். குடித்தலைமை ஏற்பதிலும் மக்கட்பேற்றிலும் பெண் முன்னின்றாள். கலையையும் கல்வியையும் அளிப்பதிலும், உடலைப் பேணுவதிலும், மருத்துவம் பார்ப்பதிலும், பகிர்ந்தளித்தலிலும் வழிநடத்தலிலும், சிக்கல்களை இனங்காண்பதிலும் தீர்ப்பதிலும் பெண்ணே குடித்தலைமை எற்றாள். தம்மை வழிநடத்திய இம்முதிய பெண்களைப் போற்றி மதிக்கும் பண்பாடு, தொல்குடிகளிடம் பெரும் விழுமியமாய் விளங்கியது. வாழ்விற்கான கடமைகளை அணிகலன்களாக விரும்பி ஏற்ற பேரறிவுடைய பெண்டிரைச் சங்க இலக்கியம் போற்றியுள்ளதைக் காண்கிறோம். பெண்கள் பகட்டான வாழ்வை விரும்பாமல், எளிமையும் உயர்வும் உள்ள வாழ்வையே விரும்பினர் என்பதைப் பெரும்பாணாற்றுப்படை எடுத்துரைக்கிறது நெல்லையும் முல்லையின் அரும்புகளையும் கொண்டு பெரிய காவலையுடைய ஊரின் நன்மைக்காக நற்சொல் கேட்டுநின்ற முதிய பெண்களைப் பற்றி முல்லைப்பாட்டு (7-11) பேசுகிறது. திருமண விழாக்களை முதிய பெண்கள் தலைமையேற்று நடத்தியதை அகநானூறு (பாடல் : 86) காட்டுகிறது. முதிய பெண்டிர், பூவும் நெல்லும் கலந்த நீர் நிறைந்த குடங்களில் உள்ள நீரால் மணமக்களை நீராட்டித் திருமணத்தை நிகழ்த்தியதாக, அப்பாடல் தெரிவிக்கிறது.

> ''நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
> எருமை நல்லான் கருநாகு பெறூஉம்''
>
> (பெரும்பாணாற்றுப்படை: 164 - 165)

நெய்யை விற்றுப் பசும்பொன்னை ஈடாகப் பெறாமல், பால் தரும் எருமையையும் நற்பசுவையும் எருமைக்கன்றையும் ஈடாக வாங்கும் பெண்ணைப் பெரும்பாணாற்றுப்படை போற்றுகிறது. இங்குப் பொலிவளிக்கும் பொன்னை விடவும் பயனளிக்கும் பால் மாடுகளையே பெரியதாகக் கருதும் நடைமுறை வாழ்வியல் அறிந்த பெண்ணின் பெருமையைக் காண்கிறோம்.

கூரிய அறிவும் முதுமையும் உடைய பெண்கள் செம்முது பெண்டிர் (நற்றிணை 288), செம்முது பெண்டு (புறநானூறு 276), செம்முது செவிலியர் (அகநானூறு 254), செம்முகச் செவிலியர் (நெடுநல்வாடை 153), முதுசெம் பெண்டிர் (அகநானூறு 86), பெருமுது பெண்டிர் (முல்லைப்பாட்டு 11), முதுவாய்ப் பெண்டிர் (அகநானூறு 22), முதுவாய்ப் பெண்டு (அகநானூறு 63), பேரில் பெண்டு (புறநானூறு 270), தொன்முது பெண்டிர் (மதுரைக்காஞ்சி 409) எனப் பற்பல அடைமொழிகள் வழிப் போற்றப்பட்டுள்ளனர்.

இப்பெண்கள் தலைவனின் வெற்றிக்காகத் தலைவிக்கு வாழ்த்து கூறுவோராகவும், தூது செல்வோராகவும் மகளைத் தேடிச் செல்வோராகவும், குறி சொல்வோராகவும், விரிச்சி கேட்போராகவும், நிமித்தம் பார்ப்போராகவும், அறத்தொடு நிற்போராகவும், மணவினை நிகழ்த்துவோராகவும், நெல்லும் பூவும் தூவி இயற்கையைத் தொழுவோராகவும், பொதுநன்மை பேணுவோராகவும் விளங்கினர். பொதுநன்மை பேணும் பெண்களைப் பொதுசெய் பெண்டிர் என்று அகநானூறு போற்றுகிறது. பிற்காலங்களில் இப்பெருமுது பெண்டிர், ஆண் தலைமைக்கு உட்பட வேண்டியிருந்தது. இந்நிலையிலும் மனையுறை மகளிராகப் புலியை முறத்தால் விரட்டியவராகவும், கணவனையும் தந்தையையும் செருக்களத்தில் பறிகொடுத்தபிறகும் அஞ்சாது போருக்குப் புதல்வரை அனுப்பியவராகவும் முதுகுடி மகளிர் அறியப்பட்டனர். இச்சூழலிலும் ஔவையார் போன்ற பெரும் புலமைத் திறத்தார் பீடும் பெருமையும் பெற்றிருந்தனர்.

பாணர்களோடும் பாடினிகளோடும் பிற கலைஞரோடும் கூடித் தொல்குடிப் பெருமைகளைப் தமிழில் ஔவையார் விதந்தோதினார். 'அவனை அவர் பாடியது' என்ற புலமை மரபுக்கேற்பக் கடையெழு வள்ளல்களுள் ஒருவனான அதியமான் நெடுமான் அஞ்சியைப் பாணர் குடியின் பெருமிதத்துடன் ஔவையார் எதிர்கொண்டார். பரிசில் வாழ்வை விடவும், தன்மானம் பெரிது என்று அதியனிடம் ஔவை முழங்குவதைப் புறநானூறு காட்டுகிறது. (புறம் : 206)

பரிசில் அளிப்பதைக் காலம் தாழ்த்துவதால் புலவர்கள் இறந்துவிடார் என்றும் அறிவும் புகழும் உடையோர் எங்கு சென்றாலும் உரிய பெருமையுடன் வாழமுடியும் என்று ஔவை பாடுகிறார். புலவரை வேந்தர் அவமதிக்கும்போது தணிந்துபோகாமல் அறத்துணியுடன் பொங்குகிறார். இதை அவர் தனிமனித நலன்களுக்காகப் பாடவில்லை; பாணர் சமூக நன்மைக்காகவே பாடுகிறார் எத்திசை செலினும் அத்திசை சோறே' என்கிறார். இத்கைய அறச்சீற்றம் தொல்குடிப் பெண்ணின் இயல்பாகும்.

2. **மக்கட் பேற்றைக் கொண்டாடல்**

தொல்குடிச் சமூகம் மானுட உழைப்பைப் போற்றிய சமூகமாகும். நவீன வேளாண்முறைகளும் இயந்திரங்களும் இல்லாத காலத்தில் மனிதர்களே அனைத்துழைப்புக்கும் பொறுப்பேற்றனர். கூட்டுழைப்பின் மூலமே ஒரு சமூகம் தன்னை உருவாக்கிக்கொள்ளவேண்டிய நிலை அன்றிருந்தது. இந்நிலையில் மக்கட்பேறு என்பது, இன்றியமையாத ஒரு கடமையாகவும் பண்பாடாகவும் பார்க்கப்பட்டது. எந்த இனக்குழுவில் குழந்தைகள் அதிக எண்ணிக்கையில் உருவாகிறார்களோ, அந்த இனக்குழுவே வலிமையும் சிறப்பும் உடையது என்ற கருத்து தொல்குடி விழுமியமாய் இருந்தது. மக்கட்பேற்றை வழங்குபவள் தாய் என்பதால், அதிக மக்களைப் பெறுபவள் இனக்குழு வாழ்வில் தலைமைக்குரியவளாகக் கருதப்பட்டாள். தாயைக் கொண்டே ஒரு குடி தோன்றி வளர்கிறது என்பதால் தாய்க்குக் கட்டுப்பட்டவர்களாக அக்குடியின் அனைத்து உறுப்பினர்களும் அடங்கி வாழ்ந்தனர். இது தொல்குடிப் பண்பாட்டின் மாற்ற முடியாத வழக்கமாக இருந்தது.

மக்கட்பேற்றைக் கொண்டாடுதல் என்பது, அதற்குக் காரணமான பெண்ணையும் சேர்த்துக் கொண்டாடுவதேயாகும். எனவேதான் வேட்டை, உணவுச் சேகரிப்பு, உணவு உற்பத்தி போன்றவற்றைப் பேசும் இடங்களில் எல்லாம் பெண் சிறப்பிக்கப்படுகிறாள். குறிஞ்சித்திணை பேசும் தினைப்புனம் காத்தல், முல்லைத் திணை பேசும் குடும்பத்தைக் காத்தல் போன்றவையும் தாய்வழிச் சமூகத்தின் செயல்பாடுகளேயாகும். இவற்றைப் பெண்களே செய்தனர். தாய்வழிநிற்றல் என்பதே தொல்குடிச் சமூக அமைப்பின் நியதியாக இருந்ததைப் புறநானூறு குறிப்பிடுகிறது. இதனை,

'ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே,
..........................................
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்,
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே' (புறம் - 312)

என்ற பொன்முடியாரின் பாடல்வழி அறிகிறோம். வீரநிலைக்காலச் சமூகத்தில் பெண்ணுக்கான கடமையையும், தாய் சொற்படி வழிநடத்தப்படும் குழந்தைகளுக்கான கடமையையும் இப்பாடல் கூறுகிறது. பெண்ணே போருக்குத் தலைமை ஏற்றாள்; வீரம் என்பது அவள் வழியாகவே பிள்ளைகளுக்கு வந்ததாகக் கருதப்பட்டது. ஒரு போர்வீரனைப் போற்றும்போதுகூடத் தாயின் வீரத்தைச் சுட்டிக்காட்டியே அவன் கொண்டாடப்பட்டான்.

'நறுவிரை துறந்த நாறா நரைத்தலைச்
சிறுவர் தாயே பேரிற் பெண்டே' (புறம் - 270)
செம்முது பெண்டின் காதலஞ்சிறாஅன்'
(புறம் 276)

எனப் பெண் தலைமையேற்ற தாய்வழிப் சமூகத்தின் சிறப்புப் பாடப்பட்டுள்ளது.

3. **இயற்கையை வழிபடல்**

இயற்கையை வழிபடுவது என்பது தொல்குடி வாழ்வில் முக்கியமான ஒரு செயல்பாடாகும். இயற்கையின் பேராற்றலைக் கண்ட மனிதன், அதை வணங்கத் தொடங்கினான். இடியும் மழையும் மின்னலும் அவனுக்கு அச்சமூட்டின. சூரியன் உதிப்பதும் மறைவதும்கூடப் பெரும் வியப்பைத் தந்தன. வெள்ளப்பெருக்கு, காட்டுத்தீ, நில நடுக்கம் போன்றவற்றால் தம்மோடு இருப்பவர்கள்

இல்லாமல் போவதைக் கண்டு தொல்குடியினர் மருண்டனர். விலங்குகளிடமிருந்து தங்களைக் காத்துக்கொள்ளவும், இயற்கையைப் புரிந்துகொள்ளவும் அவர்கள் போராடினர்.

அன்றாட வாழ்வின் செயல்பாடுகளில் அவ்வப்போது குறுக்கிட்டுப் பதறவைத்த இயற்கை குறித்த பேரச்சம், தொல்குடிகளை உலுக்கியெழுப்பி இயற்கையை வழிபடச் செய்தது. இருட்டை விரட்டும் சூரிய சந்திரச் சுடர்களும் அச்சமூட்டும் விலங்குகளும் பற்றியெரியும் நெருப்பும் பேரலைகளை எழுப்பிய கடலும் உணவு உறையுளுக்கு அடிப்படையாகும் நிலமும் வானைத் தொட்டுவிடும் அளவு உயர்ந்தோங்கிய மலைகளும் தொல்குடி மக்களின் வழிபடுபொருள்களாகின.

அன்றாட வாழ்வின் செயல்பாடுகளில் அவ்வப்போது குறுக்கிட்டுப் பதறவைத்த இயற்கை குறித்த பேரச்சம், தொல்குடிகளை உலுக்கியெழுப்பி இயற்கையை வழிபடச் செய்தது. இருட்டை விரட்டும் சூரிய சந்திரச் சுடர்களும் அச்சமூட்டும் விலங்குகளும் பற்றியெரியும் நெருப்பும் பேரலைகளை எழுப்பிய கடலும் உணவு உறையுளுக்கு அடிப்படையாகும் நிலமும் வானைத் தொட்டுவிடும் அளவு உயர்ந்தோங்கிய மலைகளும் தொல்குடி மக்களின் வழிபடு பொருள்களாகின. இயற்கையின் மீதான அச்சமே வழிபாடானது என்பதைப் பரணரின் பாடல்வழி அறியலாம். (நற்றிணை : 201).

அணங்குடை நெடுவரை (அகம்: 22)
சூர்ச்சுனை (அகம் : 91)
அறுகுடை முந்நீர் (அகம் : 220)
பெருந்துறைப் பரப்பின் அமர்ந்து உறை சுணங்கோ (நற்: 155)

எனச் சங்க இலக்கியம் இயற்கையைச் சூர் உடனும், அணங்குடனும், சுணங்குடனும் தொடர்புபடுத்துகின்றது. இயற்கை வழிபாடு என்பது, அக்காலத் தொல்குடி வாழ்வின் அடிப்படையான நம்பிக்கையாகும். இயற்கையில் கிடைத்த எல்லாவற்றையும் நன்றியுணர்வுடன் அவர்கள் இயற்கைக்குப் படையலிட்டுள்ளதையும் பார்க்க முடிகின்றது. எங்கிருந்து எடுக்கப்பட்டதோ அதை அதற்கும் கொடுத்து நன்றியுணர்வோடு பார்க்கும் இச்செயல், தொல்குடியின் மிகச்சிறந்த விழுமியமாகக் கூறத்தக்கதாகும்.

தேன் சுவையுடைய கனிகள், மாங்கனி, பலாவின் சுளைகள், கள் போன்றவற்றைக் கொண்டு வான்கோட்டுக் கடவுளைத் தொல்குடிகள் வணங்கினர். (அகம் : 348) திணை நிலங்களுடன் இணைந்து வாழந்தோரின் இந்த இயற்கை வழிபாடே, பின்னாளில் சமய வளர்ச்சிக்குக் காரணமாயிற்று. ஐம்பூதத்தால் உருவாக்கப்பட்டது இவ்வுலகம் என்கிற பகுத்தறிவுக் கருத்தும் தொல்குடிமக்களின் இயற்கை வழிபாட்டின் விளைச்சலேயாகும்.

### 4. வீரத்தையும் வெற்றியையும் விரும்புதல்

ஒருவனை ஒருவன் வெல்வதும், ஒருவனிடம் ஒருவன் தோற்பதும் புதியது இல்லை. அது இந்த உலகத்தின் இயற்கையாகும். தொல்குடிச் சமூகத்தில் வீரன் மதிக்கப்பட்டான்; வெற்றியை வீரமே உருவாக்கியது; வெற்றி அல்லது வீரமரணம் போற்றப்பட்டது; வீரத்தாலும் வெற்றியாலும் பொருளும் புகழும் ஈட்டப்பட்டன.

வேட்டையாடியும் வேளாண்மை செய்தும் வாழ்ந்த தொல்குடி மக்களிடம் வீரம் என்பது தம் இனத்தைக் காப்பது, தம் பொருள்களைக் காப்பது என்ற இயல்புணர்வாகவே இருந்தது. தொல்குடி வாழ்வியலின் பண்புகளை வெளிப்படுத்தும் சங்க இலக்கியத்தில் காட்டப்படும் போர்கள், நாட்டைக் காக்கவும் தம் உடைமைகளைக் காக்கவும் தம்மை அண்டி வாழும் மக்களைக் காக்கவும் செய்யப்பட்ட இனக்குழுச் சமூகங்களின் உரிமைப்போர்கள் ஆகும். இதற்கும் முந்தைய தொல்குடி மக்களின் போர்களுள், மாடுகளைக் கவர்ந்து செல்வதும் அவற்றை மீட்பதும் நிலங்களைக் கைப்பற்ற முனைவதுமான உரிமைப்போர்களும் இருந்தன.

**கொடையும் அரசியலும்**
சங்ககால வேளிரும் வேந்தரும் கொடை அளிப்பதில் முனைந்து நின்றனர். கொடை, பாணர் கடன் ஆகிய சொற்கள் பரிசு என்ற பொருளில் ஆளப்பெற்றது. பண்டைய நாளைய தொல்குடி வாழ்க்கையிலும், வேளிர் வாழ்க்கையிலும் வேந்தர் வாழ்க்கையிலும் பரிசு இரண்டறக் கலந்து நின்றது. பரிசு, அதனை அளிப்பவனின் செல்வச் செழிப்பை எடுத்துக்காட்டுகின்றது. பரிசைப் பெறுபவனிடம் பரிசு அளிப்பவன் கைம்மாறு எதையும் எதிர்பார்க்கவில்லையானாலும் பரிசு பெற்றவன் கொடையாளிக்கு கைம்மாறு அளிக்கும் நிலைக்குத் தள்ளப் பெறுகின்றான். கிழார், வேளிர், வேந்தர் ஆகியோர் வணிக

வளத்தினாலும், பிற வழிகளினாலும் கிடைத்த செல்வத்தைப் பாணர்களுக்கும், புலவர்களுக்கும், குடியிலுள்ளோர்க்கும் அளித்து, அதனால் புகழ் ஈட்டினர். அப்புகழ் அவர்களை சமூகத்தில் உயர்ந்தவர்களாகச் செய்தது. கிழார், வேளிர், வேந்தர் ஆகியோர் பாணர்களுக்கும், புலவர்களுக்கும் மட்டுமின்றிச் சமயத்தலைவர்களுக்கும் கொடையளித்தனர்.

தம்மோடு பகையுடைய இனக்குழுவின் ஆநிரையைக் கவர்வது வெட்சி எனவும், தம்மிடமிருந்து பகைவர் கவர்ந்து சென்ற ஆநிரையை மீட்டுவருவது கரந்தை எனவும் அறியப்படுகிறது. தொல்குடிச் சமூகத்தில் மாடுகளே செல்வமாகக் கருதப்பட்டதால், இந்த மாடுபிடிப் போர்கள், முனைப்பான இருப்பிற்கான போர்களாகவே இருந்தன. இத்தகைய போர்களில் துணிவுடையவர்களே வெற்றி பெற்றனர். பெரும்பாலும் போரில் ஈபட்ட வீரர்கள் வில்லுடனோ வேலுடனோ அல்லது வாளுடனோ இருந்தமையைச் சங்கப்பாடல்கள் சுட்டுகின்றன. 'வல்வில் மறவர்', 'நெடுவேல் காளை' போன்ற தொடர்களால் அதை 'வல்வில் மறவர்', 'நெடுவேல் காளை' போன்ற தொடர்களால் அதை அறிகிறோம். இத்தகைய போர்கள் கூட்டாக நிகழ்த்தப்பட்டன; போரில் வீரம் காட்டியவர்கள் சிறப்பிக்கப்பட்டனர்.

இவ்வாறு தம்மையும், தம்மண்ணையும் காக்கப் போரிட்ட வீரர்களைத் தொல்குடிச் சமூகத்தினர் கொண்டாடினர். அவர்களுக்கு நல்ல உணவையும் கள்ளையும் கொடுத்துக் களைப்பைப் போக்கினர். தொல்குடிச் சமூகத்தால் கொண்டாடப்பட்ட வீரர்கள், தம் கூட்டத்திற்காகத் தம் உயிரையும் கொடுக்கும் விருப்பத்துடன் செயல்பட்டனர். தம்மினத்திற்காக உயிர்விடுதல் என்பது அங்குப் பெருமைக்குரியதாகக் கருதப்பட்டது (புறம் : 68). வீரன் மக்களின் நம்பிக்கைக்குரியவனாகப் பார்க்கப்பட்டான், அவனின் வீரம் சிறப்பிக்கப்பட்டது. அவன் பலர்க்கும் நிழாயிருந்தான் அவன் நிழலில் தங்கியிருப்பவர்களாக மக்கள் விளங்கினர், என்றும் இந்த உலகத்தில் நின்று நிலைப்பவனாக அவன் விளங்கினான். (பலர்க்கு நிழலாகி உலகம் மீக்கூறி (புறம் : 223)

**நடுகல் வழிபாடு**

நடுகல் வழிபாட்டில் இரண்டு நிலைகளை இலக்கியங்கள் கூறுகின்றன.

1. நடுகல் எடுத்தல்
2. நடுகல் வழிபாடு

இவை நடுகல் எடுக்கும் முறைகளைப் பற்றியும் நடுகல் வழிபாடு பற்றியும் தொல்காப்பியம், சிலப்பதிகாரம், புறப்பொருள் வெண்பாமாலை ஆகியன பேசுகின்றன.

தொல்காப்பியம் கல் எடுக்கும் நிகழ்வை ஆறு வகையாக வகைப்படுத்தி உள்ளது. அவை, 1. காட்சி 2. கால்கோள் 3. நீர்ப்படை 4. நடுகல் 5. பெரும்படை 6. வாழ்த்து என்பவையாகும். காட்சி என்பது கணியன் அல்லது சோதிடனைக் கொண்டு கல்லை அறிந்து எடுத்து வருவதைக் குறிக்கின்றது. குறிப்பிட்ட தன்மையை உடைய கல்லைக் கொண்டு வரவேண்டும் என்ற தீர்மானித்துக்கொண்டு வருவது முதல் இரண்டு நிகழ்வுகள். இரண்டாவது நிலையான நீர்ப்படை என்பது நீராட்டுதல் ஆகும். நீரினால் பொருள்களைப் புனிதமடையச் செய்யலாம் என்று பண்டைய மக்கள் நம்பினர். இதற்குப் பல சக்திகள் உண்டு என்றும் நம்பினர்.

இயற்கையாக நிகழும் மரணத்தைவிடப் பகைவர்களுடன் போர்புரிந்து இறப்பவர் மேலானவராகக் கருதப்பட்டனர் (அகம் : 61). இவ்வாறு தம்மினத்திற்காக உயிர்விட்ட வீரன், மக்களால் வணங்கப்பட்டான். இறந்த வீரனைப் புதைத்து அவ்விடத்தில் கற்களை நட்டுவைத்தனர். இந்நடுகற்கள் வழிபடப்பட்டன. இத்தகைய வீரனை வழிபட்டால், வருங்காலப் போர்களில் மாபெரும் வெற்றிகளை அவன் அருள்வான் எனத் தொல்குடி மக்கள் நம்பினர். எனவே வீரர்களைப் புதைத்த இடங்களின் மீது நட்டு வைக்கப்பட்ட நடுகற்களுக்குப் பலிகொடுத்தனர். நடுகற்களை நீரால் கழுவி, நெய்விளக்கு ஏற்றிப் பூவும் புகையும் இட்டு வழிபட்டனர். மக்கள் நடுகற்களைத் தெய்வங்களாகக் கருதி வணங்கினர். போரில் வீரமரணம் அடைந்த வீரனையன்றி வணங்கத்தக்க வேறு தெய்வம் இல்லையென்றும் கருதினர்.

"கல்லே பரவின் அல்ல
நெல் உகுத்துப் பரவும் கடவுளும் இலவே"

(புறம் : 335)

என்கிறார் மாங்குடிகிழார். இத்தகைய நடுகற்களை வணங்கும் வழக்கம் தம்மில் தலைமையுடையோரை வணங்குவதாக மாறிப் பின் அது கடவுள் வணக்கமாகவும் வளர்ந்தது. எனவே, உருவவழிபாடு தோன்ற இந்த நடுகல் வழிபாடே வாயிலாயிற்று எனலாம்.

பெரியபடையும் வீரர்களின் துணிவும் வெற்றியை ஈட்டித்தரும் இருபெரும் ஆற்றல்களாகக் கருதப்பட்டன. பெரிய படையைக் கொண்டவர்கள், தம் படைபற்றிக் கொண்டிருந்த பெருமிதத்தை அடங்காத் தானை (புறம் : 71) விறல்கெழு தானை (புறம் : 122) போன்ற தொடர்களால் அறிகிறோம். போர் என்பது கூட்டாக செய்யப்படுவது என்பதால், போரின் மூலம் வந்த பொருள்களை அனைவரோடும் பகிர்ந்துகொள்வது என்பதும் தொல்குடி மக்களின் ஒரு வாழ்வியல் விழுமியமாக இருந்தது. இது ‘பாதீடு’ எனப்பட்டது. போருக்குச் சென்றோருக்குப் போரில் கிடைத்த பொருள்கள் அனைத்தும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன.

### 5. விருந்தோம்பல்

தமக்கென எதையும் சேர்த்து வைத்துக்கொள்ளாமல், தேவையுள்ளோர் எவரோடும் தமக்குக் கிடைத்ததைப் பங்கிட்டுப் பொதுவில் வைக்கும் வாழ்வறமே விருந்தோம்பல் எனலாம். விருந்தோம்பல் பண்பாடு, தம்மிடமுள்ளதை அனைவரும் பகிர்ந்துண்டு மகிழ்ந்து வாழும் கூட்டுச்சமூக வாழ்வைக் காட்டுகிறது. தொல்குடி மக்களிடையே விருந்தோம்பல் என்பது, மிகப்பெரியதொரு விழுமியமாகக் கருதப்பட்டது.

தம்மைத்தேடி வந்தவரை உணவிட்டுப் பேணி மகிழ்வித்தல் என்பது, ஒரு தலையாய கடமையாக இருந்தது. இங்கு விருந்து என்பது, தம்மோடு உறவுடையவரைப் பேணல் என்பதோடு முடிவதில்லை; அறிமுகம் இல்லாத புதியவர் என்றாலும் விருந்தோம்புதல் ஒரு பண்பாட்டுச் செயல்பாடாகத் தொல்குடிகளிடம் இடம்பெற்றிருந்தது. உயிர்களை நேசித்தல், சுற்றியுள்ளோரைப் பாதுகாத்தல் என்பன அரிய விழுமியங்கள். வேட்டையாடியும் வேளாண்மை செய்தும் வாழ்ந்த தொல்குடி மக்கள் பசியின் கொடுமையை உணர்ந்திருந்தனர். அதனாலேயே, நீண்ட நெடியவழியில் பயணித்துக் களைத்து வருபவர்க்கு உணவிட்டுக் களைப்பைப் போக்கினர். முல்லைத்திணை மக்கள், மூங்கில் குழாய்களில் கொண்டுசென்ற உணவினைத் தம் வழியில் எதிர்ப்பட்டவர்களின் பசி நீங்கப் பகிர்ந்துண்ட செய்தியை அகநானூற்றுப் பாடல் காட்டுகிறது (அகம் : 311).

விருந்தினரின் பசியைப் போக்கத் தன் வாழ்நலனுக்காகப் பயிரிட வைத்திருந்த விதைத்தினையை உரலில் இட்டுக் குத்திப் பசிபோக்கிய செய்தியைப் புறநானூறு (புறம் : 316) தெரிவிக்கிறது. இவ்வாறு விருந்தினரைப் போற்றுவதைத் தொல்குடி மக்கள் தம் கடமையாகக் கொண்டிருந்தனர். வறுமையிலும் விருந்தோம்பல் நடைபெற்றுள்ளது. வறுமையுற்ற ஒருவன் முதல்நாள் தன்னிடம் வந்த விருந்தினரின் பசியைப் போக்கத் தன் வீரத்தின் அடையாளமான வாளையே விற்றுப் பசி போக்கிய நிகழ்வைப் புறநானூறு (புறம் : 316) குறிப்பிடுகிறது. எங்கிருந்தோ வரும் விருந்தினருக்கு அவர் மனங்கோணாமல் எவ்வாறு விருந்தளிக்க வேண்டும் என்பதைப் பொருநராற்றுப்படை விளக்குகிறது. நண்பனைப்போல விருந்தினரிடம் உறவு பாராட்டவேண்டும்; இனிய சொற்களைப் பேச வேண்டும்; கண்ணில் காணும்படி தனக்கு நெருக்கமாக கன்றிடம் பசு அன்பு காட்டுவதைப் போல, எலும்பே குளிரும்படி அன்பால் நெகிழ்ச் செய்ய வேண்டும் என்கிறது (பொருநராற்றுப்படை: 74 – 78). தொல்குடிச் சமூக அமைப்பில் எத்தகைய உணவாயினும் அதனைப் பிறருடன் பகிர்ந்துண்ணும் உயரிய பண்பையே காணமுடிகிறது.

இந்திரர் அமிழ்தம் இயைவ தாயினும்
இனிதெனத் தமியர் உண்டலும் இலரே (182)

எனப் புறநானூறு பேசும் வாழ்வும் தொல்குடி மக்களின் வாழ்வும் வேறுவேறல்ல எனலாம். பின்னாளில் தமிழ் இலக்கியங்களில் வியந்து பேசப்பட்ட கொடை என்னும் ஒரு செயல்பாடு, இந்த விருந்தோம்பலின் ஒரு நீட்சியேயாகும். கொடையில், கொடுத்தவன் பெயரை வியந்து போற்றுவது உண்டு. விருந்தோம்பலில் இவ்வழக்கம் சிறிதுமில்லை. பசி போக்குதல் என்னும் எளிய விழுமியமாகவே விருந்தோம்பல் இருந்துள்ளது. எனவே தான், பெருஞ்செல்வர்களாய் இல்லாத எளிய மக்களும் தம்மைத் தேடி வந்தவருக்கு உணவளித்துத் தம்மிடமுள்ளதைக் கொடுத்துப் பகிர்ந்துண்டும் மகிழ்ந்தும் வாழ்ந்துள்ளனர். புல்லால் வேயப்பட்ட குடிசைகளில் வாழ்ந்த எளிய மக்களின் விருந்தோம்பலை மலைபடுகடாம் (434 - 443) வியந்துபேசுகிறது.

விருந்தோம்பல் என்பதின் அடிப்படையே பசி போக்கல் என்பதாகத்தான் உள்ளது. அனைத்தையும் அனைவருக்குமானதாகப் பகிர்ந்தளிக்கும் பொதுப்பண்பையே விருந்தோம்பலாகச் சங்கப்பாடல்கள் சிறப்பிக்கின்றன. இது தொல்குடிப் பண்பாட்டில் விளைந்த அரியதொரு விழுமியமாகும்.

**6. மூத்தோரை மதித்தல்**

தொல்குடிச் சமூகத்தில் மூத்தோர், செல்வமாகக் கருதப்பட்டனர் அவர்களின் அறிவும் அனுபவமும் அச்சமூகத்திற்குப் பயன்பட்டன. மூத்தோரின் வாய்ச்சொற்களைக் கேட்டுக் கேட்டுத் தமக்குள் சில நியதிகளை அவர்கள் உருவாக்கிக்கொண்டனர். தம் பிறப்புக்கும் வளர்ப்புக்கும் காரணமான பெற்றோரைப் போற்றல், சமூகத்தில் தாம் முன்னிலைக்கு வர உதவியவர்களை மதித்தல் என்பதாகப் பழஞ்சமூகங்களில் மூத்தோரை மதிக்கும் பண்பாடு உருக்கொண்டது.

மூத்தோரை மதிக்கும் தொல்குடிப் பண்பாடு என்பது, அவர்களின் அனுபவ வளங்களைத் தமதாக்கிக் கொள்வதாகும். தொல்குடிச் சமூகத்தில் மூத்தோருக்கெனத் தனித்ததொரு இடமிருந்தது. நற்செயல்களை முன்னிருந்து நடத்துகிறவர்களாகவும் நீதி வழங்குபவர்களாகவும் அனுபவ ஆசான்களாகவும் பூசல்களைத் தவிர்ப்போராகவும் மூத்தோர் விளங்கினர். மூத்தோர் வணங்கப்பட்டனர்.

அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல் (குறள் : 441)

மூத்தோரான அறிவுடையோரின் நட்பை விரும்பி ஏற்கவேண்டும் என்கிறது திருக்குறள். பெரியோரைத் துணையாகக் கொள்வதையும் திருக்குறள் முதன்மைப்படுத்துகிறது. ஆராய்ந்து மூத்தோர் கூறும் தீர்ப்புகள் சரியானவையாக இருக்கும் எனப் பொது மக்கள் நம்பினர். சிறுவனான கரிகால்வளவனின் தீர்ப்பு எப்படி இருக்குமோ என நினைத்தவர்களின் உள்ளக்குறிப்பை உணர்ந்துகொண்ட மன்னன் கரிகாலன், முதியவனாய் வேடம் பூண்டு வந்து தீர்ப்பு வழங்கினான். இதைப் பழமொழிப் பாடலால் (21) அறிகிறோம். சுருங்கக்கூறின், மூத்தோரையும் அவர்களின் வழிகாட்டல்களையும் எந்தச் சமூகம் கொண்டாடுகிறதோ, அந்தச் சமூகமே பெருஞ்சிறப்படைகிறது எனலாம்.

**7. உயிர்கள் மீது அன்பு செலுத்துதல்**

உயிர்நேயம் என்பது தொல்குடிப் பண்பாடாகும். உயிர்களிடம் இரங்கும் நிலவுடைமையாளரின் உயிர்ப்பரிவு என்பது, பொதுநோக்குடன் அன்பு செய்யும் தொல்குடியினரின் உயிர்நேயத்திலிருந்து கிளைத்ததாகும். இயற்கையோடு இயற்கையாக இயைந்து வாழ்ந்த தொல்குடிச் சமூகத்தில் உயிர்களை நேசித்தல் என்பது எதிர்பார்ப்புகள் ஏதுமற்ற இயல்புணர்வச் செயல்பாடாகும் குளம்வெட்டி, காட்டை அழித்து நாடாக்கிய நிலவுடைமையாளருக்குப் பெருமிதம் பேணும் பண்பார்ந்த நடத்தையாகும். மற்ற உயிர்களின் துணையின்றி மனிதன் மட்டும் தனித்தியங்கமுடியாது என்பதை அவன் உணரவேண்டும். இத்தகைய உயிர்நேய உணர்வு, தொல்குடிகளிடம் நிறைந்திருந்தது.

தொல்குடி வேளாண் சமூகத்தில் பல்லுயிர்களின் பங்களிப்பு போற்றப்பட்டது. தம்மோடு இணைந்து, தமக்கான உணவினையும் பிறவற்றையும் பெற்றுத்தரும் உயிர்களின் இன்றியமையாமையை தொல்குடியினர் உணர்ந்திருந்தனர். எனவே அவற்றையும் தம்மைப் போலவே எண்ணினர். தம்மோடு அவற்றையும் இணைத்துக்கொண்டனர். பால்வளம் சுரப்பதையும், எருமைகளின் எண்ணிக்கை பெருகுவதையும் ஐங்குறுநூறு காட்டுகிறது. முதுமையின் காரணமாக மேய்ச்சல் நிலம் தேடிச்செல்ல இயலாத முதிய பசு, அருகிலுள்ள பயிரை மேய்ந்துவிடுகிறது. மக்கள் அதனை அடித்து விரட்டவில்லை, அதன்மீது இரக்கப்பட்டு அதற்குக் கரும்பை உணவாகத் தருகின்றனர். இதனை அகநானூறு (150) காட்டுகிறது.

தொல்குடிச் சமூகத்தில் மாடுகளே செல்வங்கள்; மாடுகளின் உழைப்பால் வரும் பயனைத் துய்ப்பதோடு; அவற்றின் நோயையும் வருத்தத்தையும் உணர்ந்திருந்தனர். தொல்குடி மக்களின் இத்தகைய உயிர்நேயம் நம்மை வியக்கவைக்கிறது. பிறிதின் துன்பத்தைத் தம் துன்பம்போல் கருதிக் களையத் துடிக்கும் தொல்குடிப் பண்பாடு, இன்றும் நாம் பின்பற்ற வேண்டிய உயர்ந்ததொரு விழுமியமாகும். சிறிய உயிர்களே ஆயினும் அவற்றுக்கும் தேவையான உணவினைத் தொல்குடி மக்கள் வழங்கினர். அவர்களின் பார்வையில் உயிர்கள் என்பவை, மனிதர்களைப் போலவே பசியும் வருத்தமும் நோயுமுடையவை. எனவே, எறும்புகளுக்கு உணவிடுவதும், பறவைகளுக்குச் சோறிடுவதுங்கூடத் தொல்குடிகளுக்குத் தவிர்க்கவியலாத

கடமைகளாயின. காக்கைக்கும் சோறிட வேண்டிய கடப்பாட்டினை நற்றிணைப் பாடலால் (258) அறிகிறோம்.

வலிமையற்ற சிறுவிலங்குகளையும் மக்கள் பாதுகாத்தனர்; உப்பு வணிகரான உமணர்கள் தம் குழந்தைகள்போலக் கருதிக் குரங்குகளையும் வளர்த்தனர். ‘மகாஅர் அன்ன மந்தி’ என்ற அடி, தம் குழந்தைகளைப் போலவே குரங்குகளையும் உமணர்கள் எண்ணியமையைக் காட்டுகிறது. இச்செய்தியைச் சிறுபாணாற்றுப்படை (55 - 61) பதிவு செய்துள்ளது.

இயற்கையோடு இயற்கையாகத் தொல்குடி மக்கள் வாழ்ந்தனர்; அவர்களுக்கு வேண்டியவர் வேண்டாதவர் என்ற பேதமில்லை; யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற பொதுநோக்கு அவர்களின் உடைமையாயிருந்தது.

**கூடி உண்ணல்**

கூடியுழைப்பதும், கூட்டுழைப்பால் வரும் உணவைப் பொதுவில் வைத்துப் பகிர்ந்துண்பதும் தொல்குடிச் சமூகத்தனி தனிச்சிறப்பாகும். வேட்டையாடலும் வேளாண்மையும் விழாக்களும் தொழில்களும் கூட்டுழைப்பாலேயே சாத்தியமாயின. மிகப்பெரும் உடலுழைப்பால் அன்றாட வாழ்வை அவர்கள் நடத்தினர். எல்லாருக்கும் வேட்டை கிடைப்பதை உறுதிப்படுத்தமுடியாத சூழலில், கிடைத்த உணவைக் கிடைக்காதவருடன் பகிர்ந்துண்டனர். கூட்டுழைப்பும் கூடி உண்ணலும் கூட்டுப்பொறுப்பும் பிரிக்கமுடியாத அங்கங்களாய்த் தொல்குடி வாழ்வில் படிந்திருந்தன.

கூட்டுழைப்பால் பெற்ற உணவினை எத்தகைய ஏற்றத்தாழ்வுமின்றிச் சமமாகப் பகிர்ந்துண்டனர் என்கின்றார் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார். (பெரும்பாணாற்றுப்படை: 134 – 138).

கூட்டுழைப்புவழி வரும் உணவைக் கூடியுண்ணும் தொல்குடியின் பொதுமைப்பண்பு, வியக்கவைக்கும் பெருமிதப் பேருணர்வாகும். இந்தப் புராதனப் பொதுவுடைமைப் பேருணர்வுதான், தொல்குடிகளின் அரசியல் அமைப்பைக் குழந்தைக்குரிய எளிமையினும் எளிமையான ஒரு படைப்பாக்குகிறது என்கிறார் ஏங்கல்ஸ். (தேவிபிரசாத் சட்டோபாத்யாயா, உலகாயதம், தமிழில்: எஸ். தோதாத்ரி, ப. 285)

1. **உலகை விரும்பல்**

தொல்குடிமக்கள் இந்த உலக வாழ்வைப் பெரிதும் விரும்பிப் போற்றினர்; இந்த உலகில் உண்டும் உறங்கியும் உடுத்தும் ஆடியும் பாடியும் கூடியும் கலந்தும் களிப்பதைவிட வேறு இன்பமில்லை என்ற உண்மையைத் தம் வாழ்வுவழி அவர்கள் கண்டறிந்தனர்; இங்குள்ள யாவும் மெய் என்றும், இதைத் தவிர வேறு உண்மை இல்லை என்றும் வாழ்ந்தனர். இன்பமும் துன்பமும் கலந்த இவ்வுலக வாழ்வுக்கு உவப்பனவற்றை மட்டும் ஏற்று இனியன கண்டு மகிழ்ந்தனர்; உலகியல்

இன்பங்களைத் துய்ப்பதில் ஒருபோதும் அவர்கள் அயர்வடையவில்லை இல்லிருந்து இன்பம் துய்ப்பதன்றிப் பிற செல்வங்கள் எதுவும் பெரிதல்ல என்றுணர்ந்திருந்தனர்.

முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வார்இருங் கூந்தல் வயங்கு இழைஒழிய
வாரேன், வாழிய நெஞ்சே

(பட்டினப்பாலை : 218 - 220)

என்னும் பாடலடிகள் குறையற்ற சிறப்புகள் வாய்ந்த பட்டினத்தையே பரிசாகத் தந்தாலும் பெரிய கூந்தலை உடைய தன் துணைவியைப் பிரிய விரும்பாத தலைவனை நமக்குக் காட்டுகின்றன.

இத்தகைய மகிழ்ச்சியான உலக வாழ்வை விரும்புவதற்கும், நரைதிரையின்றி நெடுநாள் வாழ்வதற்குமான வழியைப் பிசிராந்தையாரின் புறநானூற்றுப் பாடல் (191) காட்டுகிறது.

இவ்வாறு, உலகை விரும்பிய தொல்குடிமக்கள், வாழ்வின் நன்மைகளைப் பெருக்கிக் கொள்வதற்காகப் போர் செய்வதையும் கூட ஒரு வாழ்வறமாகக் கொண்டிருந்தனர். போர் வெற்றியின் மூலம் கிடைக்கும் புகழ், வாழ்தல் பற்றிய அவர்களின் வேட்கையை வளர்த்தது. போரின்

வெற்றிகளைப் பாடி ஆடிக் கொண்டாடினர். இவ்வாறு உலக வாழ்வில் வரும் புகழை விரும்பி ஏற்றலும், வெற்றியைத் துய்த்துக் களிப்பதும் தொல்குடிகளின் இயல்பாகும்.

இவ்வுலகு இனிமையானது என்பதால், புதிதாய் ஓர் உயிர் இவ்வுலகுக்கு வரும்போது தனிப்பெரும் மகிழ்வோடு அதை வரவேற்றுக் கொண்டாடினர். மன்னனான அதியமான் நெடுமான் அஞ்சியும் தனக்கு மகன் பிறந்துள்ள செய்தியைக் கேட்டுத் தன் போர் உடையையும் களையாமல் வந்து சினம் குறையாமல் சிவந்த கண்களால் அவனைக் கண்டு பெருமிதப்பட்டதாகப் பாடுகிறார் ஔவையார் (புறம் : 100).

இவ்வாறு தந்தையின் சிவந்த கண்ணால் உற்றுநோக்கப்பட்ட குழந்தை எதிர்காலத்தில் பெருவீரனாய்த் திகழ்வான் என்பது வீரர் நம்பிக்கையாகும். இத்தகைய வீரர்கள் தம் கூட்டத்திற்காக வாழ்ந்து மடிவதே பிறப்பின் பெரும்பயன் என்ற வாழ்வறத்தைக் கொண்டிருந்தனர்.

புகழ் எனில் உயிரையும் கொடுப்பதும், பழி எனில் உலகமே கொடுக்கப்பட்டாலும் அதை ஏற்க மறுப்பதும் முதுகுடிப் பெருமிதமாக இருந்தது.

**நிறைவுரை**

தொல்குடி மக்களின் வாழ்வியல் விழுமியங்களே மாபெரும் அறங்களாக அமைந்தமையை இப்பாடப்பகுதி தெளிவுபடுத்தியுள்ளது. அவர்தம் வாழ்வியல் கூறுகளான பெண்களைப் போற்றல், மக்கட்பேறு, இயற்கை வழிபாடு, நடுகல் வழிபாடு, விருந்தோம்பல், மூத்தோரை மதித்தல், உயிர்கள் மீது அன்பு செலுத்துதல், கூடி உண்ணல், உலகை விரும்பல் ஆகியவை இலக்கியச் சான்றுகளின் வாயிலாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

**பூமி புனிதமானது**

1854-இல் அமெரிக்க அதிபராக இருந்த ஃபிராங்க்ளின் பியர்ஸ்க்குச் (1804 – 1869) செவ்வியந்தியத் தலைவனான சியட்டில் (1786 – 1866) எழுதிய சூழலியம் பேணும் கடிதத்தின் ஒளிக்கீற்றுகள்.

“நாங்கள் பூமியின் ஒரு பகுதி பூமி எங்களுடைய ஒரு பகுதி. வாசனைப்பூக்கள் எங்களுடைய சகோதரிகள் மானும், குதிரையும், பருந்தும் எங்களுடைய சகோதரர்கள். பாறைச்சிகரங்களும். புல்வெளிகளில் ஊற்றெடுக்கும் சுனைகளும். குதிரையின் உடல் வெப்பமும். மனிதனும் - எல்லாம் ஒரே குடும்பம். நதிகள் எங்களுடைய சகோதரர்கள். அவை எங்கள் தாகத்தைத் தணிக்கின்றன. நதிகள் எங்களுடைய படகுகளைச் சுமக்கின்றன. எங்களுடைய குழந்தைகளை ஊட்டி வளர்க்கின்றன. குளத்தின் முகத்தில் வீசும் காற்றின் மெல்லிய ஓசையும், மத்தியான மழையில் கழுவப்பட்டு வரும் அதன் வாசனையும், பைன் மரங்களிடமிருந்து பெற்ற நறுமணமுமே ஒரு செவ்வியந்தியனுக்குப் பிரியமானவை. சுவாசிக்க முதல் மூச்சைத் தந்த காற்றிலிருந்துதான் எங்களுடைய மூதாதை கடைசிப் பெருமூச்சையும் உள்ளிழுத்தார். விலங்குகள் இல்லாமல் என்ன மனிதன்? எல்லா விலங்குகளும் இந்தப் பூமியிலிருந்து போய்விடுமானால், மனிதன் தனிமையில் இறந்து போவான். விலங்குகளுக்கு நேர்வதுயாவும் தாமதமின்றி மனிதனுக்கும் நேரிடும். எல்லாம் ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ளவை. எங்களுடைய உடன்பிறந்தவர்களின் வாழ்க்கையால் வளமாக்கப்பட்டது இந்தப் பூமி என்று உங்கள் குழந்தைகளுக்குச் சொல்லுங்கள். பூமிக்கு எது நேர்ந்தாலும். அது பூமியின் பிள்ளைகளுக்கும் நேரிடும். நிலத்தின் மீது துப்பும்போது மனிதன் தனது உடம்பின் மீதே துப்பிக்கொள்கிறான்.

பூமி மனிதனுக்கு உரிமையானதன்று; பூமிக்குரியவன் மனிதன் என்பது எங்களுக்குத் தெரியும். குருதி ஒரு குடும்பத்தை ஐக்கியப்படுத்துவதுபோல எல்லாம் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டிருக்கின்றன. பூமிக்கு எது நேர்ந்தாலும் அது பூமியின் பிள்ளைகளுக்கும் நேரிடும். வாழ்க்கை வலையை நெய்தவன் மனிதனல்லன். அவன் அதில் வெறும் கண்ணி, வலைக்குச் செய்வது எதுவாயினும் அதைத் தனக்கே அவன் செய்து கொள்கிறான்.

அமெரிக்காவின் வாசிங்டன் மாநிலத்தில் உள்ள மேற்குக்கடலோரத் துறைமுகநகரமான சியட்டில் (Seattle), கிங்கவுண்டியின் தலைமையிடம். இந்த நகரம், அமெரிக்கப் பழங்குடியினத் தலைவரான ‘சியட்டில்’ பெயரால் வழங்கப்படுகிறது.

காட்டுக்கு வந்துவிட்டால் எல்லாம் மறந்துபோகும். அடிவானில் மறையும் நீலநிறமலைகளைக்

கண்டு கனவுகளில் ஆழ்ந்துவிடுவான். இக்கனவுகளில் தன்முன்னோரைக்காண்பான். வெள்ளத்தில் கரைபுரண்டு ஓடும் ஆற்றைக்கடந்து வருகிறார்கள். மின்னலின் பளீர் வெளிசத்தில் பளபளக்கும் குமரிக்காட்டின் நாற்புறமும் கறுப்புக்கைகள் நீட்டிச்சொல்கிறார்கள். இதெல்லாம் நம்முடையது மழைத்தண்ணீர் அவர்கள் முகங்களில் வழிந்து விழுகிறது. ஆற்றுநீர் அவர்களது காலடியில் சரணடைகிறது. குமரிக்காட்டைக் காவல் காக்கும் ஒரு பிரம்மாண்டமான யானை வானத்தை நோக்கித் தும்பிக்கையைத் தூக்கி அவர்களை வரவேற்கிறது. காட்டில் தனியாக இருக்கும்போது அவன் தன்னை மறந்துவிடுவான். அதனால்தான் அவன் சொன்னான், 'இது என்னோட காடு!'

மகாசுவேதா தேவி, காட்டில் உரிமை,
சாகித்திய அக்காதெமி
பரிசுபெற்ற வங்க நாவல்,
தமிழில்: சு. கிருஷ்ணமூர்த்தி

## அலகு 7
## அறவியலின் இயல்பும் அறச்செயல்களும்

### நுழைவு வாயில்

பொதுவாகக் குணம் நாடிக் குற்றமும் நாடிச் செய்யத் தகுந்ததும் செய்யத் தகாததுமான செயல்களை இனங்கண்டு ஏற்பதும் விலக்குவதும் அறமாகக் கருதப்படுகிறது. மனித நடத்தையை அளப்பதற்குச் சமன்செய்து சீர்தூக்கும் கோலாகப் பயன்படுவதுடன், மக்கட்பண்பையும் அறிவுத்திறனையும் இணைப்பதற்கும் அறம் உந்துவிசையாகிறது. பொருளும் இன்பமும் மட்டுமல்ல அறிவும் அறத்தாலேயே வரவேண்டும். அப்போதுதான் மக்களின் பண்புநலன்களும் குன்றின் மேலிட்ட விளக்காகும். இத்தகைய அறம் அனைத்து வகை உயிர்களுக்கும் இன்றியமையாததாகும். இதுவும் அன்பையே அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

> ‘‘என்பில் அதனை வெயில்போலக் காயுமே
> அன்பில் அதனை அறம்’’ (குறள் 77)

எலும்பில்லாத புழுவை வெயில் உறுத்துவது போல அன்பில்லாத உயிர்களை அறம் உறுத்தும் என்கிறார். இந்த உறுத்தலுணர்வைத் தவிர்க்க வேண்டுமானால் மனத்துக்கண் மாசிலாத அறநிலைக்கு மனிதன் உயரவேண்டும் என்பதும் அவர் கருத்தாகும்.

### அறவியல் சொல் விளக்கம்

அறவியல் என்பது ஆங்கிலத்தில் ‘Ethics’ அல்லது ‘Moral Philosophy’ என அழைக்கப்படுகிறது. ‘Ethics’ என்ற சொல், ‘Ethos’ என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து தோன்றியதாகும். ‘Ethos’ என்ற சொல்லிற்கு ‘வழக்கம்’ என்பது பொருள். ‘Moral’ என்ற சொல், ‘Mores’ என்ற இலத்தீன் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். இச்சொல்லிற்கு, மரபு என்று பொருள். எனவே, அறவியல் என்பது, மக்கள் தொன்று தொட்டுத் தமது வாழ்க்கையில் பயன்படுத்திய சில வாழ்வியல் நெறிமுறைகளைப் பற்றியது என்பதை அறிய முடிகிறது.

### அறிவியல் வரையறை

அறவியல் என்பது, மனிதச்செயல்கள் மற்றும் நடத்தையின் தரத்தைப் பற்றியதாகும். மக்கள் அன்றாட வாழ்க்கையில் உரையாடும்போது ஒருவன் நல்லவன், ஒருவன் தீயவன் என்றும், ஒருவன் செய்தது மிகவும் சரிதான் என்றும், ஒருவன் இப்படிச் செய்திருக்கக்கூடாது என்றும் வேறுபட்ட கருத்துகளைக் கூறுகின்றனர். இவ்வாறு கூறும்போது மனிதச் செயல்கள் பற்றி, ஒவ்வொரு மனிதனுக்கும் கருத்துகள் இருப்பதை அறிகிறோம். இக்கருத்துகள் ஒரு பொது அறவரையறைக்குள் கொண்டுவரப்பட்டு விளக்கப்படுவதையே அறவியல் என்கிறோம். மனிதனது குறிக்கோள் பற்றியும், அக்குறிக்கோளின் அடிப்படையில் அவனது செயல்கள் மற்றும் நடத்தைகள் அமையவேண்டியது பற்றியும் அறவியல் பேசுகிறது. அது தனிமனித நடத்தைகள் அனைத்தும் உயரிய பண்புநலன்களின் அடிப்படையில் அமையவேண்டும் என்றும் வற்புறுத்துகிறது.

தனிமனித வாழ்க்கையுடன் சமூக வாழ்க்கையையும் அறவியல் வரையறை செய்துள்ளது. நமது சமூகத்தில் கணவன் - மனைவி, பெற்றோர் - பிள்ளைகள், ஆசிரியர் - மாணவர் எனப் பல்வேறு நிலைகளில் மனிதர்கள் இணைந்து வாழ்கிறார்கள். இப்படி வாழும்போது அவர்களுக்குரிய கடமைகளைச் சில ஒழுங்குமுறைகளுடன், சமூக விதிகளுக்கு உட்பட்டுச் செய்திருக்கிறார்களா என்றும், அவர்களின் நடத்தை சரியா? தவறா? என்றும் அறிவியல் ஆராய்கிறது.

### அறிஞர்களின் கருத்துகள்

**சின்ஹா** – ‘அகநிலை அறப்பண்பு மற்றும் நடத்தை பற்றிய அறிவியல்’

**மெக்கன்ஸி** – ‘மனித நடத்தையில் எது சரியானது அல்லது எது தவறானது, எது நன்மையானது அல்லது எது தீமையானது, என்பது பற்றிய படிப்பு’

**அரிஸ்டாட்டில்** - ‘அறவியல் என்பது, நன்னடத்தை மூலமாக நற்செயல்களை உரிய நேரத்தில் செய்வித்து மனிதனை நல்வழிப்படுத்துவதுதான்.

**பாட்டர் ஸ்டிவர்ட் :** எதைச் செய்வதற்கு உனக்கு உரிமையுள்ளது என்பதற்கும், எந்தச் செயல் செய்வதற்குரியது என்பதற்குமான வேறுபாட்டை அறிவது அறவியலாகும்.

**இமானுவேல் காண்ட்** : ஒரு மனிதன் பிறர் உரிமைகளில் தலையிடுவது என்பது சட்டப்படி குற்றமாகும். ஆனால் பிறர் உரிமைகளில் தலையிட நினைப்பதே அறவியல்படி குற்றமாகும்.

**ஆல்பர்ட் சுவைட்சர்** : மனச்செம்மையை அடைவதற்குரிய ஆளுமைமிக்க மனிதச் செயல்பாடே அறவியலாகும்.

**வின்டன் மார்கலிஸ்** : சட்டங்களை விட அறங்களே மேலானவை.

**ஔவையார்:**
செல்வமுள்ளபோது வறியோருக்கு வழங்கியும், செல்வமில்லாதபோது உள்ளதை உடனுண்டும் வாழ்வது மானுட அறமாகும். (புறம் : 95)

**புத்தர்:** செயலே வாழ்வாகும்; செயலின்றி வாழ்வில்லை; பிறருக்குத் தீங்கு தரும் செயல்களைத் தவிர்க்கவேண்டும்; அனைவருக்கும் நன்மையளிக்கும் செயல்களையே செய்ய வேண்டும்.

**வள்ளுவர்** : மனித வாழ்வின் உறுதிப் பொருள்கள் அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்பர். இவற்றுள் வீடுபேற்றைத் தனியாகத் திருவள்ளுவர் கூறவில்லை. முதலில் மனிதன் அறவழியில் நிற்கவேண்டும் என்றும், அந்த அறத்தின் அடிப்படையில் பொருளீட்ட வேண்டும் என்றும், அறவழியில் ஈட்டிய நற்பொருள் மூலமே இன்பம் நுகரவேண்டும் என்றும் கூறுகின்றார்.


### அறவியலின் இயல்பும் பணியும் (Nature of Ethics)

அன்றாட வாழ்க்கையில் மனிதர்களின் நடத்தைகள் மற்றும் செயல்களை மதிப்பிட்டு, அவை சரியா? தவறா? என்று கூறுவதே அறவியலின் இயல்பாகும். பொதுவாகத் தனி மனிதர்களின்

> **அறமும் சட்டமும்**
> “அறம் தனிமனிதப் பண்பினை உயர்த்தும் வகையில் சமுதாய இன்பத்தை வளர்க்கிறது. சட்டம் சமுதாய நலனைக் காக்கும் வகையில் தனிமனிதனின் நடத்தையை ஒழுங்குறச் செய்கிறது. “நன்மையைச் செய்ய வேண்டும்” என்று அறம் கூறுகிறது. “தீமையைச் செய்யாதே” என்று சட்டம் தடுக்கிறது. அறம் காரணங்காட்டி மக்களை நல்வழிப்படுத்துகிறது. சட்டம் கட்டாயப்படுத்தி அவர்களை நல்வழி நிறுத்துகிறது. அறம் அறிவுறுத்துகிறது. சட்டம் அச்சுறுத்துகிறது. மக்களின் சிந்தனையை உயர்த்துகிறது. அறம், செயல்களைத் திருத்துகிறது சட்டம். மக்கள் மனதிலே இயல்பாயெழுவது அறம். மக்களால் இயற்றப்பெறுவது சட்டவிதி. அறம் மாறாத நெறியினைக் கொண்டது. சட்டம் மாறும் விதிகளைக் கொண்டது.

நடத்தைகள், மரபுகள் அல்லது அறநெறிகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்து உரிய தீர்வுகளை வழங்குவதே அறவியலின் பணியாகும்.

### அறவியல் ஓர் அறிவியல் (Ethics as a Science)



## அறிவியல்

ஒரு குறிப்பிட்ட பொருளையோ அல்லது குறிப்பிட்ட நிகழ்ச்சியையோ எடுத்துக்காட்டி விளக்கம் கேட்க முற்பட்டால், அதனோடு இணைந்த எல்லாச் செய்திகளையும், ஒருவகை ஒழுங்கமைப்பினுள் தருகின்ற அறிவே அறிவியல் ஆகும் (Science is an organized or systematized knowledge). இவ்வகையில் ஒழுங்குபடுத்தப்பட்ட நெறிமுறைகளின் தொகுப்பான அறவியலும் ஓர் அறிவியலே எனலாம்.

## அறிவியல் முறை

ஒருவகை ஒழுங்கமைப்பினுள் வேண்டாத செய்திகளை நீக்கி, வேண்டிய செய்திகள் எல்லாவற்றையும் முறையாக இணைத்துத் தருவது அறிவியலின் முறையாகும். ஓர் இலையைக் கொடுத்தால், அறிவுடையவன், அந்த இலையைப் பற்றிய எளிய சில செய்திகளை மட்டுமே கூறமுடியும். ஆனால், தாவரவியல் அறிஞனோ, அந்த இலையைப் பற்றிய முழுமையான செய்திகளை ஓர் ஒழுங்கமைப்பினுள் அமைத்துத் தந்துவிடுவான். அவ்வாறே அறவியலும், மனிதனுடைய எந்தச் செயலையும் விளக்க முற்படும்போது, அச்செயலைச் சரி தவறு, நன்மை தீமை, என்ற அடிப்படை ஒழுங்கமைப்பினுள் அதை அமைத்துக்காட்டும். எனவே, அறவியலும் அறிவியல் நோக்குடையதே ஆகும்.

## அறவியல்: ஓர் உயர்நிலை அறிவியல்

சில செயல்கள் ஏன் இப்படிச் செய்யப்பட வேண்டும் என்பதற்கோ விடைகளைக் காண, உயர்நிலை அறிவியல் அல்லது மேல்நிலை அறிவியல் தேவைப்படுகிறது. அளவையியல் (Logic), அழகியல் (Aesthetics), அறவியல் (Ethics) என்ற இம்மூன்றும் உயர்நிலை அறிவியலைச் சேர்ந்தவை.

நல்ல சிந்தனை எப்படி இருக்க வேண்டும் என அளவையியல் விளக்க முற்படுவது போலவே, நல்ல அழகு எப்படி இருக்க வேண்டும் என அழகியல் விளக்க முற்படுவது போலவே, நல்ல நடத்தை எப்படி இருக்க வேண்டும் என விளக்க முற்படுவது அறிவியலின் அடிப்படையாகும்.

தனிமனிதனின் செயல் அல்லது நடத்தை என்பதை எடுத்துக்கொண்டால், சமூகவியல் (Sociology) அறிஞர்களும். மானிடவியல் (Anthropology) அறிஞர்களும், உளவியல் (Psychology) அறிஞர்களும் மனித நடத்தைகளைப் பற்றியே ஆராய்கின்றனர். எனவே, சமூகவியல்

| வ.எண் | உயர்நிலை அறிவியல் | நேர்நிலை அறிவியல் |
|---|---|---|
| 1. | ஏன்? எதற்கு? எப்படி? என்ற வினாக்களை எழுப்புவதை அடிப்படையாகக் கொண்டது | என்னவெல்லாம் இருக்க வேண்டும், இவையெல்லாம் இப்படித்தான் செயல் பட்டாக வேண்டும் என்ற விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டது |
| 2. | மதிப்பீடுகள் பற்றியது | உண்மைகளைப் பற்றியது |
| 3. | நிகழ்வுகளின் அடிப்படையில் தீர்வு காணப்படுகிறது | ஆராய்ச்சியின் அடிப்படையில் தீர்வு காணப்படுகிறது. |
| 4. | மாறும் மனநிலையை அடிப்படையாகக் கொண்ட மனிதனைப் பற்றிய ஆய்வு ஆகும். எனவே, திட்டவட்டமாகத் தீர்ப்புக் கூற இயலாது | மாறும், மாறாத்தன்மையுள்ள புறப்பொருள்களின் ஆய்வு என்பதால் திட்டவட்டமாகத் தீர்ப்புக் கூற இயலும். |

முதலான இவையும் அறிவியல் அடிப்படை கொண்டவையே எனலாம். ஆனால், அழகியல், அளவைவியல், மானிடவியல், சமூகவியல், அறவியல் ஆகிய இந்த ஐந்து இயல்களும் மனிதனைப் பற்றி விளக்கினாலும், அறிவியல் இவற்றிலிருந்து சிறப்பாக வேறுபடுகின்றது. நேர்நிலை அறிவியல் உண்மைகளை மட்டுமே முன்வைக்கிறது. எனினும் அறவியல் முதலியன, ஏன்? எதற்கு? எப்படி? என அக்கால நிகழ்வுகளை அறிவியல் கண்கொண்டு மதிப்பீடுகளை முன்வைக்கின்றன. அதனால் இவை உயர்நிலை அறிவியல் எனப்படுகின்றன.

அளவையியல், மானிடவியல், சமூகவியல், அறவியல் ஆகிய இந்த ஐந்து இயல்களும் மனிதனைப் பற்றி விளக்கினாலும், அறிவியல் இவற்றிலிருந்து சிறப்பாக வேறுபடுகின்றது. நேர்நிலை அறிவியல் உண்மைகளை மட்டுமே முன்வைக்கிறது. எனினும் அறவியல் முதலியன, ஏன்? எதற்கு? எப்படி? என

அக்கால நிகழ்வுகளை அறிவியல் கண்கொண்டு மதிப்பீடுகளை முன்வைக்கின்றன. அதனால் இவை உயர்நிலை அறிவியல் எனப்படுகின்றன.

**நேர்நிலை அறிவியல்**

ஒரு பொருள் குறிப்பிட்ட இயல்புகளைக் கொண்டுள்ளது என்பதையும், குறிப்பிட்ட வகையில் செயல்படுகிறது என்பதையும், புலனறிவு மூலமாக ஆராய்ந்து விளக்குவது நேர்நிலை அறிவியல் ஆகும். விலங்கியல் (Zoology), தாவரவியல் (Botany), இயற்பியல் (Physics), வேதியியல் (Chemistry) போன்றவற்றை நேர்நிலை அறிவியலுக்கு எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம்.

**அறவியல் பயிற்று தரும் நிறுவனங்கள்**

1. **குடும்பம்**

மனித உயிர்களிடையே இயல்பாக அமைந்த அன்பு என்ற உயர்ந்த உணர்வின் அடிப்படையில் சமுதாயத்தின் மூலக்கருவாக, அமைவதே குடும்பம் ஆகும். மிகப்பழங்காலம் முதல் இன்றுவரையில், சமுதாயத்தின் முதன்மைப் பயிற்சி நிலையமாகக் குடும்பமே விளங்குகிறது.
மனித வரலாற்றில் குடும்பமே முதல் நிறுவனமாக விளங்குகிறது. இக்குடும்பம், பாரம்பரியம் மற்றும் பழக்கவழக்கங்களைப் பயிற்றுவிக்கும் சமுதாய நிறுவனமாகும்.

2. **கல்வி நிறுவனங்கள்**

குடும்பத்துக்கு அடுத்தநிலையில், தனிமனிதனை நல்லறப் பயிற்சியில் ஈடுபடுத்துவன கல்வி நிறுவனங்களாகும். கல்வி நிறுவனங்கள் தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களையும் உள்ளடக்கியவையாகும். இவற்றின் வாயிலாக ஒழுக்கம்,

| |
|---|
| கணவன், மனைவி, குழந்தைகள் ஆகிய உறுப்பினர்களைக் கொண்டதே குடும்பம். அது குழந்தைகளின் உடல், உள்ளம், அறிவு, அறம், ஆன்மீகம் ஆகியவற்றின் தேவைகளை நிறைவு செய்யும் நிறுவனமாகும். இத்தகைய குடும்பத்தில் நிலவும் அமைதி நாட்டிலும் பிரதிபலிக்கும்; குடும்பத்தில் அமைதி நிலவாவிடில் சமூகத்திலும் அதன் எதிரொலிகள் கேட்கும். எனவே, ஒரு சமூகத்தின் நல்வாழ்வுக்கும் பொது அமைதிக்கும் குடும்பம் ஒரு குறியீடாகிறது எனலாம். |

கட்டுப்பாடு மற்றும் பிற நற்பண்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன.

**கல்வி நிறுவனத்தின் பயன்கள்**

- முன்னோர்களின் அனுபவக் கருத்துக் கருவூலங்களை எடுத்துக்காட்டித் தன்னைக் காத்துக்கொள்ளவும், வாழ்க்கையில் சிறப்படையச் செய்யவும் கல்வி நிறுவனமே பயிற்சி அளிக்கிறது.

- தனித்தன்மையை வளர்த்துக்கொள்ளவும், ஒற்றுமை, பொறுமை, நிதானம், அன்பு போன்ற நற்பண்புகளை வளர்க்கவும் கல்வி நிறுவனம் உதவுகிறது.

- பலன் கருதாது கடமையைச் செய்ய வேண்டும் என்ற உயரிய உணர்வு, சகிப்புத்தன்மை, இன்னாசெய்யாமை, வாய்மை, பணிவு, ஒழுக்கம், முதலியவற்றைப் பின்பற்றி வாழும் முறைகளைப் பயிற்றுவிப்பதும் கல்வி நிறுவனமேயாகும்.

- சமநோக்கு, துணிவு போன்ற நல்லொழுக்கப் பண்புகளைப் பெறுவதற்குப் கல்வி நிறுவனம் வழிவகை செய்கிறது.
  அறவாழ்வின் பெருமையையும், மகிழ்ச்சியாக வாழ்வதற்குரிய வழிகளையும் பயிற்றுவித்துச் சமுதாயத்தில் மாணவர்கள் சிறப்பதற்குக் கல்வி நிறுவனங்கள் உதவுகின்றன.

3. **குடிமைப்பயிற்சி நிறுவனங்கள்**

தனிமனிதன் ஒரு சமுதாயத்தின் உறுப்பினனாக, ஒரு நாட்டின் நற்குடிமகனாக அமையவேண்டும் என்றால், அவன் குடிமைப்பயிற்சியையும் கல்வி நிறுவனப் பயிற்சியையும் பெறுவதோடு மட்டுமல்லாமல், நல்ல குடிமகனாக விளங்கும் தன்மையையும் உறுதி செய்யவேண்டும்.

குடிபெயர்ந்து ஒரு நாட்டில் வாழும் அனைவரும், குடியுரிமை பெறத் தகுதி பெற்றவராவர். குடியுரிமை பெற்றவர் குடிமைப்பண்பு பெறுவது அவர்தம் தலையாய கடமையாகும். சமுதாயத்தின் அறநெறிக் கட்டுப்பாட்டு விதிகளும். அரசாங்கத்தின் சட்ட விதிகளும் குடிமைப்பண்பு பெற வழிகாட்டியாக விளங்குகின்றன.

அரசியல் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றி அறியவும், யாவரிடத்திலும் எளிமையோடு பழகவும், அன்புடையவராக இருக்கவும், அறிவினும் உயர்ந்த மக்கட்பண்புகளை வளர்த்துக்கொள்ளவும் குடிமைப் பயிற்சி நிறுவனங்கள் உதவுகின்றன.

| |
|---|
| அன்பு, அடக்கம், அறிவு, அறம், ஒழுக்கம், பண்பு, நடுவுநிலைமை, வாய்மை, வெகுளாமை, கொல்லாமை, நாணம், நகை, ஈகை, இன்சொல், பிறரை இகழாமை, பொறையுடைமை, அழுக்காறாமை போன்றவற்றின் ஒன்றுபட்ட நிலையே குடிமைப் பண்பாகும் என்பதைத் திருக்குறள் வழி அறியலாம். |

**சிறந்த குடிமக்களின் பண்புகள்**

ஒரு நாட்டின் சிறந்த குடிமக்களாகத் திகழப் பின்வரும் பண்புகள் இன்றியமையாதனவாகும்.

- உண்மையான நாட்டுப்பற்று
- சிறந்த கல்வியறிவு
- கடின உழைப்பு
- சகிப்புத்தன்மை
- உதவும் மனப்பான்மை
- மனிதநேயம்
- அகப்புறத்தூய்மை
- பொது அறிவு
- நேர்மையாக வரிகளைச் செலுத்துதல்
- வாக்குரிமையைச் சரியாகப் பயன்படுத்துதல்

4. **தொழில் நிறுவனங்கள்**

குடும்பம், கல்வி நிலையம், குடிமைப்பயிற்சி நிறுவனம் ஆகிய மூன்றும் இயல்பான அன்பின் பிணைப்பினால் செயல்படுகின்றன. ஆனால், தொழிற்கூடங்கள் ஒப்பந்த அடிப்படையில் செயல்படுகின்றன.

தனிமனிதனின் தனித்திறமைகள் வெளிப்படுவதற்குரிய வாய்ப்புகளைத் தொழிற்கூடங்கள் அமைத்துத் தரவேண்டும். அவரவர் திறமைகள் வெளிப்படுவதற்குரிய வாய்ப்புகளைப் பாகுபாடின்றி வழங்குவதற்குத் தொழிற்கூடங்கள் முன்வரவேண்டும். அப்பொழுதுதான் ஒருவன், தொழில் வேறுபாட்டையும் திறமை வேறுபாட்டையும் இணைத்துக்கொண்டு முன்னேற முடியும். தொழில் நிறுவனங்கள் ஒழுக்கம், காலம் தவறாமை, விதிமுறைக்குக் கட்டுப்பட்டு நடத்தல் போன்ற இன்றியமையாத பிற பண்புகளைப் பின்பற்றவும் கற்றுத்தருகின்றன எனலாம்.

5. **அரசமைப்பு நிறுவனங்கள்**

பிற அறவியல் பயிற்சி நிறுவனங்கள் எல்லாவற்றையும் வழிநடத்தும் ஆற்றல் பெற்றவையாக அரசமைப்பு நிறுவனங்கள் உள்ளன.

தொன்றுதொட்டு வரும் மக்கள் சமுதாயத்தின் அடிப்படை அறக்கோட்பாடுகள், புறத்தூண்டல்களால் அழியாமல் காப்பதும் அதற்குரிய சட்டங்களை இயற்றுவதும் இவற்றின் பணிகளாகும். இவை பிற நிறுவனங்களைக் காட்டிலும் மேலான அதிகாரங்களைக் கொண்டவையாகும். இவை தனிமனிதன் தன் உரிமைகளை அறிய உதவவேண்டும் அவற்றைப் பாதுகாக்க வேண்டும். எல்லா வாய்ப்புகளையும் எல்லோரும் பெறப் பாடுபடவேண்டும். சமுதாயத்தில் மனிதனை எல்லா நிலையிலும் வளர்ச்சியடையச் செய்வதும் அரசமைப்பு நிறுவனங்களின் அடிப்படையான பணியாகும்.

''உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு'' (குறள் : 734)

என்று, உடலுயிரை வருத்தும் பசியும், தீராத நோயும், அழிக்கும் பகையும் இல்லாத நாடே சிறந்த நாடாகும் என்கிறார் வள்ளுவர். மேலும் அவர்,

''நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு'' (குறள் : 739)

என செல்வம்தேடித் தன் மக்களைப் பிற இடங்களில் அலைய விடாதது நாடாகும் என்றும், அவ்வாறு அலையவிடுவது நாடன்று என்றும் அறிவிக்கிறார்.

குடும்பமும் ஏனைய அறப்பயிற்சி நிறுவனங்களும் தனிமனிதனை அறமுள்ளவனாக வளர்ச்சியடையச் செய்கின்றன. இவை, காலத்தையும் இடத்தையும் கடந்த எல்லையற்ற உலகளாவிய அறவியல் வாழ்வினைப் பற்றி அறிந்து கொள்ளவும் தன்னை மேம்படுத்திக்கொள்ளவும் மனச்சான்றின்படி வாழவும் தனிமனிதனை நெறிப்படுத்துகின்றன எனலாம்.

### பழக்கம் (Habit)

கிரேக்கத் தத்துவ ஞானியான சாக்ரடீஸ், ''நல்லொழுக்க நற்பண்பு'' (Virtue) என்பது, உயர்நிலை அறிவுடைமை என்று கூறினார். அவருக்குப் பின்வந்த அரிஸ்டாட்டில், 'நல்லொழுக்க நற்பண்பு என்பது, நல்ல பழக்கங்களை நமது வாழ்வில் நிலையாகக் கடைப்பிடித்து ஒழுகுவதே' என்று கூறினார். இவ்விரு கிரேக்க அறிஞர்களின் கூற்றுகளும் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கவை. இவற்றின் சாரம் ஒன்றுதான். நல்ல பழக்கங்களைக் கண்டறிந்து நிலையாகக் கடைப்பிடிப்பதால் பண்புகள் மேம்படுவதுடன் அறிவாற்றலும் வளரும் என்பது தான்.

ஏற்றுக்கொண்ட செயல்களைப் பலமுறை திரும்பத் திரும்பச் செய்யும்போது அவை பழக்கமாக மாறிவிடுகின்றன. ஒருவயதுக் குழந்தை நடக்கத் தொடங்கும்போது முதலில் சிறிது தடுமாறுகிறது. சில முறை கீழேயும் விழுகிறது. ஆனால், பலமுறை நடந்தபின் அது பழக்கமாக மாறி இயல்பாகிவிடுகிறது. எந்தச் செயலும் பழக்கமானபின், இயல்பாகவே நம் மனம், அதில் ஈடுபட்டுவிடுகிறது.

நற்செயல்களைச் செய்வதென்பது ஒரு பழக்கமாக மாறி, மனித மனத்தில் நற்சிந்தனையாகும் போது தான், உண்மையிலேயே, மனிதன் அறப்பண்புள்ளவன் ஆகிறான். நற்செயல்களைச் செய்வதில் ஒருவிதமான மகிழ்வும் ஈடுபாடும் மனிதனுக்குக் கிடைக்கின்றன. அரிஸ்டாட்டில், 'ஒரு மனிதன் நல்ல செயல்களைச் செய்வதில் மகிழ்ச்சியடைந்து நல்லவனாவதாகக் கூறுகிறார். எனவே, நற்செயல்களைச் செய்யும் பழக்கம் ஒருவனிடத்து வேரூன்றும்பொழுது, அப்பழக்கம் இயல்பானதாகிறது எனலாம்.

| |
|---|
| தமிழ்க்கலைக்களஞ்சியம் ''ஐரோப்பிய அறநூல் வரலாறு'' என்னும் தலைப்பில் பின்வரும் செய்திகளைத் தருகிறது.<br><br>''அறிவும் சிந்தனையும் சுய நிருணயமும் அறத்தின் உயிர்நாடிகள்''<br>– சாக்ரட்டீஸ்<br>''ஏற்புடைய சூழ்நிலையையும் சிறந்த அரசியல் திட்டத்தையும் அமைத்து உத்தம இலட்சியங்களைத் தருக்க முறையில் நிரூபணம் செய்து மக்களை அறவாழ்வில் ஈடுபடச் செய்ய வேண்டும்''. |

- பிளாட்டோ

''ஞானம், தன்னடக்கம், தைரியம், நியாய உணர்ச்சி'' இவை அறத்தின் வேர்கள்''

- அரிஸ்டாட்டில்

**நடத்தை (Conduct)**

விரும்பியேற்ற செயல்களும், பழக்க வழக்கங்களுமே நடத்தை எனப்படும். நடத்தை நிலையில் மனமும் உடலும் ஒருங்கிணைந்து இயல்பாகச் செயல்படுகின்றன.

இந்நிலையில், ஒரு மனிதனின் நடத்தையில், அவனது அகப்பண்புகள் அனைத்தும் வெளிப்படுவதால், நடத்தையை ஒரு மனிதனின் ஆளுமையைத் தீர்மானிக்கும் கருவியாகக் காணலாம். நடத்தை என்பது ஒரு மனிதனின் ஓரிரு செயல்களை மட்டும் குறிப்பதில்லை. அவன் வழக்கமாகச் செய்யும் எல்லாவகைச் செயல்களையும் பொறுத்தே நடத்தை தீர்மானிக்கப்படுகிறது.

**அறப்பண்பு (Character)**

அறப்பண்பு என்பதைப் பற்றிய ஆய்வு, அறவியலில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. அறப்பண்பின் முக்கியத்துவத்தைப் பின்வரும் ஆங்கிலத்தொடர்கள் வலியுறுத்துகின்றன என்கிறார் பில்லிகிரகாம்.

ஒருவர் உடைமையை இழக்கும் போது, எதையும் இழப்பதில்லை;
ஒருவர் உடல்நலத்தை இழக்கும் போது, எதையோ இழக்கிறார்;
ஒருவர் பண்பை இழக்கும் போது, அனைத்தையும் இழக்கிறார்.
When wealth is lost, nothing is lost;
When health is lost, something is lost;
When character is lost everything is lost.

மனித வாழ்க்கையில் எந்த அளவுக்குப் பண்புடைமை முக்கியத்துவம் பெற்றிருக்கிறது என்பது, இத்தொடர் மூலம் அறியப்படுகிறது.

நமது எண்ணம், சொல், செயல் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பே அறப்பண்பாகும். சிலவகைச் செயல்களைப் பழக்கமாகச் செய்யும்போது, அச்செயல்களுக்குப் பின்னே இருக்கக்கூடிய நல்மனப்பாங்கு அறநிலையாக கருதப்படுகிறது இந்நிலையில், நல்வழியில் செல்லும் ஒருவன மனம் முழுவதுமாக அறப்பண்பு உடையதாகிறது. இப்பண்பு, அவனது ஒவ்வொரு செயலிலும் வெளிப்படுகிறது. குடும்பத்திலும் சமூகச்சூழலிலும், வளர்ந்தவிதத்திலும் கற்றுக்கொண்டவற்றிலும் தாக்கம் செலுத்திஅறப்பண்பை உருவாக்குகின்றது.

ஒவ்வொரு செயலும் நமது உள்மனத்தில் ஓர் ஆழமான பாதிப்பை உண்டாக்குவதால், நமது நடத்தையும் அறப்பண்பை உருவாக்குவதில் பங்கேற்கிறது.

**அறவியலும் பிற சமூக அறிவியல்களும் (Ethics and other Social Sciences)**

அறவியல் என்பது ஓர் உயர்நிலை அறிவியல் என்று அறிந்தோம். அறவியல் ஓர்

'சமூகவியல்' (Sociology) என்ற சொல்லைப் பிரெஞ்சு நாட்டுத் தத்துவ அறிஞரும், சமூகவியலாளருமான ஆகஸ்தே காம்தே (Auguste Comte) (1798 – 1857) என்பவர், முதன் முதலில் உருவாக்கிப் பயன்படுத்தினார்.

அறிவியல் என்ற வகையில், அது எவ்வாறு பிற சமூக அறிவியல்களுடன் தொடர்பு கொண்டுள்ளது என்பதை இப்பகுதியில் காண்போம்.

**அறவியலும் சமூகவியலும் (Ethics and Sociology):**

அறவியல் என்பது, மனிதனின் ஒழுக்கத்துடன் தொடர்புடையாகும். அறவியல் மனிதனுக்குத் தேவையான நன்னடத்தை முறைகளையும், விதிகளையும் உருவாக்கியுள்ளது.

“ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்” (குறள் : 131)

என்கிறார் வள்ளுவர். சமூக அறிவியலும் அறவியலும் இணைந்து, மக்களின் செயல்முறைகளை ஆராய்ந்து, அவை எற்கக்கூடியவையா? பயன்தரக் கூடியவையா? என்று முடிவு செய்கின்றன. சமூகவியலுக்கும் அறவியலுக்கும் சில வேறுபாடுகள் உள்ளன. சமூகவியலில் உள்ள எல்லாச் சிக்கல்களையும் அறவியலின் அடிப்படையில் விளக்கவியலாது. எனவே, ஒரு சிக்கலைச் சமூகவியல் ஏற்றுக்கொண்ட அதேநோக்கில், அறவியலும் ஏற்கவேண்டியதில்லை எனலாம்.

சமூகவியல் என்பது, சமூகத்தைப் பற்றி ஆய்வு செய்யும் ஓர் அறிவியல் ஆகும். ஒவ்வொரு தனிமனிதனும் சமூகத்தின் அங்கம் என்பதால், சமூகவியல் அறவியலோடு மிக நெடுங்கிய தொடர்பு கொண்டுள்ளதாகக் கூறலாம்.

ஒவ்வொரு தனிமனிதனின் நடத்தையும் சமூகத்தில் எதாவது ஒருவிதமான விளைவைத் தோற்றுவிக்கவே செய்கிறது. பெரும்பாலும் தனிமனிதனின் செயல்கள், சமூக மரபுகள் மற்றும் பழக்கவழக்கங்களின் தாக்கத்தினால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

தனிமனிதன் தனித்துச் செய்யும் செயல்களைவிடச் சமூகத்தின் அங்கமாயிருந்து அவன் செய்யும் செயல்களையே அறவியல் கருத்தில் கொள்கிறது. எனவே, அறவியல் ஆய்வுகளுக்கும் சமூகவியல் ஆய்வுகளே அடித்தளங்களாக அமைகின்றன.

### அறவியலும் மானுடவியலும் (Ethics and Anthropology)

மானுடவியல் என்பது, மனித இனத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி ஆராய்கின்றது. அறவியல் என்பது, சில மானுடவியல் மரபுகளின் அடிப்படையில் அமைகின்றது. எனவே, மானுடவியலின் ஆராய்ச்சி முடிவுகள், அறவியலுக்கும் பெரிதும் உறுதுணையாய் உள்ளன எனலாம்.

மிகப்பழங்காலம் தொட்டு, மனிதச் சமுதாயம் பலவகையான மரபுகளையும் நம்பிக்கைகளையும் கடைப்பிடித்து வந்துள்ளது. இவற்றில் சில மரபுகளும் பழக்கவழக்கங்களும் தீய விளைவுகளைத் தோற்றுவித்தாலோ, அல்லது தேவையற்ற பயன்களை அளித்தாலோ அவை கை விடப்படுகின்றன என்பதை மானுடவியல், ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மரபுவழி அறவியல் கோட்பாடுகளை நாம் வடிவமைத்து ஏற்றுக்கொள்ளும் முன்னர், மானுடவியல் ஆய்வுகளின் முடிவுகளைக் கருத்தில் கொள்வோமானால், அறவியலில் பயனற்ற பல கோட்பாடுகளைத் தவிர்க்கலாம். இவ்வகையில் மானுடவியல் அறவியலோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது.

### அறிவியலும் உளவியலும் (Ethics and Psychology)

உளவியல் என்பது மனித மனத்தைப் பற்றிய ஆராய்ச்சியாகும். மனித மனத்தில் நிகழும் மாறுதல்களைப் பற்றியும், மனிதச் செயல்களுக்குப் பின்னணியாக அமையும் உணர்ச்சிகள் மற்றும் அறிவாற்றல் பற்றியும் உளவியல் ஆராய்கின்றது. மனித நடத்தைகள் யாவும் பல்வேறு மனநிலைகளின் வெளிப்பாடுகளேயாகும். மனிதச் செயல்கள் யாவுமே தொடக்கத்தில் எண்ணமாக எழுந்து, பின்னரே செயல்வடிவத்திற்கு வருவதால், உளவியலுடன் அறவியலுக்கு நெருங்கிய தொடர்புள்ளதாகக் கூறலாம்.

மனித உணர்ச்சிகளாகிய காமம், குரோதம், ஆசை, அச்சம், பசி, இரக்கம் முதலியன மனிதனுடைய செயல்களை ஏதாவது ஒருவிதத்தில் பாதிக்கின்றன. எனவே, உளவியல் அறிவு, அறவியல் ஆராய்ச்சிக்கு மிகத் தேவையான ஒன்றாகிறது.

அண்மைக்காலங்களில் உளவியலில் சமூக உளவியல் (social Psychology) நடத்தைசார் உளவியல் (Behavioural Psychology) என்ற இருபிரிவுகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. சமூக உளவியல், ஒரு சமூகம் தனிமனிதனின் மனநிலையை எவ்விதத்தில் பாதிக்கின்றது என்பதைப் பற்றியும், தனிமனிதனின் உள்ளத்தில் எழும் உணர்ச்சிகள் சமுதாயத்தில் எத்தகைய விளைவுகளைத் தோற்றுவிக்கின்றன என்பதைப் பற்றியும் ஆராய்கின்றது. நடத்தைசார் உளவியல், சமுதாயத்தால் கட்டுப்படுத்தப்படும் தனிமனிதப் பழக்கவழக்கங்களைப் பற்றி ஆராய்கின்றது. உளவியலின் இவ்விரு பிரிவுகளுமே, அறவியல் ஆராய்ச்சியில் முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன.

## அறவியலும் தத்துவவியலும் (Ethics and Philosophy)

அறவியலுக்கும் தத்துவவியலுக்கும் இடையில் உள்ள தொடர்பைப் பற்றி மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன. ஹெகல் (Hegal) மற்றும் கிரீன் (Green) போன்றவர்கள், தத்துவவியலை அடிப்படையாகக் கொண்டே அறவியல் அமைவதாகக் கருதுகின்றனர். ஆனால், ராஸ்டல் (Rashdall) போன்றவர்கள், அறவியலை அடிப்படையாகக் கொண்டே தத்துவவியல் அமைவதாகக் கூறுகின்றனர். இந்த விவாதம் ஒருபுறம் தொடர்ந்தாலும், அறவியலும் தத்துவவியலும் மிக நெருங்கிய தொடர்புடையவை என்பதில் மாற்றுக்கருத்தில்லை. கீழ்க்கண்ட கருத்துகளின் அடிப்படையிலும் இதை விளக்கலாம்.

- அறக்கருத்துகள் யாவும் சமுதாய நடத்தைகள் வழியே உருவாக்கப்பட்டுள்ளன.
- உயிர், உலகம், இறைவன் பற்றிய கருத்துகளை ஆராய்வதும், அவை பற்றி விரிவாக விளக்க முனைவதும் தத்துவவியலின் அடிப்படையாகும்.
- அறிவியல் என்பது அறிவியல் மதிப்பீட்டைக் கொண்டுள்ளது. தத்துவவியல் அந்த அறிவியல் மதிப்பீட்டை முறைப்படுத்துகிறது.
- தத்துவவியல் உலகத்திற்கும் மனிதனுக்குமான தொடர்பை விளக்குகிறது. அறவியலோ, மனிதனின் மனச்சான்றுடன் விவாதிக்கிறது.
- அறவியல் தீர்ப்பு என்பது, முழுமையானதும் தெளிவானதும் நேரிடையானதும் ஆகும்.
- கடவுளுக்கும் மனிதனுக்குமான தொடர்பையும், உலகத்திற்கும் சமுதாயத்திற்குமான தொடர்பையும் அறிந்துகொள்ளத் தத்துவவியல் உதவுகிறது. எனவே, மனிதனை நெறிப்படுத்தும் அறவியலுக்கும், மனிதத்தேடல்களை ஊக்குவிக்கும் தத்துவவியலுக்கும் இடையே நெருங்கிய தொடர்புள்ளது எனலாம்.

### ஒழுக்கத்தின் அடிப்படை விதிகள்

கடவுளை ஏற்கும் தத்துவவியலாளர்கள், ஒழுக்கத்தைச் சமூகத்தில் நிலைநிறுத்துவதற்குப் பயன்படும் அடிப்படை விதிகளாகப் பின்வரும் மூன்றைச் சுட்டுகின்றனர்.

1. பற்றுறுதி சுதந்திரம் (Freedom of Will)
2. உயிரின் இறவாத்தன்மை (Immortality of Soul)
3. கடவுளின் இருப்பு (Existence of God)

### பற்றுறுதி சுதந்திரம் (Freedom of will)

பற்றுறுதி சுதந்திரம் என்பது, மனிதனின் தீர்மானங்களுக்கும் செயல்களுக்கும் பின்புலமாகி, அவற்றை இயக்கும் 'மன ஆற்றல்' ஆகும். இந்த ஆற்றல், அனைத்து மனிதர்களிடத்தும் காணப்படுகிறது. மனிதன், தன் விருப்பப்படி எவ்விதக் கட்டுப்பாடுமின்றிச் சுதந்திரமாக இயங்கினால் மட்டுமே அவன் செய்யும் செயலுக்கு அவனைப் பொறுப்பாக்க முடியும்.

| |
|---|
| இந்திய, சீன மற்றும் ஈரானியத் தத்துவங்களைப் போலவே, கிரேக்கத் தத்துவமும் தொன்மையானதாகும். கிரேக்கத் தத்துவ உலகில் குறிப்பிடத்தக்கவராகத் திகழ்பவர் சாக்ரடீஸ் கி.மு. (பொ.ஆ.மு) 470 – 399 ஆவார். அவரைத் தொடர்ந்து இருவர் தத்துவ உலகிற்குப் பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளனர். ஒருவர் சாக்ரடீஸின் மாணவர் பிளாட்டோ, கி.மு. (பொ.ஆ.மு) 428 – 348) மற்றவர் பிளாட்டோவின் மாணவர் அரிஸ்டாட்டில் கி.மு. (பொ.ஆ.மு) 384 – 322. |

ஒரு செயலைச் செய்வதற்குப் பல வழிகள் இருந்தபோதிலும், மனிதன் அவற்றுள் தனக்கு பிடித்ததையே தேர்ந்தெடுத்துச் செயல்படுகின்றான். இதனையே 'பற்று உறுதி சுதந்திரம்' என்கிறோம்.

இந்தச் சுதந்திரத்தைப் பயன்படுத்தி ஒருவன் செயலாற்றும்பொழுது, பிறருடைய சுதந்திரத்தைப் பாதிக்காதவகையில் அச்செயல் அமைய வேண்டும். இதற்கு மனிதனின் பகுத்தறிவு உறுதுணையாக இருக்கிறது.

மரபான சமயங்கள் அனைத்தும், கடவுளே சுதந்திரமுள்ளவன், மனிதன் கடவுளுக்குக் கட்டுப்பட்டவனே என்கின்றன. கடவுளையும் மனிதனையும் பற்றிய இத்தகைய விவாதங்கள் இன்றுவரை அறவியல் வரலாற்றில் தொடர்கின்றன. இந்த விவாதங்களின் அடிப்படையில், பொதுவாக மூன்றுவகைக் கொள்கைகள் உருவாகியுள்ளன.

1. தீர்மானக் கொள்கை
2. தீர்மானிக்க இயலாத கொள்கை
3. தன் தீர்மானக் கொள்கை
4.

**1. தீர்மானக் கொள்கை**

மனிதனின் சுதந்திர மனநிலை, புறவுலகப் பொருள்களைப் போன்றே, இயற்கை விதிகளுக்கு உட்பட்டதாகும். குறிப்பாகக் காரண காரிய விதிகளுக்குக் கட்டுப்பட்டதாகும். சுதந்திர மனநிலை எவ்வழியில் செயல்படவேண்டும் என்பதை, அதற்கு அப்பாற்பட்ட சக்திகளும் தீர்மானிக்கின்றன. இதனையே, ''நீர்வழிப்படூஉம் புணைபோல் ஆருயிர் முறைவழிப்படும்'' என்கிறார் கணியன் பூங்குன்றனார். அதாவது, நீரில் மிதக்கும் தெப்பம் போல் உயிரும் முறை வழிப்படும் என்கிறார். இங்கு முறை என்பதைச் சிலா விதி என்றும், வேறு சிலர் நியதி என்றும் கருதுகின்றனர். விதி என்பதை இயற்கைக்கு அப்பாற்பட்டது என்றும், நியதி என்பதை இயற்கையின் ஒழுங்கமைவு என்றும் விளக்கலாம். இங்குச் செயல்களைச் செய்யும் வழியைத் தேர்வு செய்வதில் மனிதனுக்குப் பங்கில்லை என்றும், கடவுளும் விதியுமான மேல்நிலையாற்றல்கள் கூடிச் சுதந்திர மனநிலையின் போக்கைத் தீர்மானிக்கின்றன என்றும் பெரும்பாலான தீர்மானக் கொள்கையினர் கூறுகின்றனர். தீர்மானக் கொள்கையினரின் இக்கருத்து ஏற்புடையதன்று; இக்கொள்கைக்கு எதிராகப் பல வாதங்கள் உள்ளன.

**2. தீர்மானிக்க இயலாத கொள்கை**

அமெரிக்கத் தத்துவ அறிஞரான வில்லியம் ஜேம்ஸ் மற்றும் பிரெஞ்சுத் தத்துவ அறிஞரான ஹென்றி பெர்க்ஸோன் ஆகியோர், மனிதர்களது சுதந்திர மனநிலை நிபந்தனையற்றது என்றும், அதனால் தீர்மானிக்க இயலும் என்றும் வாதிடுகின்றனர். தேர்வு செய்யும் உரிமையைப் பகுத்தறிவு மனிதனுக்கு வழங்கியுள்ளது என்பதால், மனிதனுக்கு முழுச்சுதந்திரம் உண்டு என்கின்றனர். இக்கொள்கையின்படி, தீய இயல்புடையவர்கள் தாம் விரும்பிய வழிகளில் தவறிழைக்க வாய்ப்புண்டு என்பதால், இந்த வாதத்தை முழுமையாக ஏற்கமுடியாது எனலாம்.

**3. தன் தீர்மானக் கொள்கை**

மேலே விவாதிக்கப்பட்ட இரு கொள்கைகளுமே, எதிரெதிர்த் தத்துவநிலைகளை விளக்குகின்றன. இவ்விரண்டுமே ஏற்றுக்கொள்ள முடியாதவையாக அமைந்துள்ளமைக்குக் காரணங்கள் கூறப்பட்டன. எனவே, இவ்விரு கொள்கைகளுக்கும் நடுவுநிலையாக ஒரு கொள்கை தேவைப்படுகின்றது. அவ்வகையில் அமைந்ததே தன் தீர்மானக் கொள்கையாகும்.

தன் தீர்மானக் கொள்கையாளர்கள், மனிதனின் சுதந்திரநிலை புறவுலகில் உள்ள எதனாலும் தீர்மானிக்கப்படவில்லை; மாறாகத் தன் செயல்களை மனிதனே தீர்மானிக்கிறான் என்பர். குறிப்பிட்ட செயலைத் தேர்ந்தெடுத்த பின், அச்செயலின் எல்லா விளைவுகளுக்கும் தேர்ந்தெடுத்தவனே பொறுப்பேற்க வேண்டியிருக்கிறது. (எ.கா) ஒரு மாணவன் மேல்நிலைப்பள்ளியில் எந்தப் பாடத்தைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்பதில் அவனுக்குச் சுதந்திரம் இருந்தாலும், ஏதாவது ஒரு பாடத்தைத் தேர்ந்தெடுப்பதால் பின்னர் அவனது பட்டப்படிப்பு எத்துறையில் இருக்க வேண்டும் என்பதும், அந்தத் தன் தேர்வினாலேயே தீர்மானிக்கப்பட்டு விடுகிறதல்லவா

எனவே, மனிதனின் செயல்நிலைக்கு ஒரு குறிப்பிட்ட எல்லைவரையே சுதந்திரம் உண்டு என்பதும், அதற்கப்பால் அது தன்கட்டற்ற தன்மையை இழந்துவிடுகிறது என்பதும் தெளிவாகிறது. தனக்குள்ள பகுத்தறிவின் துணைகொண்டு, ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுக்கச்

சுதந்திரம் இருப்பதால், மனிதன் விலங்குகளின்று மாறுபட்டு உயர்நிலையில் வைக்கப்பெறுகிறான். ஆனால், அவனது சுதந்திரத் தேர்வுக்கும் கடந்து செல்ல முடியாத சில எல்லைகளுண்டு. எல்லையற்ற சுதந்திரம் யாருக்கும் இங்கு இல்லை என்கிறது தன் தீர்மானக் கொள்கை.

**உயிரின் இறவாத்தன்மை**

உயிரின் இறவாத்தன்மை என்பது, மனிதன் இறந்தபின்னும் அவன் வாழ்கிறான் எனக் கருதி, இயற்கையிறந்த மேலாற்றல்களை நம்பும் ஆன்மக்கொள்கையை வலியுறுத்துகிறது. உயிரின் அல்லது ஆன்மாவின் எதிர்கால இருப்பை உறுதி செய்ய மனசாட்சியும் தேவை என்கிறார் கான்ட்.

கான்டின் கருத்துப்படி, உள்ளத்திலிருந்து எழும் உள்ளுணர்வின் ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் என்பது எல்லாவற்றிலும் உணர்ந்ததாகும். மேலை மற்றும் கீழை நாட்டுத் தத்துவக் கொள்கைகளில், உயிரின் இறவாத்தன்மை என்பது, ஒழுக்கத்தின் அடிப்படை விதியாகக் கருதப்படுகிறது. அதாவது, ஒழுக்கமுடைய உயிரே இறவாத்தன்மைக்கு உரியதாகிறது என்கின்றனர்.

**கடவுளின் இருப்பு**

அறவுணர்வு உடையோரின் மனநிலை வளர்ச்சியில் கடவுள் உயர்ந்த இடத்தில் இருக்கிறார். கடவுள் மிகவும் புனிதத்தன்மை மிக்கவராகவும். முழமை நிறைந்தவராகவும் அறியப்படுகிறார். கடவுள் மட்டுமே மனிதனின் அனைத்துச் செயல்களையும் உள்நோக்கங்களையும் அறிந்தவர் எனச் சமயங்கள் கருதுகின்றன. எனவே, அறத்தை நிலைநாட்டத்தனி மனிதர்களுக்குக் கடவுள் தேவைப்படுகிறார். அதேவேளையில், அறப்பண்புகளற்றுத் தீயவனாகச் செயல்பட்டால், கடவுள் தண்டிப்பார் என்ற அச்ச உணர்வும் கற்பிக்கப்படுகிறது.

**அறவியலின் இன்றியமையாமை**

கிரேக்க அறிஞரான அரிஸ்டாட்டில், மனிதனை ஒரு ‘சமூக விலங்கு’ (Man is a Social Animal) என்றும், ஆனால் ‘பகுத்தறிவுள்ள விலங்கு (Rational animal) என்றும் வரையறை செய்துள்ளார். காமம், பசி, அச்சம் போன்ற உடல் சார்ந்த உணர்ச்சிகள் மனிதனுக்கும் விலங்குகளுக்கும் பொதுவானவை. இந்த உணர்ச்சிகளின் அடிப்படையில் மட்டுமே மனிதன் செயலாற்றினால், அவனுக்கும் விலங்கிற்கும் அதிக வேறுபாடுகளைக் காண இயலாது. பகுத்தறிவுள்ள ஒரே காரணத்தினால், மனிதன் விலங்கினின்றும் வேறுபட்டு உயர்நிலையில் வைக்கப்படுகிறான். இப்பகுதித்தறிவை அவன் எவ்வகையில் பயன்படுத்தவேண்டும் என்பதை, அறவியல் கோட்பாடுகளே அவனுக்கு உணர்த்துகின்றன. கடவுளைக் கற்பிக்கும் சைவம், வைணவம், யூதம், கிறித்துவம், இசுலாம், சீக்கியம் எனச் சமயங்கள் பலவற்றிலும் அறக்கோட்பாடுகள் உள்ளன. எனினும், கடவுளின்றியே நல்லொழுக்கம்வழி மனிதன் அமைதியும் நிறைவும் பெறலாம் என்பதைச் சிறப்பாகச் சமண பௌத்த சமயங்களே வலியுறுத்துவதை, அவற்றின் தனித்தன்மையாகக் குறிப்பிடலாம்.

அறவியல் கோட்பாடுகளுக்குப் பௌத்தமும் சமணமும் இன்றளவிலும் உலகம் ஏற்கக்கூடிய அன்பு, நேர்மை, தூய்மை, சமத்துவம், ஒழுக்கம், இரக்கம், உண்மை, எனப் பல்வேறு அறநெறிகளின் பிழிவை அளித்துள்ளன. இது சிறப்பாகக் கருதத்தக்கதாகும்.

தனிமனித வாழ்விலும் சமூக வாழ்விலும், ஒரு முக்கிய இடத்தை அறவியல் கோட்பாடுகள் வகிக்கின்றன. தனிமனிதனின் உயர்வுகூட அவன் ஏற்றுக்கொண்ட அறநெறிகளைப் பொறுத்தே அமைகிறது என்பதையும், செம்மையான அறநெறிகளே ஒரு சமூகத்தின் ஒற்றுமை மற்றும் நிலையான தன்மையைப் பேணக்கூடியவையாய் உள்ளன என்பதையும், அறநெறியினின்றும் வழுவிய சமுதாயங்கள் யாவுமே நலிவடைந்தன என்பதையும் மனித வரலாறு நமக்கு எடுத்துரைக்கின்றது.

- மக்களிடம் தவறாகப் பரவிவிட்ட சில அறமற்ற பழக்கவழக்கங்களை நீக்கவும், அல்லது அறத்தோடு அவற்றை இணைக்கும்வகையில் மாற்றியமைக்கவும் அறவியல் அறிவு துணைபுரிகின்றது.

- மாறிவரும் சமுதாயச் சூழல்களுக்கேற்ப, உலக ஒருமைப்பாடு மற்றும் மனிதநேயக் கொள்கைகளின் அறச்சிறப்பை எடுத்துக்கூறிப் பொதுமைநிலையில் நின்று மனிதர்கள் செயல்பட அறவியல் அறிவே உதவுகிறது.

- இன்று உலகின் பல பகுதிகளிலும் உள்ள பல்வேறு பிரிவு மக்களிடத்தும் காணப்பெறும் அமைதியின்மை மற்றும் அறமல்லாச் செயல்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்தவும் அறவியல் அறிவே காரணமாகிறது.

- ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில், 'இதுதான் பொருந்தும்' என்று விரைந்து முடிவு செய்யவும், முடிவு செய்ததைச் செயல்படுத்தவும் அறவியல் அறிவு வழிகாட்டுகிறது.

- மானுடர்களுக்குச் சிறப்பையும் செல்வத்தையும் அளிக்கும் அறத்தைவிட நன்மையானது என்று வேறு எதுவும் இருக்கமுடியாது என்கிறார் வள்ளுவர்.

**அறச்செயல்களும், அறஞ்சாராச் செயல்களும் (Moral Actions and Non-Moral Actions)**
**அறச்செயல்கள் (Moral Actions)**

மனிதன் பல செயல்களில் ஈடுபடுகிறான். சமுதாயத்தோடு இணைந்து வாழும் மனிதனின் செயல்கள் சரியான வையா, தவறானவையா, நல்லவையா, கெட்டவையா. ஏற்புடையவையா, ஏற்பற்றனவா, சமுதாயத்தை நேர்முகமாகவோ மறைமுகமாகவோ பாதிக்கும் இயல்புடையனவா என்றெல்லாம் ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. அந்த ஆய்வுகளின் முடிவாகச் சமுதாயத்திற்குத் தீங்கு விளைவிக்காத செயல்கள் அனைத்தும் நற்செயல்களாகக் கொள்ளப்படுகின்றன. இவற்றையே அறச்செயல்கள் என்கிறோம்.

அறத்தினூங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு' (குறள்: 32)

என, ஒருவருடைய வாழ்க்கைக்கு அறத்தைவிட நன்மையானதும் இல்லை, அவ்வறத்தைப் போற்றாமல் மறப்பதைவிடத் தீமையானதும் இல்லை என்கிறார் வள்ளுவர்.

பகுத்தறிவின் அடிப்படையில் ஒருவன் விரும்பியேற்றுச் செய்யும் செயல், இடைவிடாப் பயிற்சியின் காரணமாகப் பழக்கமாகிறது. இந்த நற்பழக்கமே அறச்செயல் எனப்படுகிறது.

''ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்'' (குறள் : 33)

எனச் செல்லும் இடமெல்லாம் இயன்ற வகையில் அறச்செயலைச் செயல்படுத்தச் சொல்கிறார் வள்ளுவர்.

**அறஞ்சாராச் செயல்கள் (Non-Moral Actions)**

அறம் சார்ந்தவை மற்றும் அறம் சாராதவை எனச் செயல்களை வேறுபடுத்தும்போது, 'அறஞ்சாரா' என்ற சொல்லுக்கான பொருள் மிகவும் நுண்மையானதாகும். அறத்திற்கு எதிரான செயல் என, இதற்குப் பொருள்கொள்ளக்கூடாது. அறம் என்ற மதிப்பீட்டு வளையத்திற்குள் வராமல் அதற்கு வெளியில் நிற்கும் செயல்கள் எனப்பொருள் கூறவேண்டும்.

மதம்பிடித்த யானை, வண்டியைக் குடைசாய்க்கும் மாடு, மனநிலை பிறழ்ந்த மனிதன் போன்றோரின் செயல்களை 'அறஞ்சாராச் செயல்கள் என்ற வகைப்பாட்டிற்குள் அடக்கலாம்.

அறத்தின் அடிப்படையில் அளவிட முடியாத செயல்களை, 'அறஞ்சாராச் செயல்கள்' என்கிறோம். ஒரு குறிப்பிட்ட மனிதன், ஒரு குறிப்பிட்ட தருணத்தில் செய்யும் செயல்கள், அவனது அறிவினாலோ உணர்வினாலோ உந்தப்படாமல், என்ன நடக்கிறதோ இதை ஏன் செய்கிறோமோ என்று அவனே அறியாமல் அவனால் செய்யப்படும்போது, அத்தகைய தன்மறதிச் செயல்களுக்கு சரி, தவறு என்ற பழகிய முத்திரைகளைக் குத்தக்கூடாது. இத்தகைய முத்திரை குத்தப்படாத செயல்களே, அறஞ்சாராச் செயல்கள் எனப்படுகின்றன.

இடதுபுறம் வகிடெடுத்துத் தலை சீவுகிறவர்கள் அதிகமுள்ள ஒரு சமூகத்தில் ஒருவன் வலதுபுறம் வகிடெடுத்துத் தலை சீவினால் அவனது அச்செயல் கேலிக்குரியதாக இகழப்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் நிலவிவரும் அற மதிப்பீடுகளின் அடிப்படையில், இது இவ்வாறு

செய்யப்படுகிறது. ஆனால், வலதுபுறம் வகிடெடுத்துச் சீவியவன் எக்குற்றத்தையும் செய்துவிடவில்லை. பொதுப்பண்பாட்டிலிருந்து விலகியதாக அவன் செயல் உள்ளதாலேயே அவன் இகழப்படுகின்றான். அவ்வாறு அவனை இகழ்வது தவறாகும். இச்செயலை அவன் அனிச்சையாகவோ நனவிலி நிலையிலோ இகழ்வது தவறாகும். அச்செயலை அவன் அனிச்சையாகவோ நனவிலி நிலையிலோ செய்திருக்கலாம்; அத்தகைய செயலுக்கு நன்மை அல்லது தீமை என்ற மதிப்பீட்டை நாம் கற்பிக்க முடியாது. இவ்வாறு நன்மை தீமை கற்பிக்க முடியாத அற வரையறைக்கு வெளியில் நிற்கும் செயல்களையே 'அறஞ்சாராச் செயல்கள்' என்கிறோம்.

நம் வீட்டிற்கு வந்த விருந்தினர் ஒருவர், உணவு மேசையில் அமர்ந்திருக்கும்போது, மேசை மீதுள்ள தண்ணீர்க்குவளையைக் கைதவறித் தட்டிவிட்டுவிடுகிறார். நம்மை அவமதிக்கும் செயலாக, இதைக் கருதக்கூடாது. அத்தகைய நோக்கம் நமது விருந்தினருக்கு இல்லாத போது, அக்குற்றத்தை அவருக்கு நாம் கற்பிப்பது அறமாகாது. மதிப்பதும் அவமதிப்பதமான இந்த இரண்டு எல்லைகளையும் தாண்டித் தன்னிச்சையாக அவர் கைப்பட்டுக் குவளை கீழே விழுந்தது என்பது, அறஞ்சாராச் செயலுக்குச் சிறந்த சான்றாகும்.

ஒரு மனிதன் செய்யும் செயலில் நன்மையோ, தீமையோ இல்லை. அதைச் செய்யத் தூண்டும் அவனது நோக்கத்தில்தான் அதைக் காண வேண்டும். இருவர் ஒரே செயலைச் செய்கின்றனர். ஒருவனுக்கு உள்நோக்கம் உள்ளது, இன்னொருவனுக்கு அத்தகைய நோக்கம் ஏதும் இல்லை. உள்நோக்கம் கொண்டவனின் செயல் அறம் அல்லது அறமின்மையாகலாம். எந்த நோக்கமும் அற்றவனின் அனிச்சைச் செயலில் அறமோ அறமின்மையோ இல்லை என்பதை அறியவேண்டும்.

பெருங்கருணையால் தூண்டப்பட்டுப் பிச்சையிடுகிற ஒருவனுக்கும், பிச்சையிடுகிறோம் என்பதே தெரியாமல் திருவோட்டில் காசுபோடும் குழந்தைக்கும் வேறுபாடுள்ளது. முதல் செயல் அறமாகும். குழந்தையின் செயலில் எவ்வித அறநோக்கமும் இல்லை என்பது வெளிப்படையாகும். ஒரு மனிதனின் பெருமிதத்தை வளர்ப்பதாகவோ, அல்லது அவனைக் கீழ்மைப்படுத்துவதாகவோ, அறஞ்சாராச் செயல்கள் அமைவதில்லை. நனவிலியின் தூண்டுதலுக்கு உட்பட்டு அவை செய்பவனின் நோக்கமின்றியே நிகழ்கின்றன.

### நற்செயல் (Good Action):

ஒரு குழந்தை, தன் விரலை வாயில் வைத்துச் சுவைத்துக்கொண்டிருக்கிறது. இது அறிவோடு இணைந்த செயலா? அல்லது விரும்பி ஏற்ற செயலா? என்ற கேள்விக்கு, ஆய்ந்து விடை காண முற்படுவது அறவியலின் கடமையாகும்.

குழந்தை தன் விரலை வாயில் வைத்துச் சுவைக்கும்போது, அது அறிவுக்கு உட்படாத செயலே. ஆனால், பின்னர் அறிவினால் ஆராய்ந்து பார்த்துத் தவறு என்று தெரிந்துவிட்டால், அச்செயலைக் குழந்தை தவிர்த்துவிடும். தவறெனக் கண்ட பிறகும் தவிர்க்க இயலாவிடில், அது தீய பழக்கமாகும். ஒரு குறிப்பிட்ட செயலைக் கூர்ந்து நாம் சிந்தித்திருந்தால், அதைத் தவிர்த்திருக்க முடியும் என்ற கருத்து எழுமானால், அப்படித் தவிர்த்துவிடும் செயலே நற்செயலாகும்.

### விரும்பி ஏற்ற செயல் (Voluntary Action)

பகுத்தறிவும் செயல்திறனுமுள்ள ஒருவன், தன் குறிக்கோளைச் சரியானது இது என ஆராய்ந்து, இன்னது இது என வரையறை செய்துகொண்டு, அதை அடைய விரும்பிச் சுதந்திரமாகச் செய்வது விரும்பி ஏற்ற செயலாகும்.

### செயற்தூண்டலும் உள்நோக்கமும் (Motive and Intention)

உளவியல் அறிஞர்களின் கூற்றுப்படி, நாம் ஒரு செயலைத் தொடங்கி முடிப்பதற்குக் காரணமாகப் பல காரணிகள் இயங்குகின்றன. அவற்றுள் செயற்தூண்டலும் உள்நோக்கமும் இரண்டு முதன்மைக்காரணிகள் ஆகும். இவை எத்தகைய இயல்புடையன? எவ்வாறு செயல்படுகின்றன? என்பதை விரிவாக அறியவேண்டும்.

**செயற்தூண்டல் - விளக்கம்**

எந்த ஆற்றல் நம்மைச் செயலை நோக்கிக் குறிப்பிட்ட வழியில் செல்லுமாறு தூண்டுகின்றதோ, அதுவே செயற்தூண்டலாகும் (Motive). ஒரு செயலைத் தோற்றுவிக்கவும் நிறைவுசெய்யவும் உரிய

காரணமாகச் செயற்தூண்டல் அமைகிறது. செயல்களின் தன்மை, செயல்கள் நிகழும் இடம், காலம், செயலாற்றுவோரின் இயல்பு போன்றவற்றிற்குத் தக்கவாறு பல வகைகளில் செயற்தூண்டல் அமையும்.

இன்ப துன்பங்களே செயலின் உள்நோக்கங்கள் என்று கொண்டால், துன்பமே செயலைத் தொடங்கி வைப்பதாகவும் (நாட்டு நலனுக்காகத் தன் உயிரைப் போர்வீரன் தியாகம் செய்தல்), இன்பமே செயலை முடித்த வைப்பதாகவும் (பொருள் தேடி வெளிநாடு சென்றவர் தாய்நாட்டுக்குத் திரும்புதல்) கொள்ளலாம். இதற்கு எதிர்மாறாகத் துன்பமே முடிவாகவும் இன்பமே தொடக்கமாகவும் அமைவதும் உண்டு.

## உள்நோக்கம் (Intention)

செயற்தூண்டலைவிட உள்நோக்கம் விரிந்த பொருளுடையது. அது ஒரு செயலைச் செய்பவரது உள்நோக்கத்தை அடைவதற்கான வழிவகைகளையும் குறிப்பதாகும். (எ.கா) ஒரு மாணவன் நன்கு படிக்கிறான் என்றால், அதற்குப் பல காரணங்கள் உண்டு. நிறைய மதிப்பெண்கள் பெறவேண்டும், முதல் வகுப்பில் தேர்ச்சி பெறவேண்டும், பெற்றோரிடத்திலும், ஆசிரியர்களிடத்திலும் நல்ல பெயர் எடுக்கவேண்டும், நல்ல வேலையில் சேரவேண்டும், நிறையப் பணம் சம்பாதிக்க வேண்டும், நன்றாக வாழவேண்டும் போன்ற பல வகையான இலக்குகள் அவனது கடின உழைப்பிற்குக் காரணமாக அமைகின்றன. இவையாவுமே அவனது செயலின் நோக்கங்களாகம்.

பொதுவாகக் கூறுமிடத்து, உள்நோக்கம் என்பதைக் குறிக்கோள் எனலாம். ஒரு செயலின் முடிவுக்கான காரணம் என்றும் கூறலாம். இது பல்வேறு கூறுகளைத் தன்னுள் கொண்டுள்ளது.

செயற்தூண்டலைப் போன்றே உள்நோக்கமும் இடம், காலம், செயல் நிகழும் சூழ்நிலை, செயல் செய்பவரது மனநிலை போன்றவற்றிற்குத் தக்கவாறு அமைகிறது. இவற்றின் அடிப்படையில் உடனடி நோக்கம், நீண்டகால நோக்கம், குறிப்பான நோக்கம் எனப் பகுக்கலாம்.

1. **உடனடி நோக்கம்**

   உடனடி நோக்கம் என்பது, ஒரு செயலின் மூலம் அடையக்கூடிய உடனடிக் குறிக்கோளாகும். கல்லூரியில் சேர ஒரு மாணவன் விண்ணப்பப் படிவம் வாங்குதல் என்ற செயலின் உடனடிக் குறிக்கோள், உடனே அவன் கல்லூரியில் சேர்ந்துவிட வேண்டும் என்பதாகும்.

2. **நீண்டகால நோக்கம்**

   ஒரு மாணவன், நல்ல வளமான எதிர்காலத்தை தனக்கு அமைத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்புவது, நீண்ட காலப் பயன் தரும் ஒரு நோக்கமாகும்.

3. **வெளிப்படையான நோக்கம்**

   பள்ளிகளில் செயல்படுத்தப்படும் மதிய உணவுத் திட்டம், குழந்தைகளின் உடல்நலனைப் பேணும் என்பது வெளிப்படையான நோக்கமாகும்.

4. **குறிப்பான நோக்கம்**

   பள்ளிக் குழந்தைகளின் இடைநிற்றலைப் பள்ளிகளில் செயல்படுத்தப்படும் மதிய உணவுத் திட்டம் தவிர்க்கும் என்பது குறிப்பான நோக்கமாகும்.

### அறப்பண்புகளின் வளர்ச்சி

எண்ணம், சொல், செயல் ஆகியவற்றின் அடிப்படையில் மனிதன் தன்னைப் பண்பட்டவனாக மாற்றிக்கொள்வதை அறப்பண்பின் வளர்ச்சியாகக் கருதலாம். இத்தகைய தனிமனித அறவளர்ச்சி, அவனுடைய மனவளர்ச்சியைச் சார்ந்தே அமைகிறது. இத்தனிமனித அறவளர்ச்சியைப் பின்வரும் மூன்று நிலைகளில் விளக்கலாம்.

1. மரபொழுக்க நிலை,
2. இயல்பூக்க நிலை
3. மனச்சான்று நிலை

## மரபொழுக்க நிலை (Customary Morality):

ஒரு செயல் அல்லது குறிப்பிட்ட சில செயல்களைத் தலைமுறைகள்தோறும் மனிதன் பின்பற்றிவரும் நிலையே, மரபொழுக்க நிலையாகும். அறவியல் கொள்கைகள், பெரும்பாலும் மரபொழுக்கநிலையின் விளைவாகவே தோன்றியுள்ளன. நெடுங்காலமாகச் சமூகத்தில் நிலைப்பட்டுள்ள முன்னோர்களின் அறச்செயல்களைக் 'குடும்ப மனிதன்' வாழையடி வாழையாகப் பின்பற்றி வருகிறான். அவனுக்கும் அவனது வழித்தோன்றல்களுக்கும் அச்செயல்கள் நன்மை அளித்ததே, இதற்குக் காரணமாகும்.

**மரபொழுக்கநிலை: நிறைகளும் குறைகளும்**
**நிறைகள்**

1. தனிமனிதன் தன்னை அறம் சார்ந்தவனாக மாற்றிக்கொள்வதோடு மட்டுமல்லாமல், தன்னைச் சார்ந்த அனைவரையும் அறம் சார்ந்தவனாக உயர்த்திவிடுகின்றன.
2. சமுதாயத்துடன் இணைந்து செயல்படுதல், தொண்டு செய்தல் முதலான நற்பண்புகளை மனிதர்களிடம் மரபொழுக்கநிலை வளர்க்கின்றது.
3. மனிதர்களுக்கு இடையே பொதுவான மரபுகளே பின்பற்றப்படுவதால், அவர்களுக்கு இடையே உள்ள வேறுபாடுகள் களையப்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளன.
4. தனிமனிதன் ஒவ்வொரு சூழ்நிலையிலும் ஒரு செயல் சரியா? தவறா? என்று சிந்தித்துச் செயல்படாது, தன் குழுவின் மரபுகளை எளிமையாகக் கடைப்பிடிக்க, மரபொழுக்கநிலை உதவுகிறது.
5. மரபொழுக்கநிலையைக் கண்டிப்பாகப் பின்பற்றுவதன் வாயிலாக, மனிதர்கள் அனைவரும் ஒன்றுபடும் உயரிய சமூகம் உருவாக வாய்ப்புள்ளது.

**குறைகள்:**

மரபொழுக்கநிலையில் பல நன்மைகள் இருப்பினும் சில குறைகளும் உள்ளன.

1. தனிமனிதச் சிந்தனைகளும் செயல்பாடுகளும் மறுக்கப்படுகின்றன.
2. தொன்றுதொட்டுவரும் மூடப்பழக்க வழக்கங்களை இன்றும் பின்பற்றும் சூழல் உருவாகிறது.
3. சமுதாய நன்மைகளுக்காகத் தனிமனித உரிமைகள் துறக்கப்படுகின்றன.
4. மூத்தோரின் விழுமிய மரபுகளையே பின்பற்றும் சமுதாயத்தில், புதியதாகத் தோன்றும் சிந்தனைகள் தடை செய்யப்படுகின்றன.

## இயல்பூக்க நிலை (Instinctive Morality)

புறத்தூண்டுதலின்றிக் தன்னியல்பாக எழக்கூடிய உணர்ச்சி, 'இயல்பூக்க நிலை' எனப்படுகிறது. (எ.கா) பசி, காமம், பயம், தாகம், இரக்கம், இத்தகைய உணர்ச்சிகளின் இயல்பூக்கநிலையில் பகுத்தறிவு செயல்படுவதில்லை. இயல்பூக்க உணர்ச்சிகள், மனிதனுக்கும் விலங்குகளுக்கும் பொதுவாகவே அமைந்துள்ளன. ஆனால், மனித உணர்ச்சிகளையும் விலங்குணர்ச்சிகளையும் பிரித்தறியத் தெரியவேண்டும். ஏனெனில், விலங்கினங்களின் இயல்பூக்கநிலை, தேவையை நிறைவு செய்வதாக மட்டுமே உள்ளது. மனிதனிடமோ தேவையின் நிறைவுக்குப் பின்னாலும், நன்மை மற்றும் தீமை பற்றிய போராட்டமாகத் தொடர்கிறது.

## மனச்சான்று நிலை (Reflective Morality)

மனச்சான்று நிலை என்பது, 'தன்னுண்மையறிவு' எனப்படுகிறது. இது செயலின் விளைவைக் கருதி, அச்செயல் சரியானதா? தவறானதா? எனத் தீர்மானிக்கும் அறிவு நிலைப்பாட்டின் உயிராற்றலாகும். ஒவ்வொரு மனிதனும் செயல்களைச் செய்யும்பொழுது, தன்னுண்மை அறிவு சரியா? தவறா?

என்றாராய்ந்து கூறிக்கொண்டேயுள்ளது. இதனையே மனச்சான்றுநிலை என்கிறோம். ஒரு மனிதன் தான் செய்த செயலுக்குப் பின்னர் மனம் வருந்துவது மனச்சான்றின் வெளிப்பாடேயாகும். சமயம், அரசு, சட்டம் முதலான நிறுவனங்கள், தனிமனிதன் மீது செலுத்தும் ஆதிக்கம் காரணமாக மன அமைதி குலைகிறது. மேலும் பஞ்சம், பசி, கொடிய நோயின் தாக்குதல்கள், சமயச் சச்சரவு, போர், சுரண்டல் ஆகியவற்றின் காரணமாகத் தனிமனிதன் பாதிக்கப்படும்போதும், மரபொழுக்கநிலை ஏற்புடையதாக இருப்பதில்லை. எனவே மனிதன், தன் மனச்சான்றின் அடிப்படையில் செயல்படுவது தவிர்க்க முடியாததாகும்.

**நிறைகள்:**

1. மனச்சான்றின் வழிபட்ட தனிமனிதன் முடிவுகளை எடுக்கும்போது, மூடநம்பிக்கைகளிலிருந்து அவன் விடுபடுகிறான். அறத்தெளிவும் அவனுக்கு ஏற்படுகிறது.

2. மனச்சான்றைக் குற்றவாளியின் கருத்திலெடுத்து அவன் செய்த குற்றங்களுக்குத் தண்டனை வழங்கப்படும் போது, சூழல்களைக் கருதித் தண்டனை குறைக்கப்படலாம் அல்லது குற்றவாளி விடுவிக்கப்படலாம்.

3. மனிதனிடத்தில் மனச்சான்று உள்ளபோது, அறச்சிந்தனைகள் உருவாகி அறவளர்ச்சிக்கு வித்திடுகின்றன.

**குறைகள்**

மனச்சான்றுக்கு உட்பட்டுத் தன் செயல்களைத் தீர்மானிக்கும்போது, சுய இரக்க உணர்வு மிகுதியால் (Self-Sympathy) தான் செய்தது தனக்குச் சரியே என்ற கண்மூடித்தனமான முடிவுக்கு மனிதன் வருவதற்கும் வாய்ப்புள்ளது.

மரபொழுக்கநிலை, இயல்பூக்கநிலை, மனச்சான்றுநிலை ஆகிய மூன்றும் பல்வேறு சூழல்களில், ஒன்றை ஒன்று சார்ந்தே செயல்பட்டு வருகின்றன. வேறு சில சூழல்களில் ஒன்றை மற்றொன்று விலக்கவும் செய்கின்றன. எனவே, இம்மூன்று நிலைகளிலும் முரண்பாடுகள், சார்புகள் ஆகியவை காணப்படுகின்றன.

ஒரே மனிதனிடத்தில் கூட இம்மூன்று அறவளர்ச்சி நிலைகளும், அவன் சூழலுக்குத் தகுந்தாற்போல் மாறிமாறிச் சுழல்வதைக் காணலாம். ஒரு மனிதன் கோபப்பட்டு அறிவிழக்கும்பொழுது, இயல்பூக்கநிலையில் அவன் செயல்படுகின்றான். தேர்தலில் அவன் வாக்களிக்கும்போது, மனச்சான்றின்படி அவன் வாக்களிக்கும்போது, மனச்சான்றின்படி அவன் செயல்படுகிறான். சமயநெறியின் அடிப்படையில் அவன், மரபொழுக்க நிலையிலும் செயல்படுகிறான். எனவே, அறப்பண்புகளின் வளர்ச்சி என்பதை, வரலாற்றுக் கண்ணோட்டத்தில் வைத்துக் கருதாமல், மனநிலைகளில் ஏற்படும் மாற்றத்தின் வளர்ச்சி எனக் கொள்வதே பொருத்தமுடையதாகும்.

**நிறைவுரை:**

தனிமனித வாழ்க்கை மட்டுமின்றிச் சமூக வாழ்க்கையையும் அறவியல் வரையறை செய்துள்ளது என்பதையும், அவரவருக்கு உரிய கடமைகளைச் சமூகவிதிகளுக்கும் ஒருங்குமுறைகளுக்கும் கட்டுப்பட்டுச் செயல்படுத்துகிறார்களா என்பதையும் அறவியல் ஆராய்கிறது. பகுத்தறிவின் மூலம் மனிதன் தனக்கும் சமூகத்திற்கும் நன்மை தரக்கூடிய செயல்களைச் செய்யவேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

# அலகு 8
# அறநெறி வாழ்வு

**நுழைவு வாயில்**

வாழ்ந்து வந்தான். அப்பொழுது அவனுக்குக் கடமைகளும் உரிமைகளும் இல்லை. உரிமைகளும் கடமைகளும் இல்லாதபோது, நற்பண்புகள் என்று போற்றப்படும் வாழ்வியல் அறங்களும் அங்கில்லை. தனியாக வாழ்ந்த மனிதன் சமுதாயமாக வாழத் தொடங்கிய நாள்முதல், பொதுவாழ்வில் பின்பற்றவேண்டிய வாழ்வியல் அறங்கள் பல தோன்றின. பலபோ் இணைந்து வாழும்போது, அனைவரையும் ஒருங்கிணைத்துச் செயல்பட வைக்கும் அறவியல் விதிகளுக்கு இணங்க வேண்டிய கடமை மனிதனுக்கு உண்டாகிறது.

மனிதனிடமுள்ள பண்புகள் அனைத்தும், அவனது செயல்கள் மூலமே வெளிப்படுகின்றன. சமூகம் வகுத்துள்ள அறநெறிக்கோட்பாடுகளை மனிதன் பின்பற்றும்போது, சிறந்த அறநெறியாளனாக அவன் கருதப்படுவான். இத்தகைய தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் ஏற்புடைய அறக்கருத்துகளைப் பல நூல்களும் வலியுறுத்தியுள்ளன. மனிதன் என்பவன் தானும் வாழ்ந்து. பிறரையும் வாழ வைப்பவனாக உருவாவதற்கு அறநெறிக்கு கருத்துகள் எவ்வாறு துணை செய்கின்றன என, இனிக் காண்போம்.

**தனிமனிதனும் சமுதாயமும்**

தனிமனிதன் சமுதாயத்தின் ஓா் உறுப்பினா் ஆவான். தனிமனிதன் இல்லை என்றால் சமுதாயமும் இல்லை. பல மரங்கள் ஒன்று சோ்ந்திருப்பதைத் 'தோப்பு' என்கிறோம். அதைப்போல், தனிமனிதா்கள் பலா் ஒன்று கூடி வாழ்வதைச் 'சமுதாயம்' என்கிறோம்.

**தனிமனிதனுக்கு இருக்க வேண்டிய சமுதாயப் பண்புகளாக காந்தியடிகள் கூறுவன**

- சமுதாயம் ஒரு குடும்பம் போன்றது; சமுதாய உறுப்பினா்கள் அனைவரும் குடும்ப உறுப்பினா்களே.
- தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் நெருங்கிய தொடா்புள்ளது.
- ஒவ்வொரு மனிதனும், ஒரு உலகளாவியச் சமுதாயத்தை உருவாக்கப்பாடுபட வேண்டும்.
- ஒருவருக்கொருவா் அன்பு செலுத்தி வாழக்கற்க வேண்டும்
- ஒவ்வொரு தனிமனிதனும் பிறருக்காகவும் சமுதாயத்திற்காகவும் வாழவேண்டும்.
- ஒவ்வொரு மனிதனும் சிறந்த அறநெறிகளையும் பண்பாட்டையும் தன் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும்.
- அண்டை வீடுகளில் வாழ்பவா்களின் மகிழ்ச்சியிலும் துயரத்திலும் பங்கு கொள்ள வேண்டும்.
- பிறருடைய சிக்கல்களைப் புரிந்துகொண்டு, அவற்றிற்குத் தீா்வு காண உதவவேண்டும்.
- பிறா் முன்னேற்றம் கண்டு பொறாமை கொள்ளக்கூடாது.
- எப்பொழுதும் மனித நேயத்துடன் செயல்பட்டுச் சமுதாய உறவுகளை வளா்த்துக்கொள்ள வேண்டும்.

**சமுதாயமும் அறவாழ்வும்**

தனிமனிதனின் அறக்கொள்கைகள் அவன் வாழும் சமுதாயத்திலுள் பிறருடன் அவன் தொடா்பு கொள்ளும்போதுதான் முழு வளா்ச்சியைப் பெறுகின்றன; தனிமனிதனைப் பண்புடையவனாகவும்

மாற்றுகின்றன. சமுதாயம், மனிதத்தன்மையுடையவனாக வாழும் முறைகளைக் கற்றுத் தருகிறது. சமுதாய வாழ்வுதான் மிகச்சிறந்த அறவாழ்வாழ்வுக்குப் பயிற்சிக் களமாகிறது.

சமுதாயத்தில் வாழும் மக்கள், தமக்கென ஒழுக்கக் கட்டுப்பாட்டு விதிகளையும் அறக்கோட்பாடுகளையும் வகுத்துக்கொண்டு, ஒவ்வொரு தனிமனிதனின் நலத்திலும் கவனம் செலுத்துகின்றனர். சமுதாயத்திலிருந்து விலகித் தனித்து வாழ்பவர்கள், அத்தகைய நன்மைகளை அடைய முடியாது. எனவே, சமுதாயம் என்பது அதில் வாழும் தனிமனிதனுக்குச் சமூகநலன் தரும் (Social welfare) அமைப்பாக விளங்குகிறது.

**சமுதாய நலன்**

மனிதனிடத்தில் பல்வேறு பண்புகள் உள்ளன. அவற்றில் பண்படாத விலங்குப் பண்புகளும் மேலோங்கி நிற்கின்றன. இச்சமூகத்தில், மக்களிடையே சேர்ந்து வாழும்போது தன்னலமற்றவர்கள் கூடத் தன்னலவாதிகளாக மாறிவிடுகின்றனர். இது மாறவேண்டும்.

பாவம், பொறாமை, ஆசை, பேராசை, சுயநலம், ஆதிக்கம் செலுத்துதல், தற்பெருமை, பழிக்குப்பழி, கோபம், சோம்பல், வெட்கம், வெறுப்பு போன்ற பின்பற்றத்தகாத குணங்களும் சமூக வாழ்வில் பரவிக்கிடக்கின்றன. தனிமனிதனின் நலத்திற்கும் சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் இவைகேடு விளைவிக்கின்றன.

சமுதாய அறப்பயிற்சி நிறுவனங்களாக விளங்குவன கல்வி நிறுவனம், முதாய நிறுவனம், தொழில் நிறுவனம், மத நிறுவனம், குடிமைப்பயிற்சி நிறுவனம் போன்றவை. இந்த அமைப்புகளின் மூலம் தனிமனிதன் அனைத்து நிலன்களையும் பெறமுடியும்.

**தனிமனிதனும் நாடும்**

இப்புவியில் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் வாழும், ஒவ்வொ ருதனிமனிதனின் தேவைகளையும் பூர்த்தி செய்து கொடுக்கும் பேரமைப்பாக, நாடு திகழ்கிறத.

மேலைநாட்டு அறிஞரான பிலண்ட்சிலி என்பவர், ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியைக் கொண்ட மக்களால் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட அரசியல் அமைப்பையே நாடு என்கிறார்.

ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதிக்குள் வாழும் மக்கள் தமக்குள் உரிய சட்ட விதிகளை வகுத்துக்கொண்டு ஆள்வதே நாடு என்று உட்ரோ வில்சன் கூறுகிறார்.

தனிமனிதன், சமுதாயம், நாடு இம்மூன்றும் ஒன்றோடொன்று இணைந்து செயல்படுகின்றன. மக்கள் ஒவ்வொருவரும் தம் வாழ்நிலையை அறிந்து, சமூக வாழ்வில் பங்கேற்பவர்களாகத் திகழவேண்டும். சமுதாயத்தில் குடும்பம், பள்ளி, அலுவலகம், மத நிறுவனங்கள் எனப் பல்வேறு அமைப்புகள் செயல்படுகின்றன. இந்த அமைப்புகள் எல்லாம் நாட்டின் நலனுக்கு வழிகாட்டுபவையாக விளங்குவதால், இந்த அமைப்புகள் யாவற்றிற்கும் பேரமைப்பாகச் சனநாயக அரசைக் கொள்வர்.

சமுதாயத்தில் வாழும் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் நலன் தரும் காரணத்தால், ஒரு நாட்டை 'நன்னாடு' என்று அழைக்கிறோம். அந்நாட்டின் நலன் மற்றும் வளர்ச்சி என்பது, அனைத்து மக்களின் நலன்களையும் உள்ளடக்கியதாகும். 'நாடு நம்மை வாழ வைக்க வேண்டும்; நாமும் நாட்டின் நல்வாழ்விற்குப் பாடுபட வேண்டும்'. நம் வாழ்வின் கடமைகளை நிறைவேற்ற நாடு நமக்குத் துணைபுரிய வேண்டும்;

ஒரு நாட்டின் செல்வம், அந்நாட்டில் பிறந்த அனைவருக்கும் பொதுவானது. அதைச் சிலர் மட்டும் பயன்படுத்துவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

**மூன்று நலக்கொள்கைகள்**

தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்குமான தொடர்புகளை அடிப்படையாகக் கொண்டு, அறக்கொள்கைகளை மூன்று வகைகளாகப் பகுக்கலாம்.

- தன்னலக் கொள்கை

- பிறர்நலக் கொள்கை
- பொதுநலக் கொள்கை (அ) உலகக் கொள்கை

**தன்னலக் கொள்கை**

தன்னலக் கொள்கை என்பதும் ஒருவகை அறவியற்கொள்கை எனக் கொள்ளப்படுகிறது. எந்த ஒரு மனிதனும் தன் நலத்தைத் துறந்து பிறர் நலத்தையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுதல் கடினமாகும்.

மனிதன் பிறப்பிலேயே தன்னலவாதியாக இருக்கிறான்; மற்றவர் நலத்தைக் காப்பதில் கூடத் தன்னலத்தையே கருதுகிறான் என்பதும் தன்னலக்கொள்கையாகும். இதன்படி மனிதன் தன் மேன்மையை மட்டுமே கருதுகிறான்; அவன் பிறர் நலத்தைக் கருதுவதில்லை. தன்னை முழுமையாக அழித்துக்கொண்டு பிறர் நலம் பேணுவது, இயற்கைப் பொருள்களுக்குப் பொருந்தும். ஆனால் அது, மனித இனத்துக்குப் பொருந்தாது. ஒரு தானியம் தன்னை அழித்துக்கொண்டு, பல தானிய மணிகளை விளைவிக்கிறது. ஆனால் மனிதன், இழந்த உயிரை மீண்டும் பெறமுடியாது. இது தன்னலக்கொள்கையினர் கருத்தாகும்.

புத்தர், ஏசு, காந்தி போன்ற பல பேரறிஞர்கள் தன்னலவாதிகளாக விளங்கி இருந்தால், இன்று காணும் நல்லதொரு உலகச் சமுதாயத்தை உருவாக்கியிருக்க முடியுமா? என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். உளவியற்கருத்துப்படி, தன்னலம் தனிமனிதனின் இயற்கையறமாக விளங்குவது போலவே, பிறர்நலம் பேணுதலும் தனிமனிதனின் இயற்கையறமாக விளங்குகிறது எனலாம். இந்த அடிப்படையில் நோக்கினால், தனிமனிதன் இயற்கையாகவே தன்னலம் பேணியும், பிறர்நலம் காத்தும் வாழும் இருமைக் குணமுடையவன் எனலாம். எனவே, தன்னலத்துடன் பிறர் நலமும் கருதுவதே செய்யத்தக்கதாகும் எனலாம்.

**பிறர் நலக்கொள்கை**

தனிமனிதன் தன்நலத்தைக் கருதாது பிறர்நலத்தையே தன் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும் என்பதைப் பிறர்நலக்கொள்கை வலியுறுத்துகிறது. பிறர் நலக்கொள்கை தன்னையே தியாகம் செய்ய வழிவகுப்பதாகும். மற்ற தனிமனிதர்களின் நலனையே காக்க வேண்டும் என்பதும், அவ்வாறு செய்யும்போது மறந்தும்கூடத் தன்நலன் பற்றி எண்ணாமலிருப்பதும் பிறர்நலக் கொள்கையரின் கருத்தாகும்.

| |
|---|
| தியாகம் என்பது பிறருக்காகத் தன் உரிமையை விட்டுக்கொடுத்து, பிறர்நலம் நல்குவதே ஆகும். |

பிறருக்குத் தொண்டு செய்யும் ஆர்வத்தில் தன் உடல்நலம் பேணாமலும், தான் செய்ய நினைத்த அளவுக்குப் பொதுநலத்தைப் பேண முடியாமலும் ஒருவனது உடல்நலம் கெட்டுத் தனக்கே பிறர் தொண்டு செய்யவேண்டிய நிலைக்கு ஆளாகிவிடலாம் அல்லது தன் உயிரையே தியாகம் செய்துவிடலாம். (எ.கா) ஒரு தீவில் உள்ள மக்கள் 'பிளேக்' நோயால் பாதிக்கப்பட்டபோது, கருணை உள்ளம் கொண்ட மருத்துவர் ஒருவர், அங்குச் சென்று, மக்களைக் காப்பாற்றுகிறார். அவர் மக்களுடன் இணைந்து செயல்பட்டதால், தாமும் அந்நோய்க்குப் பலியாகி தம் உயிரைத் தியாகம் செய்துவிடுகிறார்.

பிறர்நலக் கொள்கை தியாகத்தின் பெருமையைத் தெரிவிக்கிறது. பிறர்நலக் கொள்கை உடையவரின் தியாகம் என்பது, அறவாழ்வு கூறும் பல வழிகளில் ஒன்றேயன்றி, அதுவேதான் ஒரே வழி என்பதில்லை. இக்கருத்தைப் பிறர்நலக் கொள்கையினர் உணர்வதில்லை.

**பொதுநலக் கொள்கை அல்லது உலகக் கொள்கை**

ஒவ்வொரு தனிமனிதனும் தன் சமுதாயத்தின் நலனையே கடமையாகக் கொள்ளவேண்டும் சமுதாயம் வளர்ந்தால் தனிமனிதர்களும் உயர்வர் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு அவன் இயங்கவேண்டும். பிறருக்குத் துன்பதும் தரக்கூடாது; அனைவரும் மகிழ்ச்சியோடும் அமைதியோடும் வாழ வழியேற்படுத்த வேண்டும் வெறுப்புணர்வையும் பகைமையையும் விட்டொழிக்கவேண்டும்

இன்னாமையிலும் இனிமையைக் கண்டு நல்வினையாற்றவேண்டும். இவ்வாறு செயல்படும் பொதுநன்மை பேணும் பெருமனம், பொதுநலக் கொள்கையின் சிறப்பியல்பைப் புலப்படுத்துவதாகும்.

சமுதாயநலக் கொள்கை, ஆழ்ந்த அற உணர்வின் அடிப்படையில் விரிவடையும் தன்மையைப் பெற்றுள்ளது. தான் வாழும் சமுதாயத்தின் நலன், தன் நாட்டின் நலன், அனைத்துலக நலன் மற்றும் உலகில் உள்ள எல்லா உயிரினங்களின் நலன் எனப் பொதுநலக் கொள்கை விரிந்துகொண்டே போகும். அறவழியில் எத்தகைய குறுகிய வரையறையையும் இக்கொள்கையினர் விரும்புவதில்லை.

யானைக்கு மட்டுமானதில்லை இவ்வுலகம்; அது எறும்புக்கும்கூட உரியதாகும். இதைப் புரிந்துகொண்டவரே பொதுநலக் கொள்கையினராகத் திகழமுடியும். தமக்காக உழைப்பில் சான்றோருக்கு மகிழ்ச்சியில்லை. மொழி, இனம், நாடு, உலகம், எனப் பொதுநலன் கருதிப் பாடுபடுவதில்தான் பெரியோருக்குப் பெருமையுள்ளது. ‘கடன் என்ப நல்லவையெல்லாம் சான்றோருக்கு’ எனச் சான்றோர் கடமையாக நற்செயல்களைக் குறிப்பிடுகிறார் வள்ளுவர். தன்பெண்டு, தன்பிள்ளை, சோறு, வீடு, சம்பாத்தியம், இவை உண்டு, தானுண்டு என்போன் உள்ளம் சின்னதோர் கடுகுள்ளம் என்கிறார் பாவேந்தர். அனைவருக்கும் பயன்படும் தென்னையுள்ளமே நல்லுள்ளம் என்கிறார்.

**மார்க்சிய அறம்**

மனிதகுலத்தின் எழுச்சிக்கும் விழிப்புணர்ச்சிக்கும் வித்தாகத் தோன்றியவர் கார்ல் மார்க்ஸ். அவர் தந்த பொதுவுடைமைக் கோட்பாட்டின் வழி புதிய அறவியல் எண்ணங்கள் தோற்றம் பெற்றன. அவர் கூறும் அறவியலுக்கு அடிப்படையானவை – வாழ்வியலுக்கு பொருள் முதல் அடித்தளமானது : பொருளியல் சமநிலை பேணப்படுவது: சுரண்டலற்ற, ஆதிக்கமற்ற, வர்க்கமற்ற சமுதாயத்தை உருவாக்குவது: கூடிவாழும் தோழமை உணர்வை வளர்ப்பது: ஆண் பெண் இருபாலரையும் ஒப்ப மதிப்பது : ஒவ்வொருவரும் அனைவருக்காக; அனைவரும் ஒவ்வொருவருக்காக என்னும் உயரியக் கோட்பாட்டை அடைவது போன்றவையாகும்.

பொதுநலக் கொள்கை என்பது முழுச்சமூகத்திற்கும் நன்மை செய்யும் ஒரு மனிதநேயக் கொள்கையாகும். ஒரு மனிதன் உலகில் பசியால் வாடினாலும். அது பொறுக்காமல், இந்த உலகை இயற்றியவனை நோக்கி, ‘பரந்து கெடுக’ எனச் சீறுகிறார் வள்ளுவர். ‘தனியொருவனுக்கு உணவில்லையேல் ஜெகத்தினை அழித்திடுவோம்’ என்கிறார். பாரதியார். உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள் நமக்காக ஒரு பொன்னுலகம் காத்திருக்கிறது என்கிறார் கார்ல் மார்க்ஸ். கல்கத்தா நகரத்து வீதிகளில் சுருண்டு கிடந்த தொழுநோயாளிகளையும் தொட்டுக் கனிவுடன் மருந்திட்டுக் காத்தார் அன்னை தெரசா. வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்றார் வள்ளலார்.

இவர்கள் யாரும் தமக்காக வாழவில்லை பொதுச்சமூக நன்மை கருதியே தம் வாழ்வை ஒப்பளித்தனர். உலகம் அனைத்தும் ஒன்று என்றும், உயிர்கள் எல்லாம் நன்று என்றும் இவர்கள் கருதினர். இந்த உலக நோக்கே பொதுநலக் கொள்கையின் சாரமாகும்.

> ‘‘எல்லா மகிழ்ச்சியான குடும்பங்களும் ஒத்த விதத்தில் மகிழ்ச்சியாக இருக்கின்றன. ஒவ்வொரு மகிழ்ச்சியற்ற குடும்பமும் தனக்கே உரிய விதத்தில் மகிழச்சியற்று இருக்கிறது’’ – லியோ டால்ஸ்டாய்

**குடும்ப வாழ்வும் அறநெறியும்**

மனித உயிர்களிடம் இயல்பாக அமைந்த ‘அன்பு’ என்ற உயர்ந்த குறிக்கோளின் அடிப்படையில் அமைவதே குடும்பமாகும். சமுதாயத்தின், முதல்நிலைக் குழுவாக அமைவதும் குடும்பமேயாகும். ‘பல குடும்பங்களின் இணைப்பே சமுதாயம்’ என்பது, அரிஸ்டாட்டிலின் கருத்து, பழங்காலம் முதல் இன்றுவரையில் சமுதாயத்தின் முதன்மைப் பயிற்சி நிறுவனமாக விளங்குவது குடும்பமாகும். குடும்ப அமைப்பு, பன்மைகளுக்கு நடுவே ஒருமையையும், வேறுபாடுகளுக்கு இடையே ஒற்றுமையையும் ஏற்படுத்துகிறது. அறம் சார்ந்த உலகப்பண்பை விளக்கும் சமுதாய நிறுவனமாகவும் குடும்பம் திகழ்கிறது. ‘நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம், ‘குடும்பம் ஒரு கோயில்’ என்ற முதுமொழிகள் இவ்வுண்மையை உறுதிப்படுத்துகின்றன.

மனித வரலாற்றில் குடும்பமே முதல் சமுதாய நிறுவனமாகும். தொடக்கத்தில் மனிதர்களால் தனித்த வாழ இயலவில்லை சிறுசிறு கூட்டங்களாகச் சேர்ந்தே வாழ்ந்தனர். குடும்பத்துடன்

இணைந்துவாழ்ந்தால் எல்லா நலன்களையும் வளங்களையும் அடையமுடியும் என்பது தம்மனுபவம் வழி அவர்கள் உணர்ந்த உண்மையாகும். எனவே, குடும்பம் என்பது அடிப்படையானதும் உலகளாவியதுமான நிறுவனம் என்றும், ஒவ்வொரு சமுதாயமும் அதைச் சார்ந்தே அமைகிறது என்றும் முடிவுரைக்கலாம்.

**குடும்பத்தின் செயற்பாடுகள்**

உடல்தேவை, அறிவுத்தேவை, ஆன்மீகத் தேவை என்ற மூன்றையும், குடும்ப அமைப்பு மூலமே நிறைவு செய்துகொள்ள முடியும். குறிப்பாக குழந்தைக்கும் முதியோர்க்கும் பாதுகாப்பானதாகக் குடும்பத்தைக் குறிப்பிடலாம். இக்குடும்பம் உடைந்தால் சமூகம் உடைந்துவிடும். சமூகத்தில் வாழும் அனைத்து மனிதர்களுக்குமான பல குடும்பங்கள் சேர்ந்ததே ஒரு சமூகமாகும். இந்தச் சமூகத்தின் நன்மைக்கும் குடும்பம் இன்றியமையாததாகும். அன்பின் அடிப்படையில் குழந்தைகளின் உடல், உள்ளம் மற்றும் அறிவுத் தேவைகளை நிறைவு செய்யும் நிறுவனமே குடும்பம் என்றும் கொண்டாடலாம்.

'நடுநிற்றல்' என்ற பேரறப் பயிற்சியை அளிப்பது குடும்பமே. அறக்கொள்கைகளைப் போற்றல், நல்லொழுக்க நற்பண்புகளைப் பேணல் ஆக்கச் செயல்திறன்களை வளர்த்தல், ஒன்றுபட்டு வாழும் ஒற்றுமையுணர்வைக் கற்பித்தல் அன்பையும் அமைதியையும் வலியுறுத்தல் ஆகிய ஐந்தையும் அனுபவம் மிக்க பெரியோர் அடங்கிய குடும்பத்தின் வழி அறிந்து கொள்கிறோம். இத்தகைய மேன்மைகளைப் பெற்றுள்ள குடும்பத்தின் செயற்பாடுகளாகப் பின்வருவனற்றைக் குறிப்பிடலாம்.

- சமூக விதிகளை மதித்து நடப்பதற்குப் பழக்கப்படுத்துதல்
- தோல்வியையும் ஏமாற்றத்தையும் எதிர் கொள்வதற்குரிய மனத்துணிவை வளர்த்தல்
- தனிமையிலும் வெறுமையிலும் துன்புறாமல், அன்பிலும் அருளிலும் மனிதர்களை நெகிழச்செய்து உயிர்வாழ்தலின் மகிழ்ச்சியை மிகுவித்தல்.
- எச்சூழலிலும் தமக்குரியவர்களை கைவிட்டு விடாமல், அவர்களுக்கு உரிய நம்பிக்கையளித்தல்
- குழந்தைகள், நோயாளிகள், முதியோர், மாற்றுத்திறனாளிகள், மனச்சிதைவுற்றோர், நலிந்தோர் பெண்கள் எனப் பலரையும் பேணிக்காத்தல்
- உறவுகளின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, ஒருவருக்காக ஒருவர் இருப்பதை உறுதி செய்து உடன் வாழ்வோரைப் பொருட்படுத்திச் சிறப்பான முறையில் ஆறுதலளித்தல்.
- வெளியுலகின் வெறுப்புணர்விலிருந்து பாதுகாத்துப் பண்பார்ந்த வாழ்வு எது என்பதைச் சுட்டிக்காட்டித் தக்கவாறு நெறிப்படுத்துதல்.

**பிள்ளைகளுக்கும் பெற்றோருக்குமான உரிமைகளும் கடமைகளும்**

ஒருவன், தாய் தந்தையோடும் பிள்ளைகளோடும் சேர்ந்த குடும்பமாக வாழ்கின்றான். அவன் தன் தாய் தந்தையருக்கும், தனக்குமுள்ள உறவுநிலையில் உரிமைகளும் கடமைகளும் பெற்றுள்ளான். தன் தாய் தந்தையரின் அறக்கொள்கைகளைத் தன் அனுபவத்தால் அவன் பகுத்தறிகிறான். அதேவேளை, தான் தந்தையாக நின்று, தன் பிள்ளைகளின் செயல்களையும் மதிப்பீடு செய்கிறான். இக்குடும்ப வாழ்வைவிட இனிமையானது என்று இவ்வுலகில் வேறு எதுவுமில்லை. இத்தகைய இனிய குடும்பத்தின் உயர்பண்பைப் பின்வரும் ஐங்குறுநூற்றுப் பாடலால் அறியலாம்.

> ''அமர்ந்த உள்ளம் பெரிதாகின்றே
> அகன் பெரும் சிறப்பின் தந்தை பெயரன்
> முறுவலின் இன்னகை பயிற்றிச்
> சிறுதேர் உருட்டும் தளிர்நடை கண்ட''

(ஐங்குறுநூறு : 403)

தெருவில் சிறுதேர் உருட்டி விளையாடுகிறான் குழந்தை. அதைக் கண்டு தாயும் தந்தையும் அன்பின் மிகுதியால் மகிழ்ந்து புன்முறுவல் செய்கின்றனர். இவ்வளவு இனியது குடும்ப வாழ்வு என்கிறது ஐங்குநுறூறு. தன் மகனுக்குத் தந்தை ஆற்றவேண்டிய கடமை என்ன என்பதைப் பின்வரும் குறளால் அறியலாம்.

தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல் (குறள் எண் : 67)

சான்றோர் பலர் கூடியுள்ள அவையில், தன் மகனைத் தலைமைச் சிறப்புக்குரியவனாக உருவாக்குவது தந்தையின் சமூகக் கடமை என்கிறார் திருவள்ளுவர். மேலும் அவர்,

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என் நோற்றான் கொல் எனும் சொல் (குறள் : 70)

என்றும் கூறுகிறார். இவன் தந்தை இவனைப் பெற்றெடுக்க என்ன தவம் செய்தாரோ? எனப் பிறர் மகிழ்ந்து பாராட்டும் அளவிற்குச் சிறப்படைவதே மகன் தந்தைக்குச் செய்யும் நன்றிக்கடன் என்கிறார்.

**குடும்பத்தின் சிறப்புகள்**

- திருமணம்
- மக்கட்பேறு
- நட்பு

என்ற மூன்று வாழ்வியல் சிறப்புகளைக் குடும்பம் கொண்டுள்ளது.

**திருமணம்**

ஓரறிவு உயிர் முதல் ஐந்தறிவு படைத்த உயிரினங்கள் வரை, திருமணம் என்ற ஓர் ஒப்பந்தம் இல்லை. ஆனால், அறறிவு படைத்த மனித இனத்தில் ஆண், பெண் இருவம் இணைந்து வாழ்வதற்குச் சமூகத்தின் ஒப்புதல் பெறத் திருமணம் தேவைப்படுகிறது.

உடலாலும் உள்ளத்தாலும் இயற்கையாகப் பெண்ணும் ஆணும் இணைவதைத் திருமணம் எனச் சமூகம் அங்கீகரிக்கிறது. பழங்காலம் முதல் இன்றுவரை திருமண வாழ்க்கை ஒரு புனிதமான அறநெறி வாழ்க்கையாகக் கருதப்பட்டு வருகிறது. திருமணம் இன்றி ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் வாழ்க்கையைச் சமூகத்தினர் ஏற்றுக்கொள்ளாத நிலையில், அது ஒரு சிறந்த அறநெறி வாழ்வாகக் கருதப்படுவதில்லை. எனவே தான் வள்ளுவரும்,

அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை அ.்.தும்
பிறன் பழிப்பது இல்லாயின் நன்கு (குறள்் 49)

எனப் பிறரால் பழிக்கப்படாமல் அறவழியில் நடத்தப்படும் இல்லற மே நல்லறம் என்கிறார். மேலும் அவர்,

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது (குறள் : 45)

என்றும் கூறுகிறார். குடும்ப வாழ்வில் அன்பும் அறனும் நிறைந்திருக்குமானால், அந்த அழகிய வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவே ஆகும் என்கிறார் வள்ளுவர். எனவே, அன்பின் அடிப்படையில் வாழ்வாங்கு வாழ்ந்து, மானுட வாழ்க்கையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை நடுவுநிலையோடு ஆய்ந்து சிறப்படையச் செய்வதே குடும்ப வாழ்வின் அடிப்படை எனலாம்.

**மழலைச் செல்வம்**

ஒவ்வொரு குடும்பமும் தங்களின் எதிர்காலத் தலைமுறையினரைச் சிறப்பான முறையில் உருவாக்க வேண்டும் என்று நினைப்பது இயல்பாகும். குடும்பத்தின் முதன்மையான சிறப்புகளுள் ஒன்றாக 'மழலைச் செல்வம்' கருதப்படுகிறது. குழந்தைகளுக்குச் சிறந்த சூழலை உருவாக்கித் தன்னலம் கருதாது குழந்தையின் நலனைப் போற்றுவது பெற்றோர் கடமையாகும். பிறக்கின்ற குழந்தையின் மீது தாய்
தந்தையருக்கான உரிமை எந்த அளவில் இருக்கவேண்டும் என்பதும் அறத்திற்குட்பட்டதே ஆகும். குழந்தைகளை அடிக்கவும் தந்தையருக்கான உரிமை எந்த அளவில் இருக்கவேண்டும் என்பதும்

அறத்திற்குட்பட்டதே ஆகும். குழந்தைகளை அடிக்கவும் உதைக்கவும் தங்களுக்குச் சிறப்புரிமை இருப்பதாகப் பெற்றோர் கருதக்கூடாது. உங்கள் குழந்தைகள் உங்களிடமிருந்து தோன்றியிருக்கலாம்; ஆனால் தந்தையருக்கான உரிமை எந்த அளவில் இருக்கவேண்டும் என்பதும் அறத்திற்குட்பட்டதே ஆகும். குழந்தைகளை அடிக்கவும் உதைக்கவும் தங்களுக்குச் சிறப்புரிமை இருப்பதாகப் பெற்றோர் கருதக்கூடாது. உங்கள் குழந்தைகள் உங்களிடமிருந்து தோன்றியிருக்கலாம்; ஆனால் அவர்கள் உங்கள் உடைமைகள் அல்லர்' என்கிறார் கலில் ஜிப்ரான்.

தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க்கு எல்லாம் இனிது (குறள் : 68)

என்கிறார் வள்ளுவர். தம்மைவிடத் தம் குழந்தைகள் அறிவுடையோராக அமைந்தால், அதுவே உலகத்து உயிர்களுக்கு எல்லாம் இன்பம் தரும் என்கிறார் வள்ளுவர். இத்தகைய மனநலம் பெற்றோர்க்கு இன்றியமையாததாகும்.

ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய் (குறள் : 69)

தன் மகனைச் சான்றோனாகப் பிறர் கூறக் கேட்ட தாய், அம்மகனைப் பெற்றெடுத்தபோது அடைந்த மகிழ்ச்சியைவிடப் பெரிதும் மகிழ்வாள் என்கிறார் வள்ளுவர்.

தாய், தந்தை என்ற இருவருக்கும் சம உரிமையுண்டு. இருவருக்கும் உரிய பொதுச் சொத்தாகக் குழந்தைகள் உள்ளனர். இங்குப் 'பொதுச்சொத்து' என்பது, குழந்தைகளின் அறிவும் ஆற்றலும் உலகுக்குப் பயன்படும் வகையில் அமைய வேண்டும் என்பதேயாகும். இதை வள்ளவர்,

என்கிறார் ''நன்மக்கள் பேறு'' என்பது, நல்ல மக்களைப் பெறுவதாகும். நன்மக்களை ஈன்றெடுப்பதால் வீடும் நாடும் மகிழும். இந்த உலகமே போற்றுமளவுக்குப் பெற்றோர் சிறப்படைவர் என்கிறார் வள்ளுவர்.

**நட்பு**

குடும்பத்தின் கிளைகளான திருமணமும் மக்கட்பேறும் நடுவுநிலையாக வாழும் பயிற்சியை அளித்துப் பற்று, அன்பு, பொறுமை, பிறர் நலம் பேணல் போன்ற உயர்பண்புகளை வளர்த்துக்கொள்ள உதவுகின்றன. இவற்றைச் சார்ந்துவரும் நட்பு, குடும்ப வாழ்வில் ஆண் பெண் என்ற வேறுபாடில்லாமல், ஒருவருக்கொருவர் அன்பும் ஆதரவும் காட்டிப் பொருந்தி வாழ்வதைச் சிறப்பிப்பதாகும். கணவன் மனைவி இருவருமே ஆழ்ந்த அன்புடையவர்களாகவும், சிறந்த நண்பர்களாகவும் இருப்பதே இல்லற நட்பாகும்.

உயர்நட்புக்குச் சிறந்த சான்றாகக் கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையாரைக் குறிப்பிடலாம். (புறநானூறு : 212, 216) நேரில் ஒருவரை ஒருவர் காணாவிட்டாலும், கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும் உள்ளத்தால் ஒன்றுபட்டு இருந்தனர்; பின் இறந்தனர். வடக்கிருந்து கோப்பெருஞ்சோழன் உயிர்விட்டான். நண்பனின் இறப்பைத் தாளமுடியாமல் பிசிராந்தையாரும் உயிர் நீத்தார் என்று அறிகிறோம்.

**உரிமைகள் மற்றும் கடமைகள்**

உரிமைகளும் கடமைகளும் மனிதனின் இரண்டு கண்களைப் போன்றவை ஒன்றையொன்று சார்ந்திருப்பவை; ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகத் திகழ்பவை எனலாம். ஒருவன் முறையாகக் கடமையாற்றும்போது, அவனை வினை ஒழுக்கமுடையவன் எனக் கூறுவர். இப்பண்பே அவனது நன்னடத்தையாகிப் பின் நல்லொழுக்கமாகவும் மாறிவிடுகிறது. இவ்வகையில் உரிமையும் கடமையும் பிரிக்கமுடியாத தொடர்பைப் பெற்றுள்ள.

## 1. உரிமைகள் (Rights)

மனிதச் சமூகத்தில் 'உரிமை' என்பது, அறமுறையிலோ அல்லது சட்டவகையிலோ ஒன்றைப் பெறுவதாகும். அறமும் சட்டமும் அடிப்படையில் ஒன்றுக்கொன்று வேறானவை. 'எழுத்து

அறிவித்தவன் இறைவன் ஆவான்' என்பது மூதுரை கூறும் அறம். இந்நியதியால் ஆசிரியர், மாணக்கர் மீது அறவகையில் உரிமையுடையவர் ஆவார். ஆனால், சட்ட வகையில் மாணக்கரின் மீது ஆசிரியருக்கு உரிமை ஏதும் கிடையாது.

**உரிமையும் சமூகமும்**

காட்டிலோ தீவிலோ மனிதன் தனித்து வாழும்போது, அவனுக்கு எத்தகைய உரிமையும் தேவையில்லை. காரணம், தன்னந்தனியாக வாழ்வதால் அவன், உரிமைகளைத் தானாகவே பெற்றிருக்கிறான். ஏனென்றால், அவன் வாழும் சூழலில் அவனுக்குக் கிடைக்கக் கூடியவற்றை மறுக்க, அவனைத் தவிர வேறு எவரும் இல்லை. அவன் யாரிடமும் எந்த உரிமையையும் போராடி நிலைநாட்ட வேண்டியதில்லை. சமுதாயத்தோடு சேர்ந்து வாழும்போதுதான் உரிமைகளை நிலைநாட்ட வேண்டிய தேவையே அவனுக்கு உருவாகிறது.

தன் உரிமையை எங்கே வலியுறுத்த வேண்டும் அல்லது தவிர்க்க வேண்டும் என்பதைச் சரியாக அறிவதுதான் மனிதனின் சிறந்த அறமாகும். தனிமனிதனுக்கு உரிமைகளை வழங்குவதன் மூலம் சமூகம், தனிமனிதனின் மனநலத்திற்கும், வாழ்வு வளர்ச்சிக்கும் உறுதுணையாக அமைகிறது. எனவே, தனக்குள்ள உரிமைகளால் தன்னை வளர்த்துக்கொள்ளும் தனிமனிதன், தனக்குதவிய சமூகத்திற்கு நன்றி பாராட்டும் முறையில் பொதுநன்மைகளுக்காகப் பாடுபட முன்வருகிறான் எனலாம்.

**மனிதனின் உரிமைகள்**

மனிதனின் முதன்மையான உரிமைகளாகப் பின்வரும் ஐந்தையும் குறிப்பிடலாம்.

1. வாழ்வதற்கான உரிமை
2. சுதந்திர மனிதனாயிருக்கும் உரிமை
3. உடைமைகளுக்கான உரிமை
4. ஒப்பந்தம் செய்துகொள்ளும் உரிமை
5. கல்வி கற்கும் உரிமை

**வாழ்வதற்கான உரிமை**

பிறப்பு, இறப்பு என்பது உலகில் பிறக்கும் அனைத்து உயிர்களுக்கும் பொதுவானது. வாழும் உரிமை என்பது எல்லா உயிர்களுக்கும் அடிப்படையான உரிமையாகும். இதை உணர்த்தவே, ஆண்டுதோறும் டிசம்பர் 10 ஆம் நாள் மனித உரிமை நாளாகக் (Human Rights Day) கொண்டாடப்படுகிறது. 'வாழு' அல்லது 'வாழவிடு' என்ற முதுமொழியும், மனிதர்களின் வாழும் உரிமைக்கு அரணாகிறது.

**சுதந்திரமாக வாழும் உரிமை**

சுதந்திரமாக வாழும் உரிமை என்பது, ஒருவகைக் கட்டுப்பாட்டுக்குட்பட்ட நிலையாகும். ஆனால், இக்கட்டுப்பாட்டிலும் ஒருவகைச் சுதந்திரமுள்ளது. (எ.கா) சாலையில் செல்லும் போது இடப்பக்கமாகச் செல்லவேண்டும் என்பது சாலையின் விதி. இந்த விதிக்கு உட்பட்டு நடந்தும் போகலாம் வாகனத்திலும் போகலாம். இது மனிதனுக்குரிய 'கட்டற்றச் சுதந்திரமாக இயங்கும் உரிமை' ஆகும். ஆனால், வலப்பக்கமாகச் செல்லக்கூடாது என்ற வகையில் இதுவும் சாலைவிதிக்குக் கட்டுப்பட்டதாகும்.

சமூகத்தில் பல கட்டுப்பாட்டு விதிகள் உண்டு. அந்த விதிகளுக்கு அடங்கிய நிலையில், பிற மனிதர்களின் சுதந்திர உரிமையை மீறாத வகையில் ஒருவன், தன்னுடைய சுதந்திரத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம். இதனால், அவனுக்கும் பிறர்க்கும் பயனுண்டு என்பதால், அனைவருமே சுதந்திரமாக வாழ முடியும் எனலாம்.

**உடைமைகளுக்கான உரிமை**

வாழும் உரிமையும் கல்வியுரிமையும் பெற்று, உழைக்கும் உரிமையால் கட்டற்ற நிலையில் நின்று பணிபுரியும் ஒருவன், தன் விருப்பப்படி பொருள்கள் பலவற்றைத் தன் உடைமையாக்கிக்கொள்ளும் உரிமையைச் சமூகம் அவனுக்கு வழங்கியுள்ளது. பொருள்களை உடைமையாக்கிக் கொள்ளுவதன் நோக்கம் பிறருக்கு நன்மை செய்வதற்குத்தான் என்பதை உணர்ந்து, அந்த உரிமையைச் சமூகம் அவனுக்கு அளிக்க முன்வரவேண்டும்.

**ஒப்பந்தம் செய்துகொள்ளும் உரிமை**

கல்வியுரிமையும் உழைப்புமுள்ள மனிதன், பொருள்களைத் தன்னுடைமையாக்கும் முயற்சியில் ஈடுபடும் போது, அதற்குப் பிற மனிதனின் உதவியும் தேவைப்படுகிறது. ஒருவன் பிறனோடு இணைந்து செயலாற்றும் நிலைமை ஏற்படுமானால், அவ்விருவரும் இணைந்து செயல்புரிவதற்கான ஒப்பந்த உரிமையைச் சமூகம் வழங்குகிறது.

**கல்வி கற்கும் உரிமை**

வாழும் உரிமையைப் போலவே, கல்வியைப் பெறுவதற்கும் சமூகம் எல்லாவகை உதவியும் செய்கிறது. ஒருவர் கல்வியைப் பெறுவதற்குரிய வாய்ப்புகளை உருவாக்கித்தர வேண்டும். ஒருவர் தாம் விரும்பும் அளவுக்குக் கல்வி கற்பதன் வழித் தம்மிடத்தில் மறைந்துள்ள பேராற்றல்களைச் சிறப்பாக வெளிப்படுத்த முடியும்.

இவ்வகையில், பண்பட்டவர்களாகச் சமூக உறுப்பினர்களை மாற்றி அமைக்கக் கல்வியாலேயே முடியும். பண்பட்ட உறுப்பினர்களால் பண்புள்ள தனித்தன்மை வாய்ந்த சமூகம் அமையும். எனவே, தனிமனிதன் விரும்பும் கல்வியைச் சமூகம் அவனுக்குத் தரவேண்டும்.

வாழும் உரிமை, கல்வியுரிமை, ஒப்பந்த உரிமை, சுதந்திர உரிமை, உடமைகளைப் பெறும் உரிமை இவை ஐந்தும் பொதுநலனுக்கு எந்த அளவுக்குப் பயன்படுகிறது என்பதைப் பொறுத்துதான் இவ்வுரிமைகள் வலுப்பெறுகின்றன. ஒவ்வொரு மனிதனும் சமூகத்தின் பொதுநலனுக்குத் கருவியாவதால், அனைத்து மக்களின் உரிமைகளும் ஒருவருக்கொருவர் உதவும் நிலையில் ஒரு வரம்பிற்குள் கட்டப்படுத்தப்படுகின்றன.

**கடமை என்பதன் பொருள்**

இரண்டு செயல்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து, அது சூழலுக்குப் பொருத்தமாகவும் சட்டத்துக்குட்பட்டதாகவும் இருக்குமாயின் அதனையே கடமை என்று கூறவேண்டும்.

**கான்டின் கடமைக் கொள்கை**

இமானுவேல் கான்டின் கடமைக் கொள்கை (Duty for Dyty's Sake) கடமையை மட்டுமே கருத்திற் கொண்டு கடமை செய்வதாகும். இதன் விளைவுகளும் நன்மைகளும் பற்றிக் கருதத் தேவையில்லை. கடமையைச் செய்யும் போது, எவ்வித ஊக்கிகளின் தூண்டுதலுமின்றிச் சுதந்திர மனநிலையில் நிற்கவேண்டும். கடமைக்காகக் கடமை என்ற உணர்வு மட்டுமே நம் சுதந்திர மனநிலையை இயக்கும் ஊக்கியாக இருக்க வேண்டும் என்று கான்ட் கூறுகிறார்.

**நல்லொழுக்கம்**

'VIRTUE' என்ற ஆங்கிலச்சொல்லிற்கு இணையாக, 'நல்லொழுக்கம்' என்ற தமிழ்ச் சொல்லைக் கருதலாம். இச்சொல்லை நாம் பயன்படுத்தும்போது, மனிதனுடைய மேம்பாட்டைக் குறிப்பதாகக் கொள்கிறோம். நல்லொழுக்கம் என்பது நற்சிந்தனை, நற்செயல், நன்னடத்தை, நற்பண்பு, நல்லறிவு, தன்னடக்கம், நேர்மை, உறுதி ஆகியவற்றின் ஒருங்கிணைந்த செயல்பாடாகும்.

**நல்லொழுக்கத்தை அடையும் வழிகள்**

அறிவின் வழியில் இயங்குபவன் அறிவுடையவன் எனக் கூறலாம். அறிவுடைய மனிதன் விரும்பியேற்கும் செயலே, விருப்பச் செயல் (Volutary Action) ஆகும். அறிவாற்றல், ஆசையின் நிறைவைக் குறிக்கோளாக்கிச் செம்மைநெறியில் மனிதனைக் கொண்டு செலுத்துகிறது. எனவே, விருப்பச் செயல் என்பது, தன் அறிவினால் நல்லது எது, தீயது எதுவென ஆய்ந்து, மனிதன் மேற்கொள்ளும் செயல் எனலாம்.

விரும்பியேற்ற செயலைச் செய்ய முனைகையில், அதை அறிவின் நெறிப்படுத்த வேண்டும். விருப்பச்செயலில் ஒரு மனிதன் ஈடுபடும்போது, அவனுடைய அறிவும் அச்செயல் செல்லவேண்டிய பாதையம், பயன்கள் மற்றும் அதனால் விளையும் பின்விளைவுகளும், அதன் முடிவும் ஆராயப்படவேண்டும். ஒரே செயலைப் பலமுறை திரும்பத் திரும்பச் செய்யும்போது, அது அனிச்சைச்

செயலாக (Non-Voluntary Action) மாறிவிடுகிறது. இதையே 'பழக்கச்செயல்' (Habitual Action) என்றும் கூறலாம்.

ஒருவன் நன்னடத்தையை விருப்பச் செயலாக விரும்பி ஏற்றுச் செயல்பட்டு வந்தால், அவன் மனதில் நன்னடத்தை பதிந்துவிடும். இந்த மனப்பதிவைத்தான் நாம் நற்பண்பு (Good Character) என்று கூறுகிறோம்.

**நற்பண்புகளின் வகைகள்**

நற்பண்புகள் மூன்று வகைப்படும்.

- தன்னைப் பற்றியவை
- பிறரைப் பற்றியவை
- குறிக்கோளைப் பற்றியவை

1. **தன்னைப் பற்றியவை**
   கடமைகளை மேற்கொள்ளும்போது, நற்பயனளிக்கும் இயல்பான செயல்களையே ஒருவன் செய்வான். நடுவுநிலைமை, தன்னடக்கம், சிக்கனம், கண்ணியம், நேர்மை, தியாகம், உழைப்பு போன்ற தன்னை மேம்படுத்தும் நற்பண்புகளை வளர்த்துக்கொள்ளும் மனிதன் வீழ்வதில்லை. இவை தன்னைப் பேணும் நற்பண்புகளாகும்.

2. **பிறரைப் பற்றியவை**
   பிறரது அல்லது பிற உயிர்களின் நன்மைக்காகக் கடமைகளை மேற்கொள்ளும் போது, அவற்றிற்கேற்ற நற்பண்புகளையே கடைப்பிடிக்க வேண்டும். நீதி, நியாயம், மொழிப்பற்று, நாட்டுப்பற்று, மனிதநேயம், அறச்செயல்கள் முதலியன பிறரைப் பற்றிய நற்பண்புகளாக அமைகின்றன.

3. **குறிக்கோளைப் பற்றியவை**
   உண்மையின் மீது அன்பு, நன்மையின் மீது பற்று, செயலின் மீது உறுதி, உழைப்பின் மீது மதிப்பு போன்றவை குறிக்கோளை நோக்கிய நற்பண்புகளாகும்.

**ஆளுமைப்பண்பு**

'ஆளுமை' என்பது, ஒருவன் பெற்றுள்ள உடற்பண்புகள், உளப்பண்புகள், சமூக அறநெறிப் பண்புகள் ஆகியன யாவும் ஒருங்கிணைந்ததைக் குறிக்கிறது. ஆளுமையில் உடற்தோற்றம், அனுபவங்கள், நினைவுகள், கற்பனைகள், பற்றுகள், பழக்கவழக்கங்கள் எனப் பலவும் அடங்கியுள்ளன.

**குற்றமும் தண்டனையும்**

நற்செயல்கள் எவ்வாறு பாராட்டிற்கு உரியவையோ, அவ்வாறே குற்றங்களும் தண்டனைக்கு உரியவை. எந்த ஒரு விதியையும் மீறுகின்ற எச்செயலுமே குற்றம் எனவும், அது தண்டனைக்கு உரியது எனவும் கருதுவர்.

தன் மனச்சான்றின் அடிப்படையில் தனிமனிதன் ஏற்றுக்கொண்டிருக்கும் அறவியல் விதிகள், சமூக அமைப்பு உருவானபோது, சமூகம் அமைத்த விதிகள், அரசு விதித்த விதிகள் என இன்று பெருகியுள்ளன. தனிமனிதனின் அறவாழ்வைப் பாதிப்பதாகச் சில தருணங்களில் இவை அமைந்துவிடுகின்றன. இவ்விதிகளுக்கு உட்பட்டு நடக்கவேண்டிய மனிதன், இவ்விதிகளைத் தானே மீறத் தொடங்கும்போது, அறவாழ்வில் சிக்கல்கள் தோன்றுகின்றன.

**தீய எண்ணங்கள்**

தீய எண்ணங்கள் மனத்தில் பதிந்துவிட்டால் அவை நல்லொழுக்கத்தைக் கெடுத்து, அதற்கேற்ப வெளிப்புறச் செயல்களையும் இழிவுபடுத்திவிடும். பொறாமை, பேராசை, கடுஞ்சினம், கடுஞ்சொல் முதலிய நான்கும் தீய எண்ணங்களாகக் கருதப்படுகின்றன. இது பற்றி வள்ளுவர்,

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம் (குறள் : 35)

என்று கூறுகிறார். இத்தீய எண்ணங்களைச் சட்டத்தாலும் அரசாலும் தண்டிக்க முடியாது; அவரவர் மனச்சான்றே அவரவருக்கும் தண்டனையாகும்.

## பிழை (Mistake)

மனிதன் தன் அறிவாற்றலின் துணையால் ஒரு செயலைச் செய்யும்போது, இது தவறான செயல்தான் என்று தெரிந்தே அச்செயலைச் செய்வதைப் ‘பிழை’ என்கிறோம். ஆனால், அதே மனிதன், அறியாமையால் ஒரு செயலைச் செய்யும் போது, அது தவறான செயல் எனப்படுகின்றது. பிழையைப் பொறுத்துத் தவறுகளைத் திருத்திக்கொள்ளச் சமூகம் மனிதனுக்கு உதவவேண்டும் எனலாம்.

### அறத்தீமைகள்

அறத்தீமை என்பது, ஒருவன் அறிந்தே அறக்கொள்கையை மீறுவதாகும். அறவிதியை மீறுதல் தீமை தரும் என்பதை உணர்ந்தபின்னும் செய்யப்படும் ஐம்பெருங்குற்றங்களை இதற்குள் அடக்கலாம். மது, பொய், களவு, காமம், கொலை ஆகிய ஐந்தும் விலக்கப்பட வேண்டும் என்பதைத் திருக்குறள் முதலிய அறநூல்கள் மிகவும் வலியுறுத்துகின்றன. இந்த ஐம்பெரும் குற்றங்களைத் தெரியாமல் மனிதன் செய்வதில்லை. ஆசையின் தூண்டுதல்களுக்கு உட்பட்டே இக்குற்றங்களை இழைக்கிறான். எனவே, இவற்றை அறத்திற்குத் தீமை செய்வன என்ற பொருளில் ‘அறத்தீமைகள்’ என்கின்றனர் சான்றோர்.

## தண்டனை (Punishment)

குற்றம் செய்தவன் தண்டிக்கப்பட்டாக வேண்டும். எவ்வாறு நற்செயல்களுக்குப் பரிசுகள் அளிக்கப்படுகின்றனவோ, அதைப் போன்றே குற்றங்களுக்கும் தண்டனைகள் அளிக்கப்படுகின்றன. குற்றவாளி சமூகத்தின் சட்டங்களை மீறுகிறான் அவற்றை வேண்டுமென்றே தகர்த்தெரிகிறான். அவன் தவறுகளுக்குத் தண்டனை அளிப்பதன் மூலமாகச் சமூகம் தன்னைச் சீரமைத்துக் கொள்கிறது. எனவே, தண்டனை எனப்படுவது, அறவழியிலான ஒரு நேர்மையான நெறிப்படுத்தும் செயலாகும். தண்டனை பற்றிய கொள்கைகள் மூன்றாக உள்ளன.

1. எச்சரிப்புத் தண்டனைக் கொள்கை
2. பழிக்குப் பழிவாங்கும் தண்டனைக் கொள்கை
3. சீர்திருத்தத் தண்டனைக் கொள்கை

### 1. எச்சரிப்புத் தண்டனைக் கொள்கை (Deterrent Theroy of Punishment)

குற்றம் செய்தவனைத் தண்டிக்கும் முறையில் அவனுக்கு அளிக்கப்படும் தண்டனை, மற்றவர்களுக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பர். (எ.கா) ‘‘ஆடு திருடியதற்காக நீ தண்டிக்கப்படவில்லை; எதிர்காலத்தில் ஆடுகள் திருடுபோகாமல் இருக்கத்தான் இத்தண்டனை’ எனத் தீர்ப்பளித்தல்.
இக்கொள்கையில் சில குறைபாடுகள் உள்ளன. இக்கொள்கையின்படி, மற்றவர் நலனுக்கான வெறுங்கருவியாகத் தனிமனிதன் பயன்படுத்தப்படுகிறான். ஒருவனைப் பிறருக்கு முன்மாதிரியாகக் காட்டுவதுதான், இக்கொள்கையின் அடிப்படையாகும். இது தனிமனித நிலையைவிடச் சமூகத்திற்கான அவனது நிலையையே வலியுறுத்துகிறது. சிலவேளைகளில் குற்றம் இழைத்தவனை நீதிபதி தண்டிக்க முற்படும்போது, மற்றவர்களுக்கு இத்தண்டனை எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றெண்ணி, மிகக்கடுமையாகத் தண்டிக்கலாம்; மிகக்குறைவாகவும் தண்டிக்கலாம். இரண்டுமே சரியன்று. எதிர்காலத்தில் குற்றம் நேராமல் தடுப்பதாகவும், குற்றவாளியைத் திருத்துவதாகவும் தண்டனை அமைவதே சிறந்ததாகும்.

ஒரு குற்றவாளி முதன் முறையாக ஒரு குற்றத்தைச் செய்யும்போது, அக்குற்றத்தை அவன் மீண்டும் செய்யமாட்டான் என்ற நிலையில், நீதிபதி அவனை எச்சரிக்கை செய்யலாம். மிகக்குறைந்த தண்டனையையும் வழங்கலாம் அல்லது மற்றவர்களை எச்சரிக்கும் வகையில் தண்டனை விதிக்கும்போது, சற்றுக் கடுமையாகவே நீதிபதி தண்டனை விதிப்பார். ஒரே குற்றத்தைத் திரும்பத் திரும்பச் செய்ய நேர்ந்தால், அக்குற்றவாளிக்குக் கடுமையான முறையில் தண்டனை வழங்கத்தான் வேண்டும்.

### 2. பழிக்குப் பழிவாங்கும் தண்டனைக் கொள்கை (Retributive Theory of Punishment)

பழிக்குப் பழிவாங்கும் தண்டனைக் கொள்கை என்பது, மற்றொருவனுக்கு ஒருவன் இழைத்த துன்பத்தைக் குற்றவாளியான அவனும் அனுபவிக்கும்படி செய்வதாகும். இக்கொள்கையின்படி,

கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்பதைப் பொதுவாக நோக்கும்போது, இது பழிவாங்கும் தண்டனை என்பதை அறியலாம். (எ.கா) சோழர் வரலாற்றில், மனுநீதிச்சோழனின் மகனான இளவரசன், தேர்க்காலில் ஒரு பசுவின் கன்றினைக் கொன்ற குற்றத்திற்குத் தண்டனையாக, அதே தேர்க்காலில் மகனையும் இட்டுக் கொன்ற மன்னனின் செயலைச் சான்று காட்டலாம்.

குற்றங்களால் சமுதாயம் அழிவதை யாரும் ஏற்கமுடியாது. மனிதச் சமுதாயம் அழிந்தால், மனிதன் விலங்கைவிடவும் கீழ்நிலையை அடைய நேரிடும் என்பதால், குற்றங்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கப்படுவதைத் தவிர்க்கக்கூடாது என்பர். இக்கொள்கையிலும் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. பழிக்குப் பழி வாங்குதல் என்பது, உணர்ச்சியின் அடிப்படையில் நிகழும் செயலாகும். இது அறிவில் முதிர்ந்த சான்றோர்கள் வாழும் சமுதாயத்திற்குப் பொருந்துவதன்று எனலாம்.

குற்றவாளி அக்குற்றத்தை எதற்காகச் செய்தான்? அவனைத் தண்டிப்பது, சமூகத்திற்கு நன்மை பயக்குமா?, எத்தகைய தண்டனையை அவனுக்கு வழங்குவது?, பாதிக்கப்பட்டவன் செய்த குற்றத்தின் பின்னணி என்ன? போன்றவற்றைத் தீர ஆராயாமல், பழிக்குப் பழிவாங்கும் நோக்கத்தில் தண்டனைகளை அளிக்கக் கூடாது.

### 3. சீர்திருத்தத் தண்டனைக் கொள்கை (Reformative Theory of Punishment)

குற்றம் செய்தவனைத் திருத்தும் வகையில் தண்டனை அமையவேண்டும் என்பது, இக்கொள்கையின் நோக்கமாகும். இக்கொள்கையை மக்கள் அனைவரும் எற்றுக்கொள்கின்றனர். குற்றம் புரிந்தவனையும் மனிதனாக மதித்து, அவன் நன்மையையும் மனங்கொண்டு தண்டனை அளிக்கப்படவேண்டும் என்று இந்தக் கொள்கையினர் கருதுகின்றனர்.

குற்றவியல் ஆய்வுகள், ஒருவன் ஏன் குற்றம் செய்கிறான் என்பதற்கான காரணங்களைக் கண்டறிய முனைகின்றன. உடற்குறைகளும் மனக்குறைகளும் குற்றங்களுக்குக் காரணமாகின்றன என்று கண்டறிந்துள்ளனர். சமுதாயத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளே மனிதனைக் குற்றவாளியாக்குகின்றன என்றும் கருதுகின்றனர்.

குற்றவாளிகளின் உடல்நலம், உளநலம் ஆகியவற்றைப் பொருட்படுத்தி, ஒரு நோயாளிக்கு மருத்துவர் எவ்வாறு சிகிச்சை அளிக்கின்றாரோ, அதேபோல் குற்றம் புரிந்தவனையும் நோயாளியாகப் பாவித்து அவனைச் சீர்திருத்தும் வகையில் அவனுக்குத் தண்டனை தரப்படவேண்டும்.

சீர்திருத்தத் தண்டனைக் கொள்கையிலும் சில குறைபாடுகள் உள்ளன. எல்லாக் குற்றவாளிகளுமே உடலியல் மற்றும் உளவியல் குறைபாடுகளினால் குற்றம் செய்தவர்கள் அல்லர். மேலும், எல்லாக் குற்றங்களும் சமுதாய ஏற்றத்தாழ்வுகளால் ஏற்பட்டவையே என்பதையும் முழுமையாக ஏற்றுக்கொள்ளமுடியாது என்பர்.

**நிறைவுரை**

தனிமனிதன், சமுதாயம், நாடு ஆகிய மூன்றும் ஒன்றோடொன்று கொண்டுள்ள தொடர்பு, இப்பாடப்பகுதியில் விளக்கப்பட்டுள்ளது. தனிமனிதனுக்குரிய சமுதாயப் பண்புகள் பட்டியலிப்பட்டுள்ளன. தன்னலம், பிறர்நலம், பொதுநலம் ஆகிய மூவகை அறக்கொள்கைகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. குடும்ப வாழ்வோடு தொடர்புடைய அறநெறிகள், பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்கும் உரிய உரிமைகள், கடமைகள், குடும்பத்தின் சிறப்புகள் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன. மனிதனின் அடிப்படை உரிமைகள் பட்டியலிடப்பட்டுள்ளன. நற்பண்புகளின் வகைகள், தண்டனை – விளக்கம், அதன் வகைகள் ஆகியனவும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

## அலகு 9
## தொழில்சார் அறங்கள்

### நுழைவு வாயில்

மனிதன், சமூகத்தில் நன்னெறிகளோடு வாழ்வது மட்டுமல்லாமல், தான் ஏற்றுக்கொண்ட செய்தொழிலிலும் அறநெறிகளைப் பின்பற்றி வாழவேண்டும். ஒருவன் எந்தத் தொழில் செய்தாலும், அதில் அவன் அடையும் பயனைவிட, மற்றவர்களும் மிகுந்த பயன் பெறவேண்டும். அதுவே, அத்தொழிலுக்குச் சிறப்பாகும்.

இப்பகுதியில், பல்வேறு தொழில் செய்வோர்க்கான தொழில்சார் அறங்கள் விளக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாகக் கல்வி, மருத்துவம், வணிகம், சட்டம், அரசியல் போன்ற துறைகளில் ஈடுபடுவோர் பின்பற்ற வேண்டிய தொழில் அறங்கள் பற்றிய நெறிமுறைகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

### தொழில்சார் அறம் - சொற்பொருள் விளக்கம்

தொழில்சார் அறம் என்பது, தொழில் தொடர்பான கொள்கைகளையும், பின்பற்ற வேண்டிய நடைமுறைகளையும் கூறுவதாகும். தொழில் புரிவோரின் தனிமனித ஒழுக்கம், உயர்நிலை விழுமியங்கள், சட்டங்களைப் பின்பற்றும்முறை போன்றவற்றைக் குறிப்பிடுவதே 'தொழில்சார் அறம்' ஆகும். வாடிக்கையாளருக்கு நியாயமான விலையில் பொருள்களை வழங்குதல், பணியாளர்களை உரிய மதிப்புடன் நடத்துதல், கண்ணியமான முறையில் லாபம் ஈட்டுதல், முறையாக வரி செலுத்துதல் போன்றவை தொழில்சார் அறங்கள் எனலாம்.

தொழில்சார் அறம், தொழிற்கூடங்கள் செயல்படும் முறையில் ஏற்படும் தவறுகளைக் களைந்து சரியான நடைமுறைகளைப் பின்பற்றச் செய்வதாகும்.

தொழிற்கூடங்களிலும், நிறுவனங்களிலும் அறவியல் நடைமுறைகளைத் தொடர்ந்து கண்காணித்து, உயர் மதிப்பீடுகளைப் பின்பற்றச் செய்வதே தொழில்சார் அறம் எனலாம்.

தொழில்சார் அறம் பற்றிய பொதுக் கருத்துகளுக்கு ஏற்ப தனிமனிதர்களும் நிறுவனங்களும் தமக்கான அறவியல் கோட்பாடுகளை வகுத்துச் செயல்படுதல் சிறப்பாகும்.

பரந்த சமூகக் கண்ணோட்டத்துடன் தொழில்சார் அறங்களை உருவாக்க வேண்டும். தொழில் முனைவோரும் நிர்வாகிகளும் பணியாளர்களும் தங்கள் பணியைச் செவ்வனே செய்வதற்கு வழிகாட்டுவதே தொழில்சார் அறங்களின் முதன்மை நோக்கமாகும்.

தொழில்துறையின் செயல்பாடுகள், தனி மனிதனுக்கோ, சமூகத்திற்கோ தீங்கு விளைவிப்பதாக இருக்கக் கூடாது. ஒவ்வொரு தொழிலுக்கும் அதைச் சார்ந்துள்ளோருக்கும் செயல்பட்டு வரையறைகள் உண்டு. அத்தகைய வரையறைகளைப் புரிந்துகொண்டு செயலாற்ற வேண்டும். சமூகப் பொருளாதாரச் சூழல்களுக்கு ஏற்றவாறு தொழில்சார் அறங்கள் வகுக்கப்படவேண்டும். சூழலின் மாற்றங்களுக்கேற்ப அவை ஆய்வுக்குட்படுத்தப்பட்டுத் தேவையான திருத்தம் அவ்வப்போது மேற்கொள்ளப்பட வேண்டும்.

### தொழில்சார் அறங்களின் தேவை

விழுமியங்களைப் பேணும் நிறுவனத்தோடு தொடர்கொள்ள மக்கள் விரும்புவர். அத்தகைய நிறுவனங்களில் பணியாற்றுவதில் ஆர்வம் காட்டுவர். தங்கள் பணத்திற்கு மதிப்பளித்து, நேர்மையாகச் செயல்படக் கூடிய நிறுவனங்களின் தயாரிப்பையே மக்கள் வாங்குவர். இதனால் தான் பல நிறுவனங்கள் தாங்கள் தயாரிக்கும் பொருள்கள் தரமானவை என்றும் பாதுகாப்பானவை என்றும் விளம்பரம் செய்கின்றன.

உயர் விழுமியங்களுடன் இயங்கும் ஒரு நிறுவனத்திலர் பணியாற்றும் ஊழியர்கள், தங்கள் நிறுவனத்தைப் பற்றிப் பெருமிதம் கொள்வர். அந்த நிறுவனத்தின் இலக்குகளையும், புகழையும் வளர்த்தெடுப்பதில் ஊக்கத்துடன் செயல்படுவர். பொதுமக்களின் மதிப்புக்குரிய அந்நிறுவனத்தின் மனிதவள நிர்வாகி, ஊழியர்களாலும் விரும்பப்படுவார். தாம் பணி செய்யும் நிறுவனத்தின் சமூகக் கண்ணோட்டத்தையும் உயர் விழுமியங்களையும் தம் ஊதியத்தைவிட மேலானதாகப் பணியாளர்கள் கருதுவர்.

இத்தகைய நிறுவனங்கள் தொழிலின் நீண்ட கால வளர்ச்சி, பணியாளர் நலன், சமூக நலன் போன்றவற்றைக் கருத்தில் கொண்டே முக்கிய முடிவுகளை எடுக்கின்றன. அறவியல் வழி நடக்கும் நிறுவனங்கள், தொடக்கத்தில் கடினமான சூழ்நிலையைச் சந்திக்க நேரிட்டாலும் காலப்போக்கில் வெற்றிகரமான நிறுவனங்களாக நிலைத்துவிடுகின்றன.

**தொழில்சார் அறப்பண்புகள்**

நேர்மையும் பிறரை மதித்தலும் தொழில் சார்ந்த அறப்பண்புகளாக உள்ளன. ஒரு நிறுவனத்தின் செயல் தலைவராயினும், உயர் அதிகாரியாயினும் தொழில் நியதிகளுக்கும் ஒழுகலாறுகளுக்கும் அவர்கள் கட்டுப்பட வேண்டும். அத்தகைய நடத்தை, ஊழியர்களுக்கு முன்மாதிரியாக அமைவதுடன், அவர்கள் அறங்களைப் பின்பற்றுவதற்கும் ஊக்கமளிக்கும். நிறுவனத்தின் அறங்கள் அனைத்தும் நடத்தை விதிகளாக வகுக்கப்பட்டு, முறையாக அவை ஆவணப்படுத்தப்பட வேண்டும். நேர்மை, தரம், பாதுகாப்பு, பணியாளர்களின் நலன் போன்றவற்றை அவை பேண வேண்டும். இத்தகைய அறங்கள் சரியாகப் பின்பற்றப்படுகின்றனவா எனத் தொடர்ந்து மேலாண்மை அமைப்புகளால் கண்காணிக்கப்பட வேண்டும். இவை பற்றிய தெளிவான அறிக்கைகளும் தொழில் நிறுவனங்களுக்குத் தொடர்ந்து அனுப்பப்பட வேண்டும்.

**கல்வி அறம்:**

மனிதனை மனிதனாக மாற்றுவதற்குக் கல்வி இன்றியமையாதது. ஒவ்வொரு மனிதனும் தனது இலக்குகளை அடைவதற்குக் கல்வி உறுதுணை புரிகிறது. இச்சமூகத்தில் ஆசிரியர் பணி என்பது. ஓர் உன்னதமான அறப்பணியாகும். இப்பணிக்குப் பல அறங்கள் உள்ளன. விருப்பு வெறுப்பின்றி அனைவருக்கும் அறிவளிப்பதை இலக்காக்கி ஆசிரியர்கள் கற்பிக்க வேண்டும். ஆசிரியர்களை மதித்து, அவர்களது அறிவுரைகளை ஏற்று மாணவர்களும் கற்க வேண்டும்.

**ஆசிரியர்கள் அணுகுமுறை:**

ஆசிரியர்கள், தம் வகுப்பறைகளில் உற்சாகமூட்டும் வகையிலும், மாணவர்கள் மனம் கலந்து பங்கேற்கும் வகையிலும் கற்பிக்கும் முறையைப் பின்பற்ற வேண்டும். அப்போதுதான், மாணவர்களது படைப்பாற்றல் வெளிப்படும்.

- ஒவ்வொரு குழந்தைக்கும் தரமான கல்வி பெறும் உரிமை உண்டு என்பதை உணர்த்துதல்.
- ஒட்டுமொத்த மனிதவள வளர்ச்சிக்கும் கல்வி பயன்படும் என்பதை ஏற்றுக்கொள்ளுதல்
- குடியாட்சி, சமூக நீதி, சமய நல்லிணக்கம் போன்ற குறிக்கோள்களின் மீது நம்பிக்கையை ஏற்படுத்துதல்
- நாட்டின் வளமான பண்பாட்டுப் பின்புலங்கள் குறித்த அறிவு, நாட்டுப்பற்று, உலக நடைமுறைகளைப் பற்றிய புரிதல், உலக அமைதி போன்ற கருத்துகளைக் கல்வியின் மூலம் வளர்த்தெடுத்தல்.
- மக்களின் தேவைகளையும் நம்பிக்கைகளையும் புரிந்துகொண்டு செயல்படல்.
- ஆசிரியர் பணிக்குத் தேவையான அறிவாற்றல், தனித்துவமான திறமைகள், கற்பித்தலில் ஆழ்ந்த ஈடுபாடு, உலகியல் அறிவு போன்ற தகுதிகளைப் பெற்றிருத்தல்.
- ஆசிரியரின் தனிப்பட்ட நற்பண்புகளும் கற்பிக்கும் திறனுமே அவருக்குரிய நன்மதிப்பைச் சமூகத்தில் பெற்றுத்தரும் என்பதை அறிந்திருத்தல்.

**ஆசிரியர் - மாணவர் உறவு**

- கல்விப்பணிகளில் காலந்தவறாமை.
- பாடங்களைக் கற்பிப்பதற்குத் தகுந்த முன்னேற்பாட்டுடன் செல்லுதல்.

- அன்போடும் அரவணைப்போடும் மாணவர்களை அணுகுதல்

- மாணவர்களிடம் சாதி, மதம், இனம், மொழி, பொருளாதாரம், பாலினம், நாடு போன்ற வேறுபாடுகளைக் காட்டாமை.

- மாணவர்களின் உடல் தகுதி, உணர்வுத் திறன், அறிவு வளர்ச்சி, சமூக உணர்வு, ஒழுக்க நெறிக்கான வழிகாட்டல்களில் கவனம் செலுத்துதல்

- மாணவர்களின் தனிப்பட்ட மற்றும் சமூகப் பின்புலங்களைப் புரிந்துகொண்டு, அவற்றின் அடிப்படையில் அவர்களுக்குக் கற்பித்தல்

- ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறைகளைத் தவிர வேறு எவ்வகையிலும் கல்வி கற்பிப்பதற்காக மாணவர்களிடம் கட்டணம் பெறாமை.

- மாணவர்களைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களைப் பெற்றோரைத் தவிரப் பிறர் எவரிடமும் வெளிப்படுத்தாமை.

- ஆளுமை விளக்கமாகத் திகழும் மெய்ப்பாடுகள் மூலம் மாணவர்களுக்குத் தகுந்த முன்மாதிரியாகத் திகழ்தல்.

- மாணவர்களின் கல்வி வளர்ச்சி அல்லது குறைபாடுகள் குறித்து, அவ்வப்போது பெற்றோர் அல்லது காப்பாளர்களுக்குத் தெரியப்படுத்தல்.

- மாணவர்களின் தன்னம்பிக்கையைக் குலைக்கும்படியாகப் பெற்றோர் அல்லது காப்பாளர்களிடம் பேசாதிருத்தல்.
- கல்விக்கூடத்தைச் சமூக மேம்பாட்டிற்குத் தேவையான அறிவு, தகவல்கள், திறன்கள் முதலியவற்றை வளர்க்கும் மனிதவள நிறுவனமாகக் கருதுதல்.
- சமூகச் சிக்கல்களைப் புரிந்துகொள்வதுடன், அவற்றை எதிர்கொள்வதற்குரிய திறன்களுடன் இருத்தல்.
- கல்விப்பணி மேம்பாட்டிற்கான தகுதி, பயிற்சி, ஆய்வரங்கம், கருத்தரங்கம், விவாதங்கள் ஆகியவற்றில் தொடர்ந்து பங்கேற்பதுடன் மாணவர்களையும் பங்கேற்கச் செய்தல்
- ஒவ்வொரு மாணவனின் கல்வித்தகுதியையும் தனித்திறன்களையும் வளர்த்தெடுப்பதில் பங்காற்றுதல்

மாணவர்களின் அறிவுத்தேடல் திறனைக் கூர்மைப்படுத்தி, அவர்களின் ஆக்கத்திறனை மேம்படுத்துவதற்கு உறுதுணையாக இருப்பது தான் ஆசிரியர் மாணவர் உறவின் சிறப்பம்சமாகும்.

**உயர்கல்வி:**

உயர்கல்வித்துறையில் பணிபுரியும் ஆசிரியர்கள், எதிர்காலச் சமூகத்திற்கு வழிகாட்டும் முன்மாதிரிகளாகத் திகழவேண்டும். மனிதவளத் துறையின் இதயங்களான இளையோரைப் பேணும் பொறுப்புமிக்கவர்களாகத் தம்மைத் தகவமைத்துக்கொள்ள வேண்டும். உயர்கல்வி பயிலவரும் மாணவர்களின் பதின்ம வயது காரணமாக, எதிர்மறைச் சக்திகள் இவர்களைத் தவறாகப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கக் கூடாது. இளம் சமுதாயத்தினரைப் பொறுப்புணர்வுடன் ஆசிரியர்கள் வழிநடத்த வேண்டும்.

இவர்களைத் தவறாகப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கக் கூடாது. இளம் சமுதாயத்தினரைப் பொறுப்புணர்வுடன் ஆசிரியர்கள் வழிநடத்த வேண்டும்.

உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்குச் சமூகம் குறித்துப் பற்பல கேள்விகள் எழும். அதன் காரணமாகச் சுதந்திரமான சிந்தனையுள்ள மாணவர்கள், சமூகச் செயல்பாடுகளில் கவனம் செலுத்தத் தொடங்குவர். இது பிற்காலத்தில் சமூகத்தில் பற்பல மாற்றங்களை ஏற்படுத்தக் கூடும்ட. இத்தகைய பொறுப்புணர்வு உள்ள இளம் சமுதாயத்தை உருவாக்குவதே, கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களின் உன்னத நோக்கமாதல் வேண்டும்.

உண்மையையும் பக்குவத்தையும் கல்வி வாயிலாக அடைய விழையும் மாணவர்களின் கல்விப்பயணத்தில் சிறந்த வழிகாட்டியாகத் திகழவேண்டியது ஆசிரியரின் கடமையும் பொறுப்பும் ஆகும். இத்தகைய பண்புகளை வளர்த்தெடுக்கும் வகையில், அனைத்திந்தியக் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகம் பேராசிரியக் கூட்டமைப்பு, ஆசிரியர்களுக்கான அறவியல் கோட்பாடுகளை வடிவமைத்துக் தந்துள்ளது. அவை வருமாறு:

- பல்கலைக்கழகங்களும், கல்லூரிகளும், பேராசிரியர்கள் கல்விப்பணி சார்ந்த தம் கடமைகளைச் செவ்வனே செய்வதற்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தித் தரவேண்டும்.

- பல்கலைக்கழக உயர் அதிகாரிகள், கல்லூரி நிர்வாகிகள், கல்வித்துறையைச் சார்ந்த செயலர்கள். இயக்குநர்கள், பெற்றோர்கள், பாதுகாவலர்கள், மாணவர்கள் மற்றும் பிற பணியாளர்கள் என அனைவருக்கும் உரிய அறக்கோட்பாடுகள் தெளிவாக வரையறுக்கப்பட்டு வழங்கப்படுதல் வேண்டும்.

- கல்விப்பணியில் ஈடுபட்டுள்ள துணைவேந்தர்கள், பதிவாளர்கள், பல்கலைக்கழக மற்றும் கல்வி நிறுவனத் தாளாளர்கள், பெற்றோர்கள் மாணவர்கள் ஆகிய அனைவருக்கும் உரிய நடத்தை விதிகள் வகுத்தளிக்கப்பட வேண்டும். அப்போதுதான் உயர்கல்வி நிறுவனங்கள், அரசியல் தலையீடுகளுக்கோ மற்ற சமூக நிறுவனங்களின் அழுத்தங்களுக்கோ இடந்தராது சுதந்திரமாகச் செயல்பட்டுக் கல்விப்பணியில் திறனுடன் திகழ முடியும்.

- அறிவியல் மனிதனின் திறமைகளை வளர்த்தெடுக்கும் கருவி மட்டுமன்று. அவே வாழ்வியல் பழக்கமாகவும் மாறவேண்டும். கூர்த்த அறிவுத்திறன், நன்னடத்தை, ஏற்றுக்கொண்ட செயல்களில் முழு ஈடுபாடு போன்றவை அறிவியல் கல்வியினால் கிடைக்கும் கூடுதல் நன்மைகளாகும்.

- கல்வி கற்பது என்பது அறிவு வளர்ச்சியுடனோ, திறன் மேம்பாட்டுடனோ நின்றுவிடக்கூடாது. மற்றவர்களுக்காக வாழ்வதற்கும் மற்றவர்களோடு வாழ்வதற்கும் அது உதவ வேண்டும். சிந்தனையையும் செயலையும் கூர்மைப்படுத்தாத கல்வி, அறம் இல்லாத அதிகாரப்போக்குள்ள மனிதர்களையே உருவாக்கும். அன்பும் பண்புமுள்ள மனிதர்களை உருவாக்குவதற்கு அறப்பண்புடன் கூடிய கல்வியே தேவையாகும்.

- தனி மனிதன், சமூகம், நாடு ஆகியவற்றின் எதிர்காலத்தைத் தீர்மானித்துக் கட்டமைக்கும் வல்லமையுடன் கல்விக்கூடங்கள் உள்ளன. இதில் பங்கேற்கும் கல்வியாளர்களுக்குக் கடமையும் பொறுப்பும் மிகுதி, உண்மை, நேர்மை, அமைதி, அகிம்சை, அன்பு ஆகிய உயரிய விழுமியங்களின் அடிப்படையில் தமக்குத் தாமே அறக்கோட்பாடுகளை வகுத்துக்கொண்டு கல்வியாளர்கள் பணியாற்ற வேண்டும்.

கல்வியின் நோக்கம் முழுமையான மனிதனை உருவாக்குவதாகும். தனி மனிதனாக, குடும்ப உறுப்பினனாக, சமூக மனிதனாக, நாட்டின் நல்ல குடிமகனாக, புதியனவற்றைக் கண்டுபிடிப்பவனாக, ஆய்வியல் அறிஞனாக, எதிர்காலச் சமூக உருவாக்கம் குறித்த கனவுகள் உள்ளவனாகத் தான் பெற்ற கல்வியால் மேம்பாடு அடைபவனாக மாணவன் இருக்க வேண்டும். இவற்றை அடைவதற்கு வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கல்வி கற்றலே சிறந்த வழியாகும்.

**மருத்துவ அறம்:**

- இந்திய மருத்துவத்துறை மிகவும் தொன்மையானது. மருத்துவர்களுக்கான கல்வி, நோயைக் கண்டறியும் திறன், நோயாளிகளை அணுகும்முறை போன்றவை பற்றிய இந்திய மரபுசார் மருத்துவ அறிவு மிகவும் வளமானதாகும்.

- மருத்துவக்கல்வி மாணவர்கள், தம் துறையில் முழுப் பற்றுடனும் ஒப்பளிப்போடும் இருப்போம் என்று உறுதிமொழி எடுத்துக்கொள்ள வேண்டும்.

- மருத்துவப்பயிற்சியின் போது கற்றல், கற்பித்தல், உரையாடுதல் ஆகிய வழிகளில் மருத்துவக்கல்வியை மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

- நோயாளியின் உடலுறுப்புகளை அறிவொளியால் ஆய்ந்தறிபவராக மருத்துவர்கள் திகழவேண்டும்.
- நோயாளியின் உடல்நிலையை ஆய்ந்தறிந்த பிறகே அவருக்குரிய மருத்துவத்தைத் தொடங்க வேண்டும்.
- கனிவோடும், கருணையோடும் நோயாளியைக் கவனிக்க வேண்டும்.
- மருத்துவர்கள் அறவழியில் செயல்பட வேண்டும்.

| |
|---|
| சில மருத்துவர்கள் நோயாளியின் உடலைக் குணப்படுத்துவர். சிலர் மனத்தைக் குணப்படுத்துவர். ஆனால் இரண்டையும் சமமாகக் கருதி மருத்துவம் செய்வதே சிறந்த மருத்துவ முறை என்கிறார் கிரேக்கத் |

**உலகச் சுகாதார நிறுவனம் பரிந்துரைத்துள்ள மருத்துவ அறங்கள்**

- "அனைவருக்கும் ஆரோக்கியம்" என்ற இலக்கை நோக்கிச செயலபடுதல்
- பச்சிளங்குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் முன்னுரிமை அளித்தல்.
- பிறப்பு, இறப்பு விகிதங்களைக் குறைத்தல்
- பச்சிளங்குழந்தைகள் / சிறார்கள் போன்றோரின் இறப்பு விகிதங்களைக் குறைத்தல்
- பேறுகால இறப்பு விகிதங்களைக் குறைப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்து செயல்படுத்துதல்.
- நகர்ப்புற / கிராமப்புறப் பகுதிகளில் குடும்பநல / உடல்நல மையங்களை ஏற்படுத்தி முறையாகப் பேணல்.
- உயிருக்க ஊறுவிளைவிக்கக்கூடிய தொற்று நோய்கள் / தொற்றா நோய்களைக் கண்டறிந்து அவற்றிற்கு ஏற்ற தடுப்பு முறைகளையும் நோய் நீக்கும் முறைகளையும் மேற்கொள்ளுதல்.
- எந்நேரத்திலும், உயிர் காக்கும் மருந்துகள் தட்டுப்பாடின்றிக் கிடைக்க வழிவகை செய்தல்.
- மாநில / மாவட்ட அளவில் தரமான மருத்துவம் வழங்கப்படுகின்றதா எனத் தொடர்ந்து கண்காணித்தல்.
- நாடு முழுவதும் உள்ள மக்கள் அனைவருக்கும மருத்துவக் காப்பீடு அளித்தல்.
- இயற்கைப் பேரிடர்க் காலங்களில் ஏற்படும் தொற்றுநோய்களிலிருந்து பாதுகாப்பதற்குத் தேவையான உடனடி மருத்துவ மையங்களை எப்பொழுதும் ஆயத்தநிலையில் வைத்திருத்தல்
- போர், தீவிரவாத நடவடிக்கைகள் போன்ற எதிர்பாராத இடர்களின்போது, தரமான மருத்துவம் வழங்குவதற்குத் தயாரான நிலையில் மருத்துவத்துறையை ஆயத்தப்படுத்துதல்.
- மருத்துவக் கல்வி, ஆராய்ச்சி போன்றவற்றில் தொடர்ந்து கவனம் செலுத்தி மருத்துவக் கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், ஆரம்பச் சுகாதார நிலையங்கள் போன்றவற்றில் மனிதவளக் குறைபாடு ஏற்படாமல் கண்காணித்தல்.
- மருத்துவ முறையில் வளர்ந்த / வளரும் நாடுகளுக்கு இடையிலான இடைவெளியைக் குறைப்பதற்குத் தொடர்ந்து முயற்சி எடுத்தல்.

- மருத்துவ முறைகளான சித்தா, ஆயுர்வேதம், யுனானி போன்றவற்றில் உயர் ஆய்வுகள் மேற்கொண்டு அதன் சிறப்புகளைப் பொதுமக்கள் அனைவரும் அறியச் செய்ய வேண்டும்.

**மருத்துவரின் பொறுப்புணர்வுகள்**

- நோயாளிகளுக்கு மருந்துகளால் ஏற்படும் பக்கவிளைவுகளைக் குறைப்பதோடு, அவை பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டும்.

- நோய்கள் தொடர்பான அனைத்தையும் மருத்துவரிடம் நோயாளி ஒளிவுமறைவின்றித் தெரிவிக்க வேண்டும்.

| |
|---|
| இந்திய மருத்துவக் கழகம் (Medical Council of India – MICI) 1934 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இது இந்தியாவிலுள்ள மருத்துவர்களுக்கான நடத்தை விதிகளைத் தீர்மானிக்கிறது. |

**வணிக அறம்**

- வணிகச் செயல்பாடுகளாலும், வணிக முடிவுகளாலும் ஏற்படும் தீமைகளை விலக்கிப் பொதுநன்மை கருதும் வரம்புகளைத் தொழில் நிறுவனங்கள் வகுத்துக் கொள்வதும், தம் கடமையையும் பொறுப்புணர்வையும் அறிந்து செயல்படுவதும் வணிக அறமாகும்.

**வணிக அறத்திற்குரிய முதன்மை விதிகள்**

- வணிக அறம் என்பது அண்மைக்காலத்தில் தோன்றிய கருத்தாகும்.

- வளர்ந்த நாடுகள், இத்தகைய கருத்தாக்கங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் அவற்றைச் செயல்படுத்துவதிலும் சிறந்த முன்மாதிரிகளாக உள்ளன.

- தம் தொழில்களில் செய்யவேண்டியவற்றை ஏற்றுக்கொண்டு, செய்யக்கூடாதவற்றை விலக்கியும், உரிய விதிகளை வகுத்தும் சமூகநீதி மற்றும் பொதுநன்மை கருதியும் வணிக நிறுவனங்கள் செயல்படவேண்டும்.

- வாடிக்கையாளர், பணியாளர், சிறுவணிகர், பங்குதாரர்கள், கடனுதவி வழங்கியோர், அரசமைப்பினர் ஆகியோரின் நலன்களைப் பாதுகாக்க வேண்டும்.

- சட்ட நியதிகளுக்குட்பட்டுப் பண்பாட்டு விழுமியங்களுடன் தொழில்நிறுவனங்கள் செயலாற்ற வேண்டும்.

- தொழில் நிறுவனத் தலைவர்கள், தம் நிறுவனங்களின் அறவியல் கோட்பாடுகளைச் செயல்படுத்துவதில் முன்மாதிரிகளாகத் திகழவேண்டும்.

- வணிக அறிவியல் குறித்த முறையான கல்வி அறிவுடையவராகவும், அறிந்த அறிவைச் செயல்படுத்தத் தக்க நடைமுறைகளை அறிந்தவராகவும் நிறுவனத் தலைவர்கள் இருக்க வேண்டும்.

- வணிக அறங்கள் சூழ்நிலைக்கு ஏற்பவும், நிறுவனங்களின் தன்மைக்கேற்பவும், அவை செயல்படும் நாடுகளின் நலனுக்கேற்பவும் மாறும் தன்மையுடையன. வளரும் நாடுகள், இத்தகைய வணிக அறக்கோட்பாடுகளைப் பின்பற்றுவதில் பின்தங்கியேயுள்ளன.

- ஒவ்வொரு நிறுவனமும் அதன் உயர்அதிகாரிகளும், பணியாளர்களும் நிறுவனத்தை நடத்திச் செல்வதற்கு என்று வகுக்கப்பட்ட அறவியல் நடைமுறைகளையும் கொள்கைகளையும் பின்பற்றி நடத்தல் வேண்டும்.

- சட்ட வரைவுகளுக்கும் மனித நியதிகளுக்கும் கட்டுப்பட்டு நடப்பதோடு, அவற்றை மீறுவதற்கான சூழல்களையும் கவனமாக ஆராய்ந்து அவற்றைத் தவிர்க்க வேண்டும். இக்கடமைகளிலிருந்து பிறழும் வணிக நிறுவனங்கள் காலப்போக்கில் மதிப்பிழந்து விடும்.

- தொழில் / வணிக நிறுவனங்கள், தாம் ஈட்டும் பொருளில், குறிப்பிட்ட ஒரு தொகையைச் சமூகத்திற்காகச் செலவிடுவது கட்டாயமாகும். நூலகம், சுகாதாரம், கல்வி நிறுவனங்களின் உள்கட்டமைப்பு மேம்பாடு, கிராமப்புற மேம்பாடு, சாலை வசதி குடிநீர் வசதி ஆராய்ச்சி போன்றவற்றிற்குப் பெருநிறுவனங்கள் நிதி உதவி செய்யவேண்டும்.

வணிகத்தின் சிறப்புப் பற்றிப் பின்வருமாறு பட்டினப்பாலை கூறுகிறது.

நெடுநுகத்துப் பகல் போல,
நடுவுநின்ற நல்நெஞ்சினோர்,
வடுஅஞ்சி வாய்மொழிந்து,
தமவும் பிறவும் ஒப்ப நாடிக்
கொள்வதூஉம் மிகைகொளாது,
கொடுப்பதூஉம் குறைகொடாது,
பல்பண்டம் பகர்ந்து வீசும்
(பட்டினப்பாலை : 206 - 211)

பண்ட விலைக்கு மிகையாகவோ குறையாகவோ கொடுக்காமல் வணிகம் செய்ய வேண்டும் என்கிறது பட்டினப்பாலை.

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின் (குறள் : 120)

என்கிறார் வள்ளுவர். ‘‘மற்றவர்களுடைய பொருளைத் தம்பொருள் போலப் பேணி, அறவழியில் வணிகம் செய்வதே மேலானது என்பது அவரது கருத்தாகும்.

**நுகர்வோர் உரிமைகள்**

நுகர்வோர் ஏமாற்றப்படுவதைத் தடுக்கும்பொருட்டு, இந்தியாவில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் (Consumer Protection Act), 1986 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்தின் மூலம், நுகர்வோர் ஒவ்வொருவருக்கும் கீழ்க்காணும் உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.

| |
|---|
| 2005 ஆம் ஆண்டு, அக்டோபர் 12 ஆம் நாள், தகவல் அறியும் உரிமைச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இச்சட்டத்தின் மூலம், பொது நிறுவனங்கள் சார்ந்த தகவல்களை அறிந்துகொள்வதும் பொது மக்களின் உரிமையாகிறது. |

- பாதுகாப்பு உரிமை
- தகவல் பெறும் உரிமை
- தேர்வு செய்யும் உரிமை
- கேள்வி கேட்கும் உரிமை
- நேர்மையற்ற வணிகத்திலிருந்து பாதுகாக்கும் உரிமை
- இழப்பீடு பெறும் உரிமை
- தூய்மையான சுற்றுச்சூழல் பெறும் உரிமை
- அடிப்படை வசதிகள் பெறும் உரிமை

இச்சட்டத்தின்படி பொருள்களுக்கு இருக்கவேண்டிய தகுதி (Quality), அளவு (Quantity), ஆற்றல் (Potency), தூய்மை (Purity), தரம் (Standard) ஆகியன இல்லாததே குறைபாடு (Defect) எனப்படும். இக்குறைபாடுகள் இல்லாமல் மக்களுக்குப் பொருள்களை வழங்கவேண்டும். இக்குறைபாடுகள் காணப்பட்டால் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அந்தந்த மாவட்ட நுகர்வோர் நீதிமன்றங்களை அணுகித் தமக்கு ஏற்பட்ட குறைபாடுகளைத் தீர்த்துக் கொள்ளலாம்.

| |
|---|
| உலக அளவில், பொருள்களின் தரத்தை உறுதி செய்வதற்கு உலகத்தர அமைப்பு (ISO) |

1947 ஆம் ஆண்டில் ஜெனிவாவில் தொடங்கப்பட்டது. இந்தியத் தர நிர்ணய அமைப்பு நுகர்வோர் நலன், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின் ஆளுமைக்குட்பட்ட ஓர் அமைப்பாகும்.

ஒவ்வோர் ஆண்டும், மார்ச் 15 ஆம் நாள் உலக நுகர்வோர் தினமாகவும், டிசம்பர் 24 ஆம் நாள், தேசிய நுகர்வோர் தினமாகவும் கொண்டாடப்படுகிறது.

**சட்ட அறம்**




இந்திய வழக்குரைஞர் கழகம்

- நீதிமன்றத்தில் வழக்காடும்போது, வழக்குரைஞர்கள் கண்ணியத்துடனும் சுயமரியாதையுடனும் நடந்துகொள்ள வேண்டும்.
- நீதிமன்றச் சட்ட திட்டங்களை மதித்து நடக்க வேண்டும்.
- நீதிமன்றங்களால் மட்டுமே சமூகத்தின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்
- சொந்த விருப்பத்தின் அடிப்படையிலேயே வழக்குகளை எடுத்து வாதாடவேண்டும்.
- நீதிமன்றத்தில் கண்ணியமான சொற்களைப் பயன்படுத்த வேண்டும்.
- எதிர்த்தரப்பினரின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் செயல்களில் ஈடுபடக்கூடாது.
- தாத்தா, பாட்டி, தந்தை, தாய், கணவன், மனைவி, மகன், மகள், பேரன், பேத்தி, உடன் பிறப்புகள், உடன்பிறப்புகளின் வாரிசுகள், மாமனார், மாமியார், தந்தை மற்றும் தயாரின் உடன்பிறப்புகள். அவர்களது வாரிசுகள் போன்ற உறவினர்களில் எவரேனும் நீதி அரசராக இருக்கம் போது அந்த நீதி மன்றம் வாதாடக்கூடாது.
- பணிபுரியும் நிறுவனத்திற்குச் சாதகமாகவோ, எதிராகவோ வாதாடக்கூடாது.
- தாமே சாட்சியாக இருக்கும் வழக்கில் வாதாடக் கூடாது.
- தம் வாடிக்கையாளரிடம் வழக்கு தொடர்பான விவரங்களை, வழக்கு தொடங்கியது முதல் வெளிப்படையாகவும் முழுமையாகவும் தெரிவிக்க வேண்டும்.
- தம் வாடிக்கையாளர் தம்மிடம் நம்பிக்கை வைத்துப் பரிமாறிக்கொண்ட தகவல்களை ஒருபோதும் முறைகேடாகப் பயன்படுத்தக் கூடாது.
- வாடிக்கையாளரின் நலம், நேர்மை, கண்ணியம் ஆகியவற்றைப் பாதுகாப்பது வழக்குரைஞரின் கடமையாகும்.
- தம் சொந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் வழக்குகளை அணுகக்கூடாது.
- தகுந்த சாட்சியங்கள் இல்லாமல் எவரும் தண்டிக்கப்படக்கூடாது. இதில் வழக்குரைஞர் உறுதியாக இருக்க வேண்டும்.

- குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு எதிராகக் குற்றம் தொடர்பான சாட்சி, தகவல் போன்றவற்றை வழக்காடுபவர் மறைத்துவைத்து அப்பாவிகள் தண்டனைக்கு உள்ளாகும்படி செய்யக் கூடாது.

| |
|---|
| இந்திய வழக்குரைஞர் கழகம் - Bar council of India - 1961 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இது இந்தியாவிலுள்ள வழக்குரைஞர்களுக்கான நடத்தை விதிகளைத் தீர்மானிக்கிறது. |

- வாடிக்கையாளருக்கும் தமக்கும் இடையிலான தகவல் பரிமாற்றங்களை, வழக்குரைஞர் நேரிடையாகவோ மறைமுகமாகவோ எவருக்கும் தெரிவிக்கக்கூடாது.

- வாடிக்கையாளருக்கு வழக்கு தொடர்பாகக் கூடிய அறிவுரைகள் பற்றி வெளியில் வழக்குரைஞர் பேசக்கூடாது.

- வாடிக்கையாளருக்கு வழக்கு தொடர்பான செலவுகள் குறித்து அவ்வப்போது தெரியப்படுத்த வேண்டும்.

- எதிர்த்தரப்பினருக்குத் தாம் வழங்கிய சட்ட அடிப்படையிலான உறுதிமொழிகளைக் காப்பாற்ற வேண்டும்.

- வழக்குரைஞர் எவரும் தமது தொழில் குறித்து விளம்பரம் செய்யக் கூடாது.

- சட்டத்திற்குப் புறம்பான வழக்குகளுக்குத் தம் சட்ட அறிவைப் பயன்படுத்தக்கூடாது.

வழக்குரைஞர்கள், தம் தொழிலைப் பொருள் ஈட்டுவதற்கான வழியாக மட்டுமே கருதக் கூடாது. மாறாகப் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையான சட்ட உதவிகளையும் அறிவுரையையும் வழங்கித் தம் வாதத் தறினால் உரிய தீர்ப்புகள் கிடைக்கச் செய்ய வேண்டும்.

வழக்குரைஞர்களின் கண்ணியம், நேர்மை, மனச்சான்றுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் நன்னடத்தை ஆகியவற்றால் மட்டுமே, சமூகம் பயன்பெறும். எனவே, ஒட்டுமொத்தச் சமூகமும் சட்டத்தின் வழி நீதி, நியாயம் ஆகியவற்றைப் பெறுவதற்குச் சட்ட அறங்கள் துணைநிற்க வேண்டும்.

**தொழில்நுட்ப அறம்**

நவீனத் தகவல் கருவிகளைப் பயன்படுத்திப் பொதுமக்களின் நடைமுறைச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதே தொழில் நுட்பமாகும். தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியால் உலகம் சுருங்கி ஒரு கிராமமாக மாறிவிட்டது. தொழில் நுட்பத்தின் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் சேவைகள் அறவியல் சார்ந்த சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றன. இத்தகைய அறம் சார்ந்த சிக்கல்களுக்குத் தீர்வு காண விழைவது தகவல் தொழில்நுட்ப அறமாகும்.

தொழில்நுட்ப நிறுவனங்களின் மென்பொருள்களைச் சந்தைப்படுத்தும் வேகத்தில், அறவியல் நெறிமுறைகளைப் பின்பற்றாத போக்கே நிலவுகிறது. வரையறுக்கப்பட்ட நெறிமுறைகள் இல்லாதபோது சிலர் அறியாமையாலும், பலர் சட்டங்களைப் பின்பற்றாமலும் தவறு செய்வதற்கு வழி ஏற்பட்டுவிடுகிறது. இவ்வாறு நடைபெறும் நிகழ்வுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த தொழில்சார் அறம் தேவைப்படுகிறது.

தொழில்நுட்பத்தின் மூலம் சமுதாயத்தைக் கண்காணிப்பதும், கட்டுப்படுத்துவதும் எவரையும் பாதிக்காதவாறு அமையவேண்டும். இதை உறுதி செய்வதே தொழில்நுட்பப் பணிசார் அறமாகும்.

தற்சார்பு, கண்ணியம், நாணயம், சவால்களை எதிர்கொள்ளுதல் போன்றவை சேவைத்துறையின் அடிப்படை அறங்களாகும். ஆனால், தொழில்நுட்பத்துறையின் இத்தகைய அடிப்படை அறவியல் நெறிகளுக்கு மாறான

**அரசியல் அறம்**

'அதிகாரம் என்பது ஒன்று, அறிவு ஞானம் என்பது வேறொன்று'. ஒரு தேசம் செல்ல வேண்டிய திசையைத் தீர்மானிப்பவர்கள் அதில் வாழும் மக்களின் கண்ணியம், தலைவர்களின் கண்ணியம், அரசியல் கட்சிகளின் கண்ணியம் என்று தனித்தனியாகப் பார்க்க வேண்டியதில்லை. நாடு செல்ல வேண்டிய எதிர்காலப் பாதையே எல்லோருக்கும் எல்லாவற்றுக்கும் போதுமானது.

\- டாக்டர் அம்பேத்கர்

செயல்பாட்டினால், பலவித இடர்ப்பாடுகளைச் சமூகம் சந்திக்க நேரிடுகிறது. தொழில் நுட்பத்துறையில் மென்பொறியாளரே தொழில் நுட்பத்தை உருவாக்குபவராகவும் பாதுகாப்பவராகவும் இருக்கிறார்.

தொழில்நுட்பத்தை மேலாண்மை செய்யத் தொடர்ந்து கண்காணிக்கவேண்டும். மனித குலத்தின் நிலைத்த நன்மைக்கு பயன்படுத்த அறவியல் வலியுறுத்துகிறது. சமூகம், சுற்றுச்சூழல் மற்றும் மனிதனின் பண்பட்ட வாழ்விற்கு, மிகப்பெரிய அச்சுறுத்தலாகத் தகவல்தொழில்நுட்பங்கள் உள்ளன. அந்த அச்சுறுத்தலைப் போக்கும் வகையில் தொழில்நுட்ப அறங்கள் செயல்படுத்தப்பட வேண்டும்.

**அரசியல் அறம்**

அரசியலின் நோக்கம், குடிமக்கள் அனைவரும் அமைதியாகவும் ஒற்றுமையுடனும் நல்வாழ்வு வாழ்வதற்கான சூழலை உருவாக்கித் தருவதாகும். குடிமக்களை நெறிப்படுத்தி நல்லதொரு சமுதாயத்தை உருவாக்குவதும் அரசின் கடமையாகும். அரசியலில் ஈடுபடுவோர் தம் கடமைகள் மற்றும் பொறுப்புகளிலிருந்து

**அறமும் அரசியலும்**

மக்கள் எல்லோரும் கூடி நடத்தும் அரசியலுக்கே அறம் சிறப்பாக வேண்டும். உடம்பின் நன்மைக்கு இரத்த ஓட்டம் எப்படிக் கட்டாயம் வேண்டுமோ, அதுபோல உலக நன்மைக்கு அறத்தின் அடிப்படை கட்டாயம் வேண்டும். அறம், யாரோ சில துறவிகளின் பேச்சு என்பது போய், வாழ்க்கைச் சட்டம் என்னும் தெளிவு வேண்டும். அரசியல் அல்லல் விளைப்பதற்கெல்லாம் முதல்காரணம் அறமாகிய அடிப்படையைப் புறக்கணிப்பதுதான் என்று உணரவேண்டும். காற்று ஊரெல்லாம் கெட்டிருக்கும்போது, நம் நுரையீரலில் மட்டும் தூய்மை நிலவவேண்டும் என்று எதிர்பார்க்கலாமா? பொது வாழ்க்கையாகிய அரசியலில் அறத்தைப் புறக்கணித்தபிறகு தனி வாழ்க்கையில் மட்டும் அறத்தைப் போற்றமுடியுமா? வெளிக்காற்றின் தூய்மையைக் கெடுக்காமல் காப்பது முதல் கடமை. அதை விட்டு மூச்சைப் பிடித்துத் திணறிப்பயன் என்ன?

மு. வரதராசனார்

விலகும்போதும், அரசின் கொள்கைகள் குடிமக்களுக்கு உகந்ததாக இல்லாதபோதும் அறம் சார்ந்த சிக்கல்கள் எழுகின்றன. இது போன்ற சூழ்நிலையில் அரசியல் அறம் சார்ந்த சிக்கல்களுக்குத் தீர்வு காண முனைவதும், அரசியல் செயல்பாடுகள் மீதான அறத்தீர்வுகளை வழங்குவதும் 'அரசியல் அறம்' எனப்படும். 'அரசியல் அறம்' அரசியல் தலைவர்கள் மற்றும் அவர்களின் அணுகுமுறைகள் பற்றி விவாதிப்பதும், அரசின் கொள்கைகள் மற்றும் சட்டங்கள் குறித்து விளக்குவதுமாகும்.

**திருக்குறளில் அரசியல் அறம்**

திருக்குறளில் நாடு, அரசன், ஆட்சிமுறை, குடிமக்கள், படை முதலியவற்றின் இயல்புகள் கூறப்பட்டுள்ளன.

ஆங்குஅமைவு எய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்துஅமை வில்லாத நாடு. (குறள் : 740)

ஒரு நாட்டில் எல்லா நலங்களும் வளங்களும் அமைந்திருப்பினும், நல்வேந்தன் ஆட்சியில் இல்லாவிடில், அந்நாடு எவ்வகையிலும் பயனில்லாத நாடாகும் என்கிறார் வள்ளுவர்.

பிணியின்மை செல்வம் விளைவுஇன்பம் ஏமம்
அணிஎன்ப நாட்டிற்குஇவ் வைந்து. (குறள் : 738)

நோயின்மை, செல்வம், நல்ல விளைச்சல், இன்பம், தக்க காவல் ஆகிய ஐந்தும் நாட்டிற்கு அணிகலன்கள் என்று வள்ளுவர் கூறுகிறார். இந்த ஐந்து அணிகலன்களில் எவ்விதக் குறைவும் இல்லாமல் நிறைவுடன் ஆட்சி செய்வது வேந்தன் மற்றும் ஆட்சியாளர்களின் கடமையாகும்.

படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசரள் ஏறு. (குறள் : 381)

படைவலிமை, நற்குடிமக்கள், உணவுவளம், நல்ல அமைச்சர், நல்ல நண்பர், காவல் நிலைகள் ஆகிய ஆறும் உடையவரே ஆட்சி செய்யத் தகுந்தவர் என்றும் வள்ளுவர் கூறுகிறார்.

**நிறைவுரை:**

தொழில்சார் அறம், கல்வி அறம், மருத்துவ அறம், வணிக அறம், நுகர்வோர் உரிமைகள், சட்ட அறம், தொழில்நுட்ப அறம், அரசியல் அறம் ஆகியன இப்பாடத்தில் விளக்கப்பட்டுள்ளன.

## அலகு 10
## அண்மைக்கால அறநெறிப் போக்குகள்

அண்ணல் காந்தியடிகளின் அறக்கோட்பாடுகளான உண்மை, அகிம்சை, சத்தியம், சர்வோதயம் ஆகியன விளக்கப்படுகின்றன. அவரின் சமுதாய அறம், சமயநெறி, சமய நல்லிணக்கம் ஆகிய கருத்துகளும் கூறப்பட்டுள்ளன. மனிதநேயம் - வரையறை, வள்ளலாரின் அறவாழ்வு, சுயமரியாதை இயக்கம் தோற்றுவித்த பெரியாரின் அறஞ்சார் குறிக்கோள்கள் ஆகியவையும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. சூழலியல் அறம், இராணுவ அறம், விலங்கு நல அறம் சார்ந்தும் பெண்ணிய அறம் சார்ந்த கருத்துகளும் முன்வைக்கப்படுகின்றன.

சமயநெறி, சமய நல்லிணக்கம் ஆகிய கருத்துகளும் கூறப்பட்டுள்ளன. மனிதநேயம் - வரையறை, வள்ளலாரின் அறவாழ்வு, சுயமரியாதை இயக்கம் தோற்றுவித்த பெரியாரின்

**காந்திய அறம்**

இந்தியாவில் தோன்றிய சமூகச் சீர்திருத்தவாதிகளுள் குறிப்பிடத்தக்கவர் காந்தியடிகள். இவர் உண்மை, அகிம்சை ஆகியவற்றைத் தம் வாழ்வின் அனைத்து நிலைகளிலும் பின்பற்றி வெற்றி கண்டவர். இவற்றின் மூலம், இந்தியாவை ஒரு சிறந்த அகிம்சை நாடாக உலகறியச் செய்தார்.

காந்திய அறக்கோட்பாடுகள் அனைத்திற்கும் அடிப்படையாக அமைவது ‘உண்மை’ மற்றும் ‘அகிம்சை’ என்ற இரண்டு அறநெறிகளே ஆகும். இந்தியா மட்டுமின்றி உலகமே வியக்கும்படி அன்பு, அகிம்சை, சத்தியம், தர்மம், தூய்மை, கடமை, தியாகம், எளிமை, புலனடக்கம், நம்பிக்கை போன்ற நற்பண்புகளைச் சிறுவயது முதற்கொண்டு வாழ்நாள் இறுதிவரை பின்பற்றியவர் காந்தியடிகள்.

அகிம்சை என்னும் அணுகுமுறையின் மூலம், சமூகப் பிரச்சனைகளுக்கு அறவழியில் தீர்வு கண்பார். அகிம்சைவழிப் போராட்டத்தின் மூலம் ஆங்கிலேயரிடமிருந்து இந்தியாவிற்கு விடுதலை பெற்றுத் தந்தார்.

**உண்மை**

அறவியலுக்கு அடிப்படையானதும் முதன்மையானதும் உண்மையே’ என்கிறார் காந்தியடிகள். உண்மையே கடவுள் என்றும் குறிப்பிடுகிறார். உண்மை என்பது அனைவரும் ஏற்கும் ஒன்றாகும். கடவுளை ஏற்காதோரும் உண்மையை ஏற்கின்றனர். உண்மை அன்றாட வாழ்வல் அனைவருக்கும் நன்மை பயப்பதாகும். கடவுளின் இயல்புகளாகிய இருப்புநிலை, உணர்வுநிலை, ஆனந்தம் என்பனவும் மாறா உண்மைகளாகும்.

அரிச்சந்திரன் உண்மைக்காகவும் சத்தியத்திற்காகவும் அரசாட்சி, நாடு, அரண்மனை, மனைவி, மகன், செல்வம் என அனைத்தையும் இழந்து பல சோதனைக்குட்பட்டபோதும் உண்மை பேசுவதைக் கைவிடவில்லை. இது சிறுவயதிலேயே காந்தியடிகளை மிகவும் கவர்ந்தது.

அன்பு அல்லது அகிம்சை மூலமாக மட்டுமே கடவுளை உணரலாம். மேலும், மனிதர்களுக்குச் செய்யும் தொண்டுகள் மூலமும் இறைவனைக் காணலாம் என்கிறார். மனிதர்களுக்குச் செய்யும் தொண்டே மனிதனை மனிதனோடு இணைக்கக்கூடிய செயலாகும். சமூகத் தொண்டுக்கு அப்பாற்பட்ட மகிழ்ச்சி என்பது இவ்வுலகில் இல்லை.

**அகிம்சை**

தனிமனிதன் பிற உயிர்களுக்கு எண்ணம், சொல், செயல் ஆகியவற்றால் தீங்கு விளைவிக்காத செயலே ‘அகிம்சை’ ஆகும். காந்தியடிகளின் கருத்துப்படி சத்தியமும், அகிம்சையும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களாகும். அகிம்சை நெறியைத் தனிமனிதநிலை முதல் குடும்பம், சமுதாயம், நாடு என அனைத்து நிலைகளிலும்

இருபதாம் நூற்றாண்டில் அமைதி வழிப்புரட்சி கண்டவர் காந்தியடிகள். அறம்பற்றிக் கூறும் காந்தியடிகளார் சமயத்தையும் ஆன்மீகத்தையும் அறத்துடன் இணைக்கின்றார். அறம் சமய அடிப்படை கொண்டது. தெய்வீகமானது – புலன் இன்பம் நாடாதது – வாழ்வுக்கு உயிரானது – தன்னலமற்றது

– செல்வவிருப்பற்றது – தியாகம் செய்வது – பிறர்க்கென வாழ்வது என்பன காந்தியடிகளார் காணும் அறத்தின் அடித்தளங்களாகும்.

“அறவியல் எண்ணங்கள் செயல்வடிவம் பெறாவிட்டால் பயனற்றதாகிவிடும். உடலாற்றல், அறிவாற்றல் இரண்டைக்காட்டிலும் ஒழுக்க ஆற்றலே உலகுக்கு நல்லது”.

கடைப்பிடிக்க வேண்டும். அதற்கான ஆற்றல் ஒவ்வொரு மனிதனிடமும் உள்ளது. மனிதரைத் திருத்த வேண்டுமென்றால் அவர்மீது அன்பு செலுத்தி, அகிம்சை வழிநின்று திருத்திவிடலாம் என்கிறார் காந்தியடிகள். சமயங்களில் கூறப்படும் அகிம்சைக் கோட்பாடுகளுக்குக் காந்தியடிகள் புதிய விளக்கம் கண்டார்.

**சத்யாகிரகம்**

சத்யம் + ஆகிரகம் = சத்யாகிரகம், சத்யம் - உண்மை, ஆகிரகம் - பற்றுதல். சத்தியாகிரகம் என்றால் உண்மையை உறுதியாகப் பற்றுதலாகும். மேலும், உண்மைக்காக அறவழியில் அமைதியாக எதிர்ப்பைத் தெரிவிப்பதுமாகும். உண்மையே கடவுளாக இருப்பதால் அறவழியில் போராடித் தீமையை வெல்லுவதே ‘சத்யாகிரகம்’ எனப்படுகிறது.

சத்தியாகிரகத்தைக் கடைப்பிடிப்பவர் தீமையை நன்மையின் மூலமும். கோபத்தை அன்பின் மூலமும், பொய்ம்மையை உண்மையின் மூலமும், வன்முறையை அகிம்சையின் மூலமும்

மகாத்மா காந்தியடிகள் சத்தியாகிரகக் கொள்கையைக் கடைப்பிடித்து முதன் முதலில் வெற்றி கண்டது தென்னாப்பிரிக்காவில் தான். அந்த அறவழி வெற்றியே இந்திய விடுதலைப் போராட்டத்திற்கும் வித்திட்டது.

வெற்றி கொள்ள வேண்டும். அகிம்சை என்பது, கோழைகளின் ஆயுதமன்று அது வீரம் உடையவர்கள் மட்டுமே கையாளக்கூடியதாகும். எளிமை, அமைதி, துறவு, தியாகம், புலனடக்கம், அன்பு, இரக்கம் ஆகிய பண்புகளை உடையவராகச் சத்யாகிரகி திகழவேண்டும். ‘சத்யாகிரகியாகத் திகழ விரும்புபவர், தம் தேவைகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும். அனைத்து மனிதர்களையும் பாகுபாடில்லாது மதித்தும், சமய நல்லிணக்கத்துடனும் வாழ வேண்டும். அகிம்சை தனிமனித வாழ்க்கைக்கான நடத்தை மட்டுமன்று, அரசியல் மற்றும் சமூகப் பொருளாதார வாழ்வுக்கும் ஏற்புடையதாகும். இதுவே உலகப் பண்பாட்டிற்குக் காந்தியடிகளின் கொடையாகும்.

**சத்தியாகிரகத்தின் பண்புகள்**

- கொண்ட கொள்கையில் பெருமையும், முயற்சியில் கண்ணியமும் கொண்டிருத்தல்.
- வெளிப்படையான எண்ணத்துடனும் திறந்த மனத்துடனும் செயலாற்றுதல்.
- எதற்கும் கலங்காது, அச்சத்தை வெற்றி கொள்ளும் திறன் பெற்றிருத்தல்.
- உண்மை ஈடுபாடும், செயலுறுதியும் கொண்டிருத்தல்
- மனம், வாக்கு, செயல் இம்மூன்றையும் ஒருங்கிணைத்துச் செயலாற்றுதல்
- தன்னடக்கம், பொறுமை, கடவுள் நம்பிக்கை முதலியவற்றைக் கொண்டிருத்தல்
- அடக்கம், எளிமை, தியாக மனப்பான்மை ஆகிய அரிய குணங்களைப் போற்றுதல்
- திருடாமை, பிறர் பொருளை விரும்பாமை, பிரம்மச்சரியத்தைக் கடைப்பிடித்தல்

தென்னாப்பிரிக்காவில் கருப்பர் இன மக்களின் விடுதலைக்காகப் பாடுபட்ட மார்டின் லூதர் கிங், காந்தியடிகளின் அகிம்சை நெறியைப் பின்பற்றி வெற்றி கண்டார்.

**சர்வோதயம்**

‘சர்வோதயம்’ என்ற சொல்லின் பொருள் ‘அனைவருக்கும் மேம்பாடு’ என்பதாகும். ஒரு நாட்டிலுள்ள மக்கள் அனைவருக்கும், அனைத்தும் கிடைக்க வேண்டும் என்பதே சர்வோதயம் ஆகும். சமுதாயத்தில் கடைநிலையில் இருப்பவர்களும் கல்வி, அரசியல், பொருளாதாரம், சமூகம் மற்றும் சமயத் துறைகளில் ஏற்றம் பெற வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். இக்கருத்தையே மேலை நாட்டு அறிஞரான ஹென்றி S.L. போலக் ஜான் ரஸ்கினின் ‘கடையனுக்கும் கடைத்தேற்றம்” என்ற

நூல் வலியுறுத்துகிறது. இந்நூலைக் காந்தியடிகள் படித்ததன் மூலம் சர்வோதயத்தின் அடிப்படை உண்மைகளைத் தெரிவு செய்தார்.

''சர்வோதயம்'' என்பது, ''முழுமையான வளர்ச்சி'' அல்லது அனைத்து நிலைகளிலும் மனிதன் அடையும் முழுவளர்ச்சி எனவும் பொருள்படும். அனைத்துச் பொருள்படும். அனைத்துச் சமூகத்தினருக்கும் எல்லா வகை நலன்களையும் பெற்றுத் தருவதே சர்வோதயம் ஆகும். அனைத்துத் தொழிலுக்கும் சமமதிப்பு, எத்தொழிலையும் மதித்தல், அனைவருக்கும் உடல் உழைப்பு என்பன சர்வோதயக் கொள்கையின் சிறப்புக் கூறுகளாகும்.

**காந்தியடிகளின் சமுதாய அறங்கள்**

நாட்டிலுள்ள அனைவரும் சகோதரர்களே, 'பிறப்பு' என்பது இனம், மொழி, சமயம், சாதி என்ற அனைத்தையும் கடந்த ஒன்று என்பதை அனைவரும் உணரவேண்டும். உண்மைக்குமுன் அனைவரும் சமம். எனவே, கடவுளுக்கு முன்பும் அனைவரும் சமம் என்ற காந்தியடிகளின் கருத்து சமுதாய ஒற்றுமைக்கு அடிப்படையானதாகும்.

ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் மதிக்கப்படவேண்டும். பெண்கள் அனைத்துத் துறையிலும் சம உரிமை பெற வேண்டும் என்பதில் இவர் உறுதியாக இருந்தார். மக்களின் உடல், உள்ளம், ஒழுக்கம், பொருள் ஆகியவற்றுக்கு மதுஊறு விளைவிப்பதால் மதுவிலக்கைக் கடுமையாக வலியுறுத்தினார். தொடக்கக்கல்வி, தாய்மொழியில் பயிற்றுவிக்கப்படவேண்டும் என்றார். கல்வி என்பது, பொருளாதாரத்திற்கு மட்டுமல்லாது, மாணவனின் உயிர், உடல், மனம் ஆகிய மூன்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருக்கும் என்றார். தொழிற்கல்விதான் நாட்டுக்க நலன் தரும் என்றும் காந்தியடிகள் கருதினார்.

ஒரு நாட்டில் வாழும் மக்களிடையே பிறப்பாலோ, சாதி மற்றும் மதங்களாலோ வேறுபாடு இருப்பின், அது சமூக ஒற்றுமைக்கு ஏற்புடையதன்று, மனிதன் சக மனிதனை நேசிக்க எண்ணம், சொல், செயல் மூன்றும் ஒரே நேர்க்கோட்டில் ஒழுக வேண்டும்.

இயற்கையோடு இயைந்த எளிய வாழ்க்கையே இன்ப வாழ்க்கை என்பதைத் தாமும் உணர்ந்து, உலகிற்கும் காந்தியடிகள் உணர்த்தினார். ஒவ்வொரு மனிதனும் அறவழியில் நின்று, பிறரை வருத்தாது, தனது தேவைகளுக்கு ஏற்பப் பொருள் ஈட்ட வேண்டும். ஈட்டிய பொருளை அளவோடு செலவிட்டுப் பிறருக்கும் கொடுக்க வேண்டும். எளிய உணவு, எளிய ஆடை, எளிய வாழ்வு, எல்லாரிடத்தும் அன்பு எனக் காந்தியடிகள் எளிமையின் இலக்கணமாய் ஆசிரம வாழ்வு வாழ்ந்தார். அவர் தமக்குரிய வேலைகள் அனைத்தையும் தாமே செய்து கொண்டார். அவரின் எளிய வாழ்க்கைதான், அவருக்கு மகத்தான ஆற்றலைக் கொடுத்து. 'மகாத்மாவாக' அவரை உயர்த்தியது.

**சமுதாயத்தின் ஏழு பாவங்கள் (Seven deadly sins)**

1. உழைப்பில்லாத செல்வம் (Wealth without work)
2. மனச்சான்றில்லாத மகிழ்ச்சி (Pleasure without conscience)
3. பண்பில்லாத அறிவு (Knowledge without character)
4. அறமில்லாத வணிகம் (Business with out morality)
5. மனித நேயமில்லாத அறிவியல் (Science without humanity)
6. தியாகமில்லாத சமயம் (Religion without sacrifice)
7. கொள்கையில்லாத அரசியல் (Politics without principle)

காந்தியடிகள் சிறுவயதிலிருந்தே 'எம்மதமும் சம்மதம்' என்ற கொள்கையுடையவர். ஒருவருடைய சிக்கல்களுக்காக அனைவரும் கடவுளிடம் கூட்டுப் பிரார்த்தனை செய்யும்போது, அனைவரிடமும் ஒற்றுமையுணர்வு ஏற்பட்டு, அந்த ஒற்றுமையின் வலிமையால் கடவுளைக் காணலாம் என்ற கருத்து அனைவராலும் ஏற்கப்பட்டது. மனிதனிடமுள்ள விலங்குத்தன்மையைத் திருத்திச் சீர்செய்வதே 'ஒழுக்கம்' என்றும், அதைத் தருவது சமயம் என்றும் காந்தியடிகள் கூறினார். சமயத்தின் சாரமே ஒழுக்கம், 'சமயமில்லாத வாழ்வு துடுப்பு இல்லாத படகு போன்றது' என்றும் கருதினார். வேத உபநிடதங்கள், மகாவீரர் அறிவுரைகள், பௌத்தப் பிடகங்கள், தோரா, பைபிள், திருக்குரான்,

கிரந்தசாகிப் போன்ற பல சமய புனித நூல்களில் உள்ள கருத்துகள், ஒரு சமயத்தவருக்கு மட்டுமே உரியவை அல்ல உலக மக்கள் அனைவரும் கற்றுணர்ந்து பின்பற்ற வேண்டியனவாகும் என்றும் காந்தியடிகள் வலியுறுத்தினார்.

மதங்களிடையே பல வேறுபாடுகள் இருந்தாலும், உண்மையைத் தவிர வேறு எதுவும் நிலைத்திருப்பதில்லை என்பதில் அனைத்துச் சமயங்களும் ஒன்றுபட்டுள்ளன. ஒவ்வொருவரும் தாங்கள் விரும்பிய சமயங்களில் இணைந்து அதற்குரிய வழிபாட்டு முறைகளைப் பின்பற்றி வாழ உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.

**மகாத்மா காந்தியடிகளின் மணிமொழிகள்**

- அன்பு, தன்னடக்கம் உள்ளவனிடத்தில் உண்மையைக் காணலாம்.
- ஆடை, அணிகலன்களில் அழகு இல்லை, உண்மையாகப் பணியாற்றுவதில்தான் அழகு உள்ளது.
- பிறரைத் தாழ்த்துபவன் எவனோ, அவன் பிறரால் தாழ்த்தப்படுவான்
- உண்மையான அன்பு, தியாகம் பலனை விரும்பாது.
- நமக்குத் தெரிந்த உண்மைப்படி வாழ்ந்தால் போதும். நமது உண்மை எதுவென்று கடவுளுக்குத் தெரியும்
- ஒழுக்கமில்லாத கல்வியால் பயன் ஏதும் இல்லை
- ஐம்புலன்களை அடக்காமல், மனத்தை அடக்க முடியாது.

போன்றவை மகாத்மா காந்தியடிகளின் மணிமொழிகளில் போற்றத்தக்கனவாகும்.

**சமய நல்லிணக்கம்:**

சமய நல்லிணக்கம் அல்லது மத நல்லிணக்கம் (Religious harmony) என்பது, ஒரு நாட்டில் அவரவர் தங்கள் சமயத்தைப் பின்பற்றி வாழும்போது, பிற சமயம் சார்ந்த மக்களின் நம்பிக்கைகளையும் உணர்வுகளையும் மதித்து ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி ஒற்றுமையுடன் வாழ்வதாகும். மக்களிடையே சமய நல்லிணக்கம் வளர, நமது அரசியல் அமைப்புச் சட்டம், மக்களுக்குப் பல உரிமைகளை வழங்கியுள்ளது. பல நூற்றாண்டுகளாகவே பல சமயத்தவர், பல இனத்தவர், பல மொழியினர், பல பண்பாட்டு மரபினர் வாழும் பன்மைச் சமூகமாகவே நம் நாடு திகழ்ந்து வருகிறது. பன்மைச் சமூகத்தில் சமய நல்லிணக்கம் இருந்தால் மட்டுமே அமைதியும், மகிழ்ச்சியும் நிலவும். எனவே, சமய நல்லிணக்கமே நம் நாட்டின் ஒற்றுமைக்கும் இறையாண்மைக்கும் வலுவான அடித்தளமாகிறது.

சமய நல்லிணக்கத்திற்குத் தடையாக இருப்பவை கொள்கை வேறுபாடுகள் அல்ல. சமயங்களுக்கிடையே காணப்படும் ஆதிக்க மனப்பான்மை, வெறுப்பு, பகைமை, பொறாமை, நம்பிக்கையின்மை போன்றவையாகும். இவற்றைக் களைய, மனிதர்களிடையே சமய சமரசம் வேண்டும்.

உலகிலுள்ள ஒவ்வொரு சமயத்தினரும் பிற சமயங்களின் கொள்கைகள், கோட்பாடுகள் மற்றும் தத்துவங்களைப் பற்றித் தெரிந்துகொண்டு அவற்றின் உணர்வுகளையும், உயர்ந்த பண்புகளையும் மதிக்கவேண்டும். ஒரு நாட்டில் 'மொழி, சமய, பண்பாட்டுப்பன்மை' இருப்பது என்பது தவிர்க்க முடியாததாகும். அவரவர் சமய உரிமைகளையும் நெறிகளையும் முறையாகப் பின்பற்றி வாழ்ந்துவந்தால் சமயப் பூசலற்ற சமத்துவச் சமுதாயம் உருவாகும்.

இந்துக்கள் நாகூராண்டவர் மசூதிக்குச் செல்வதும் - வேளாங்கண்ணித் திருச்சபைக்கு செல்வதும் - பிற சமயங்களோடு கொண்டுள்ள சமய

நல்லிணக்கத்திற்குக் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அனைத்துச் சமயங்களும் மனிதனுக்கு மிக உயரிய நிலையைக் கொடுத்துள்ளன. மனிதர்கள் அனைவரும் கடவுள் தன்மையை அடைய முடியும் என்பதை அனைத்துச் சமயங்களும் வலியுறுத்துகின்றன. இதையே காந்தியடிகளும் பரிந்துரைத்துள்ளார்.

சமயநல்லிணக்கம் சமூக நல்லிணக்கத்திற்கும், சமுதாய வளர்ச்சிக்கும் அடிப்படையாக உள்ளது. இதை நன்குணர்ந்த வள்ளலார், இராமகிருஷ்ணர், விவேகானந்தர், காந்தியடிகள் முதலானோர் சமய நல்லிணக்கத்தை வலியுறுத்தியுள்ளனர். சமய நல்லிணக்கம் என்பது, அனைத்துச் சமயங்களின் அடிப்படை உண்மைகளும் ஒன்றாகவே உள்ளன. அவற்றின் சடங்குகள், சம்பிரதாயங்கள் நடைமுறைகள் மட்டுமே வேறுபடுகின்றன. 'அனைத்துச் சமயங்களும் கடவுள் என்ற கடலைத் தேடிச் செல்லும் பல்வேறு நதிகள்' எனத் தாயுமானவர், வள்ளலார், இராமகிருஷ்ணர் எனப் பலரும் கூறியுள்ளனர். எனவே, சமய நல்லிணக்கம் இக்காலத்தின் தேவையாகும்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களின் பிறந்த தினமான ஆகஸ்ட் 20, சமய நல்லிணக்க நாளாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

'ஒரு மனிதன் எந்தச் சமயத்தைச் சார்ந்தவனாக இருந்தாலும், அவனை மகிழ்விப்பதும் அவனது பசிக்கு உணவளிப்பதும் துயர் துடைப்பதுமே மிகச்சிறந்த சமூகத் தொண்டு' என்று நபிகள் நாயகம் கூறுகிறார். எல்லாச் சமயங்களிலும் உள்ள நல்ல கருத்துகளை மக்களுக்கு எடுத்துரைத்து அவற்றை எல்லா மக்களும் பின்பற்றும் வகையில் அறியச் செய்வதால் உலகளாவிய சமத்துவமும் சகோதரத்துவமும் ஏற்படுவது உறுதியாகும். இதனால், சமய நல்லிணக்கம் மேம்படும் எனலாம்.

**மனித நேயம்:**

பிற உயிர்கள் மீது அன்பு செய்தல், பரிவு காட்டுதல், மன்னித்தல், ஒற்றுமையைப் பேணல், பகைவனுக்கும் நன்மை செய்தல் போன்ற உயரிய பண்புகளை உள்ளடக்கியதே மனித நேயம் ஆகும். இத்தகைய மனிதநேயப் பண்புகளைப் பண்டைய தமிழர்கள் தாங்கள் மேற்கொண்ட போர்முறை முதற்கொண்டு, பல்வேறு சமூக நெறிமுறைகளிலும் பின்பற்றினர். போர் அறங்களை மதித்துப் போற்றியது போலவே வாழ்வியல் அறங்களிலும் மனிதநேயத்தைப் போற்றிக் காத்தனர். இதற்குச் சங்க இலக்கியம் சான்றாகிறது.

**மனிதநேயம் - வரையறை:**

"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று அனைத்து உயிர்கள் மீதும் பெரும்பரிவு காட்டினார் வள்ளலார். ஆறறிவு பெற்ற மனிதன், சக மனிதனிடம் மட்டுமல்லாமல் அனைத்து உயிரினங்களிடமும் கருணையோடும் அன்போடும் நடந்துகொள்வதே மனித நேயமாகும். மற்றவர்களுக்கு உதவுவதற்காகத் தன்னையே முழுமையாக ஒப்பளிக்கும் உயர்ந்த உள்ளமே மனித நேயத்திற்கு அடிப்படையாகும்.

உலகில் மனித நேயத்தைப் பற்றி அதிகம் பேசுவதைவிட, மனித நேயமிக்க உலகாக இதை மாற்றுவதே நமது கடமையாகும்.

மனிதனின் சிக்கல்களையும் துன்பங்களையும் சகமனிதர்களால் மட்டுமே தீர்க்கமுடியும். நமது தமிழ்ப் பண்பாட்டைப் பொறுத்தவரையில் கணியன் பூங்குன்றனாரின் "யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பாடலில் உலகளாவிய மனிதநேயம் வலியுறுத்தப்படுகிறது. தற்காலத்தில் நிகழும் பெரும்பாலான சமூகச் சிக்கல்களுக்கு மனிதநேயமே தீர்வாக அமையும்.

வள்ளலாரின் கொள்கை சீவகாருண்யமும் ஆன்மநேய ஒருமைப்பாடுமே ஆகும். எல்லா உயிர்களுக்கும் எவ்வித வேறுபாடும் இன்றி இரக்கம் காட்டிச் சமமாகப் பாவித்து அன்புடன் ஒத்து வாழ்தல் வேண்டும் என்பதே வள்ளலார் காட்டிய வழியாகும். சமயவேறுபாடு, சாதிவேறுபாடு, வருணாசிரமம் ஆகியவற்றைக் முற்றிலும் வெறுத்து ஒதுக்கிய கருணையாளர் வள்ளலார். உலக உயிர்கள் அனைத்தையும் மனிதநேயத்தாலும் அருள் உணர்வாலும் ஒப்ப மதித்து ஒழுகிய சித்தர். சடங்குகளையும் சமயத்தின் பெயரால் நிகழும் பலியினையும் முற்றாகக் கண்டித்தவர். கண்மூடிப் பழக்கமெலாம் மண்மூடிப்போக புலாலைத் தவிர்க்கவேண்டும் என்று போதித்தவர். உயிர்களுக்கு இரக்கம் காட்டினால்தான் இறைவன் நம்மிடம் இரக்கம்

காட்டுவான் என்று ஆன்மநேயம் கொள்ளச் செய்த ஆன்றோர். சமத்துவம் பேசிய சான்றோர், பசிபோக்கும் பேறறத்தை வலியுறுத்திய அருட்செல்வர். எல்லா உயிர்களிடத்தும் பரிவும் இரக்கமும் அன்பும் அருளும் படைத்தவர். இவர் மக்களின் நல்வாழ்வுக்காக ஏற்படுத்திய அமைப்புகளாவன:

1. சத்திய தருமச் சாலை
2. சத்திய ஞான சபை
3. சமரச சுத்த சன்மார்க்க சங்கம்

குடும்ப உறவினர்களிடமும் மனிதநேயம் காக்கப்பட வேண்டும். குடும்பத்தில் வயதானவர்கள், குழந்தைகள், நோயுற்றவர்கள், மனவளர்ச்சி குன்றியவர்களிடத்தும் மனிதநேயத்தோடு நடந்து கொள்ள வேண்டும். குடும்பத்தில் மனிதநேயம் இல்லாதபோது சமூகத்திலும் மனிதநேயம் அற்றுப்போகிறது. எனவே, மனிதநேயம் குடும்பம், சமூகம், நாடு ஆகிய அனைத்திலும் பின்பற்றப்பட வேண்டும் என்கிறார் காந்தியடிகள்.

**சுயமரியாதை அறம்:**

பெரியார் ஒரு சிந்தனைக் களஞ்சியம், சமூகச் சீர்திருத்தச் செம்மல் ஆவார். கடவுள் மறுப்பு, பெண் விடுதலை, எழுத்துச் சீர்திருத்தம், தீண்டாமை ஒழிப்பு, எனப் பல பயனுள்ள சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தப் பெரியார் அரும்பாடுபட்டுள்ளார். மக்களிடையே சுயமரியாதை, சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் ஓங்கி வளர வேண்டும் என்பதே இவரின் உயிர் மூச்சாக இருந்தது.

ஒவ்வொரு சாதியும் முன்னேற வேண்டும் என்றில்லாமல், ஒட்டுமொத்தச் சமூகமும் முன்னேற வேண்டும் என்கிறார் தந்தை பெரியார். சமூகத்தில் உயர்வு, தாழ்வு நீங்கி உண்மையறிவு வளர வேண்டும். சமத்துவம் நிலைக்கவேண்டும். சமூக ஒற்றுமை வலிமை பெற வேண்டும். இதற்கு ஒவ்வொருவரும் சுயமரியாதையுடன் வாழ வேண்டும் எனப் பெரியார் விரும்பினார். இதைச் சாதிப்பதற்காக உருவாக்கப்பட்டதே சுயமரியாதை இயக்கமாகும். இதுவே, பெரியாரின் உயிர்நாடியாக விளங்கியது.

மக்கள் உள்ளங்களில் நீங்காத இடத்தைப் பிடித்தவர் தந்தை பெரியார். இவர் மிகச்சிறந்த சமூகச் சீர்திருத்தவாதியாகத் திகழ்ந்தார். இவர் பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு சமூகச் சிக்கல்களுக்காக மிகுந்த துணிவுடன் போராடி வெற்றி கண்டு சமூக நீதியை நிலைநாட்டினார். தேசநலன் கருதித் தம் குடும்பத்தையே பல சமூகநீதிப் போராட்டங்களில் ஈடுபடுத்தினார். ஆதலால், இவர் 'சமுதாயச் சிற்பி' என்றும் அழைக்கப்பட்டார். இவரது துணிச்சலான போராட்டங்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கது 'வைக்கம்' போராட்டம். இவர் தமிழக மக்களுக்கு மட்டுமல்லாது, கேரளா வாழ் மக்களுக்காகவும் போராடிச் சிறை சென்று வெற்றி கண்டார்.

**வைக்கம் வீரர்**

கேரள மாநிலத்தின் திருவாங்கூரில் உள்ள 'வைக்கம்' என்ற ஊரில் குறிப்பிட்ட வகுப்பைச் சார்ந்த மக்களுக்கு மட்டும், அவ்வூரின் முக்கிய விதிகளில் நடப்பதற்கும் அங்குள்ள ஆலயங்களுக்குள்ளே சென்று வழிபடவும் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. இதை அறிந்த தந்தை பெரியார் அங்குச் சென்று திருவாங்கூர் மன்னருக்கு எதிராகப் போராடி, அவ்வூர் மக்களின் உரிமைகளை மீட்டுத் தந்தார். சமூக நீதிக்காக மிகுந்த துணிச்சலுடன் மன்னரையே எதிர்த்துப் போராடி வெற்றி கண்ட இச்செயலைப் பாராட்டி இவருக்குத் திரு.வி.க. அவர்கள் 'வைக்கம் வீரர்' என்ற பட்டத்தை அளித்தார்.

1938 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் நாள் சென்னையில் மறைமலை அடிகளின் மகளான திருமதி நீலாம்பிகை அம்மையார் தலைமையில் பெண்கள் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் வைக்கம் வீரர் ஈ.வெ.ரா. அவர்கள் கலந்துகொண்டு பெண்ணுரிமைக்கா எழுச்சியுரையாற்றினார். இம்மாநாட்டின் இறுதியில் திருமதி நீலாம்பிகை அம்மையார் இவருக்குப் 'பெரியார்' என்ற பட்டத்தை வழங்கினார். அன்றுமுதல் அனைவராலும் பெரியார் என்றே அழைக்கப்படுகிறார்.

**சுயமரியாதை இயக்கம்**

இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கம் சமூகத்தில் சமத்துவம் ஏற்பட வேண்டும் என்பதாகும். கல்வி, உணவு, உடை, நீதி, வேலைவாய்ப்பு, பதவிகள் என அனைத்திலும் சமத்துவம் வேண்டும் என்பதே இக்கொள்கையின் மையக்கருத்தாகும். மனிதன் என்பவன் மானம் உள்ளவனே என்பதை உணர்ந்து, ஒவ்வொரு மனிதனும் சக மனிதனுக்கு மதிப்பளிக்க வேண்டும்; மக்களுக்குள் சமத்துவமும்

சகோதரத்துவமும் ஓங்கி வளரவேண்டும் மக்கள் அனைவரும் அறிவும் மரியாதையும் மிக்கவர்களாக வாழவேண்டும் என்றார் பெரியார், மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும் சுயமரியாதைக்கு உரிமையுடையவன் என்பது பெரியாரின் உறுதியான கருத்தாகும். சமூகத்திலுள்ள அடித்தட்டு மக்கள் அனைவரும் சுயமரியாதை பெற்றுத் தங்கள் உரிமையை நிலைநாட்ட வேண்டும் எனப் பெரியார் கூறினார். தன் வாழ்நாளின் பெரும்பகுதியைச் சுயமரியாதை இயக்கத்திற்காகவே அவர் ஒதுக்கினார்.

**சுயமரியாதை இயக்கத்தின் நோக்கம்:**

சாதிப் பட்டங்களையும், சமய அடையாளக்குறிகளையும் மக்கள் விட்டொழிக்க வேண்டும். உரிய வயதுக்கு மேல்தான் பெண்களுக்குத் திருமணம் செய்ய வேண்டும். மணமான பெண்களுக்கு 'மணவிலக்கு' செய்துகொள்ளும் உரிமை வேண்டும்; கைம்பெண்களுக்கு மறுமணம் செய்துகொள்ளும் உரிமை வேண்டும். பெண்களுக்குச் சொத்துரிமை, தொழில் நடத்த உரிமை, சிறுவர்களுக்குக் கட்டாயக் கல்வி, ஆசிரியர் பணியில் பெண்களை மட்டுமே நியமித்தல், தாய்மொழிக் கல்வி, சுயமரியாதைத் திருமணம் மற்றும் முழுமையான பெண் விடுதலை போன்ற சமுதாய முன்னேற்றச் செயல்திட்டங்கள் இவ்வியக்கத்தின் அடிப்படை நோக்கங்களாகும்.

**சுயமரியாதை இயக்கத்தின் நல்விளைவுகள்**

சமுதாயத்தில் இளைஞர்கள் பலர் விழிப்புணர்வு பெற்றார்கள். பெண் பிள்ளைகள் பெருமளவில் கல்வி கற்க முற்பட்டனர். திருமணங்களில் உள்ள தேவையற்ற சடங்குகள் நீங்கின, ஏழை எளியோர் பொருட்செலவின்றித் தங்கள் குழந்தைகளுக்குத் திருமணம் செய்தனர். சாதியுடன் கூடிய பட்டப்பெயர்கள் குறையத் தொடங்கின.

**சூழலியல் அறம்**

இந்தப் பூமி முழுவதிலும் மக்கள் வாழும் இடங்களையும், அவ்விடங்களில் உள்ள உயிரினங்கள் மற்றும் உயிரற்றவற்றையும் குறிக்கும் ஒருங்கிணைந்த ஒரு சொல்லாகச் சூழலியல் (Ecology) பயன்படுத்தப்படுகிறது. இது நீர், உணவு, காற்று, நிலம், கடல், மலை, காடு, சூரிய ஒளி எனப் பலவற்றையும் குறிப்பிடுவதாகும். இச்சூழலியல் என்பது, மனிதன் தோன்றுவதற்கு முன்பே இங்குள்ளதாகும்.

உலகத் தோற்றத்திற்குக் காரணமாகப் பெருவெடிப்புக் கொள்கை (The Big Bang Theory), மாறாநிலைக் கொள்கை (The steady state Theory), துடிப்புக்கொள்கை (The Pulsating Theory or the Oscillating Universe Theory) என்ற மூன்றைப் பகுத்தறிவாளர் முன்வைக்கின்றனர். இம்மூன்றினுள் இன்று பெரும்பாலோரால் ஏற்றுக்கொள்ளப்படுவது, பெருவெடிப்புக் கொள்கை ஆகும்.

பெருவெடிப்புக் கொள்கைப்படி, ஏறக்குறைய 20 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர், பருப்பொருள்கள் அனைத்தும் துண்டுகளாகத் திசைகள்தோறும் வெடித்து விண்மீன் வடிவத் திரளாகச் சிதறின என்றும், இவ்விண்மீன் திரள்களிடையிலான இடைவெளி தொடர்ந்து அதிகரித்துக் காலப்போக்கில் இவை முழுவதுமாக மறைந்தொழிந்துவிடும் என்றும், இறுதியில் இப்பேரண்டத்தில் பொருளோ ஆற்றலோ உயிரினமோ நில்லா என்றும் பெருவெடிப்பாளர் கருதுகின்றனர். இதை ஏற்கத் தயங்குவோரும், இங்குத் தொடர்ந்து நிகழும் சூழல் மாசுபாட்டால் உலகம் அழியலாம் என்ற அறிவியலாளர் கருத்துடன் முழுநிலையில் உடன்படுகின்றனர்.

இத்தகைய மாசுபாடுகள் அனைத்தையும் தவிர்த்தால் மட்டுமே, இந்தப் பூமியும் இங்கு வாழும் மனிதர்கள் உள்ளிட்ட அனைத்துவகை உயிரினங்களும் நோயின்றி நீண்ட ஆயுளுடன் வாழ முடியும். இதை அனைவருக்கும் நினைவூட்டுதற்காகவே, ஒவ்வோர் ஆண்டும், உலகம் முழுவதிலும் ஜூன் மாதம் 5ஆம் நாள், உலகச் சுற்றுச்சூழல் நாள் (world Environment Day)' எனக் கொண்டாடப்படுகிறது. இந்த நாளை நாம் கொண்டாடினால் மட்டும் போதாது சுற்றுச் சூழலைப் பேணுவோம்' என்ற உறுதிமொழியை ஒவ்வொருவரும் தம் வாழ்நாள் பணியாகக் கருதி ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் இவ்வுலகம் தூய்மையும் அழகும் பெற்றுச் சிற்றுயிர்களும் பேருயிர்களும் ஒருங்கிணைந்து வாழ்வதற்கான தகுதியைப் பெறும். இந்தத் தகுதியைக் கற்றுத்தருவதே சூழலியல் அறமாகும்

| **சூழலியல் மாசுபாட்டின் வகைகள்** |
| --- |
| காற்றுவெளி மாசுபாடு (Air Pollution) |

| |
|---|
| இரத்த மாசுபாடு (Blood Pollution)<br>நீர் மாசுபாடு (Water Pollution)<br>மண் மாசுபாடு (Soil Pollution)<br>உணவு மாசுபாடு (Food Pollution)<br>கதிரியக்க மாசுபாடு (Radioactive pollution)<br>வெப்ப மாசு (Heat Pollution)<br>ஹார்மோன் மாசுபாடு (Harmone Pollution)<br>ஒளி மாசுபாடு (Light Pollution)<br>இரைச்சல் மாசுபாடு (Noise Pollution)<br>நெகிழி மாசுபாடு (Plastic Pollution)<br>மனையக மாசுபாடு (Indoor Pollution)<br>திடக்கழிவு மாசுபாடு (Solid Waste Pollution)<br>பூச்சிக்கொல்லி மாசுபாடு (Pesticide Pollution) |

நமது சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்குப் பின்வரும் சூழல் அறச்செயல்பாடுகள், அறிஞர்களால் பரிந்துரைக்கப்படுகின்றன.

- ஒரு மனிதனுக்கு ஒரு மரம்' என்ற கொள்கையைப் பின்பற்ற வேண்டும்.
- பயிர்நிலத்திற்காகத் தாவரங்களை அழிக்கக்கூடாது
- வீடு கட்டுவதற்காகக் காட்டு மரங்களை வெட்டக்கூடாது.
- மண்ணரிப்பையும் மண்ணள்ளலையும் தவிர்க்க வேண்டும்
- வேட்டையாடுவதை விட்டொழிக்க வேண்டும்.
- எந்திர மற்றும் வாகன இரைச்சலைக் குறைக்கவேண்டும்.
- உடனுக்குடன் கழிவுகளை அகற்றுவதும் இன்றியமையாததாகும்.
- எரிபொருள்களின் பயன்பாட்டையும் புகைவெளியேறுவதையும் கட்டுப்படுத்த வேண்டும்.
- இடுகாடுகளும் சுடுகாடுகளும் ஊருக்கு வெளியே அமைக்கப்பட வேண்டும்.
- இயற்கையைச் சுரண்டும் பேராசையைக் கைவிடவேண்டும்.

சூழலியல் அறம் என்பது மானுட அறமாகும். சுற்றுச்சூழலைப் பேணுவதன் வாயிலாகத் தம்மையே மனிதர்கள் பேணிக்கொள்கின்றனர். இது தொடர்பாகப் 'புலிட்சர் விருதை' (Pulitzer Award) 1979 மற்றும் 1991 ஆம் ஆண்டுகளில், தம் உயிரியல் ஆய்வுகளுக்காகப் பெற்ற உலகப் புகழ் வாய்ந்த அறிஞர் எட்வர்ட் ஆஸ்பார்ன் வில்சன் வலியுறுத்தும் சூழல் அறக்கருத்தும் எண்ணத்தக்கதாகும்.

'மானுடத்திற்குப் பல்லுயிர்ப் பன்மையின் பங்களிப்பை அறிந்து அதைப் பயன் கொள்ளும் போது, அதன் ஒவ்வொரு துகளும் எவ்வளவு விலை மதிப்பற்றது என்பது நமக்கு விளங்கும்' என்கிறார் எட்வர்ட் ஆஸ்பார்ன் வில்சன்.

**விலங்குநல அறம்:**

மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் இடையிலான உறவை விளங்குவதும் புரிந்துகொள்ள முனைவதும் விலங்குநல அறமாகும். இது விலங்குகளின் வாழ்வுரிமை, அவற்றின் மேம்பாடு, காட்டுயிர்ப் பேணல், விலங்குக்கல்வி, விலங்குநலச் சட்டம், உயிரிரக்கம் மற்றும் உயிர்நேயக் கொள்கைகளையும் உள்ளடக்கியதாகும்.

விலங்குகளின் மாண்பைக் குலைப்பதாகவும், தார்மீக மீறலாகவும் விலங்குவதையைக் கொள்ளலாம். ஓணான் அடித்தல், வண்ணத்துப்பூச்சிகளின் சிறகைப் பிய்த்தல், பொன்வண்டைப் பிடித்தல், நாயின் மீது கல்லெறிதல், மாட்டை அடித்தல், கழுதை வாலில் பட்டாசு கட்டுதல், கிளியைப் பிடித்துக் கூண்டில் அடைத்தல் எனச் சிறார்ப் பருவத்தில் நம்மையும் அறியாமல் நாம் பல்வேறு உயிரிகளுக்குத் தீங்கு செய்திருக்கிறோம். இவை இன்று சட்டப்படி தண்டனைக்குரிய குற்றங்களாகும். நமது அன்றாட வாழ்வில் உரிய விழிப்பின்றிச் செய்யும் பல்வேறு செயல்களால், விலங்குநலத்துக்குத் தொடர்ந்து நாம் கேடு செய்கிறோம் என்பதை உணரவேண்டும். இதனை உணரத் தலைப்பட்ட நிலையில், 1866 ஆம் ஆண்டு விலங்குவதைத் தடைச்சட்டத்தை அமெரிக்கர்கள் கொண்டுவந்தனர். விலங்குகளை ஆய்வுப் பொருள்களாகப் பயன்படுத்துவதால் அவற்றுக்கு ஏற்படும் துன்பங்களைவிட, மனிதர்களுக்கு விளையும் நன்மைகளே அதிகமென்று அறிவியலாளர் வாதாடினர். இது பயன்பாட்டுக் கருத்தியலாகும். இதனை ஏற்க மறுத்த உயிரிரக்கக் கோட்பாட்டாளர்கள், உயிரினங்கள் அனைத்துக்கும் உயிர்வாழும் உரிமையுண்டு என்றும், மனிதர்களின் நலன்களுக்காக விலங்குகளை வதைக்கவோ அழிக்கவோ கூடாதென்றும் கருத்துரைத்தனர். இது பயன்பாட்டுக் கருத்தியலுக்கு எதிரானதாகும்.

1992 இல் விலங்குகள் என்பவை பொருள்கள் அல்ல, அவை உயிர்கள் என்ற சட்டத் திருத்தத்தைச் சுவிட்சர்லாந்து நாட்டினர் நிறைவேற்றினர்.

2013 இல் இந்தியச் சட்டம், மனிதர்களுடன் ஒப்பவைத்து எண்ணத்தக்க உயிரிகளாக டால்பின்களை ஏற்றுக்கொண்டதுடன், மனிதர்களுக்குள்ள அனைத்துரிமைகளையும் அவற்றுக்கும் உறுதிசெய்தது.

அசையும் சொத்துக்களாகக் கருதப்பட்ட விலங்குகளுக்கு உணர்வுயிரிகள் என்ற அடைமொழியை, 2014 இல் சட்டத்திருத்தம் மூலமாகப் பிரான்ஸ் நாட்டினர் வழங்கியுள்ளனர்.

நெதர்லாந்து, நியூசிலாந்து, ஸ்வீடன், இங்கிலாந்து, ஜெர்மனி, ஆஸ்திரியா ஆகிய நாடுகளில் ஒரங்குட்டன், கொரில்லா, சிம்பென்சி ஆகிய மூன்றும் மனிதனுக்கு ஒப்பானவை எனக் கருதப்பட்டு ஆய்வகச் சோதனைகளில் அவற்றைப் பயன்படுத்தக் கடுமையான தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

**வன விலங்குகள் ஏன் அழிகின்றன என்று உங்களுக்குத் தெரியுமா?**

- பாதுகாப்பற்ற சூழ்நிலை
- காடுகளின் பரப்பளவு குறைதல்
- வனத்தாவரங்கள் அழிக்கப்படுதல்
- வறட்சி மற்றும் காட்டுத்தீ
- வேட்டையாடுதல்
- தொற்றுநோய்கள்
- மின்வேலிகள்

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 21ஆம் பிரிவின் கீழ், 2000 ஆம் ஆண்டில் கேரள உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி, வேடிக்கை வட்டரங்கில் (Circus) உள்ள விலங்குகளுக்கும் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

நமது நண்பர்களான விலங்குகளிடம் இரக்கம் காட்டுவதுடன், அவற்றின் உரிமைகளை இனங்காண்பதும் பாதுகாப்பதும் நமது அடிப்படைக் கடமைகளாகும். 1960 ஆம் ஆண்டு விலங்குவதைத் தடைச்சட்டத்தில் 2012 இல் மேற்கொள்ளப்பட்ட திருத்ததில், 15-ஆம் பிரிவு உயிருள்ள விலங்குகளைக் கல்வி ஆய்வுகளுக்காகக்கூடப் பயன்படுத்தக்கூடாது என இந்திய அரசு தடை செய்துள்ளது.

**இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் வழங்கியுள்ள விலங்கு உரிமைகள்**

- அனைத்து உயிர்களிடமும் பரிவு காட்டுவது, ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமையாகும்.

- தெருவில் திரியும் விலங்குகளைக் காயப்படுத்துவதும் கொல்வதும் சட்டப்படி குற்றமாகும்.

- எக்காரணம் செயல் மூன்றுமாதச் சிறைத்தண்டனைக்குரியது.

- கட்டிவைத்தோ, உணவிடாமல் வதைத்தோ, குடிநீரை மறுத்தோ, தங்குமிடம் தராமலோ விலங்குகளைப் பல மணிநேரம் துன்புறுத்துவது தண்டத்தொகைக்கும் சிறைத்தண்டனைக்கும் உரியதாகும்.

- குரங்குகளை வளர்ப்பதும், காட்சிப்பொருள் ஆக்குவதும் தடை செய்யப்பட்டுள்ளன. வேடிக்கை வட்டரங்குகளில் அல்லது தெருக்களில் வித்தை காட்டும் பொருட்டுக் குரங்கு, சிறுத்தை, கரடி, புலி, சிங்கம், காளை ஆகிய விலங்குகளைப் பயிற்சிகள் வழித் துண்புறுத்தக்கூடாது.

- குரங்குகளை வளர்ப்பதும், காட்சிப்பொருள் ஆக்குவதும் தடை செய்யப்பட்டுள்ளன. வேடிக்கை வட்டரங்குகளில் அல்லது தெருக்களில் வித்தை காட்டும் பொருட்டுக் குரங்கு, சிறுத்தை, கரடி, புலி, சிங்கம், காளை ஆகிய விலங்குகளைப் பயிற்சிகள் வழித் துன்புறுத்தக்கூடாது.

- உயிரியல் பூங்காக்களில் குப்பைகளை வீசுதலும், விலங்குகளைச் சீண்டுதலும், விலங்குகளுக்கு உணவிடுதலும், தொந்தரவு செய்தலும் குற்றமாகும். இக்குற்றத்திற்கு ரூபாய் 25,000 தண்டத்தொகையும், மூன்றாண்டுச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

- விலங்குகளைப் பிடித்தல், வலையில் அகப்படுதல், நஞ்சூட்டல், தாக்குதல் அல்லது துன்புறுத்த முனைதல் முதலிய குற்றங்கள் ரூபாய் 25,000 தண்டத்தொகைக்கும் ஏழாண்டுச் சிறைத் தண்டனைக்கும் உரியன.

- முட்டைகளை உடைத்தல் அல்லது இடம் பெயர்த்தல், ஊர்வன மற்றும் பறவைகளின் வாழ்விடங்களைச் சிதைத்தல், அவை வாழும் மரங்களை வெட்டுதல் அல்லது அதற்காக முனைதல் ஆகியன வேட்டையாடுவதற்கு இணையான குற்றங்களாகக் கருதப்பட்டு, ரூபாய் 25,000 தண்டத்தொகையும் ஏழாண்டுச் சிறைத்தண்டனையும் விதிக்கப்படும்.

- விலங்குகளை ஆய்வுக்குட்படுத்தித் தயாரிக்கப்பட்ட ஒப்பனைப் பொருள்களுக்கும், அவற்றை இறக்குமதி செய்வதற்கும் தடை செய்யப்பட்டுள்ளது.

விலங்கு நல அறம் என்பது, ஒரு நவீனக் கருத்தில் மட்டுமன்று, இது பழந்தமிழ் இலக்கியங்களிலும் சிறப்பாக வலியுறுத்தப்பட்டுள்ளதைக் காண்கிறோம். தாய், தந்தை முதலிய உறவுநிலைகளை ஆநிரைக்கும் பொருத்திப் பசுங்கன்றின் துயரத்துக்காகப் பரிந்து, ‘இன்னே வரகுவர்’ என்று ஆறுதல் கூறுகிறாள்,

முல்லைப்பாட்டில் வரும் ஆய்மகள்.

“சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி ஆய்மகள்
நடுங்குசுவல் அசைத்த கையள் கைய
கொடுங்கோல் கோவலர் பின்னின்று உய்த்தர
இன்னே வருகுவர் தாயர் என்போள்”

(முல்லைப்பாட்டு: 16 - 12)

‘இதோ வந்துவிட்டனர் உங்கள் அன்னையர்’ எனக் கன்றுக்குப் பரிந்த பேசும் இம்முல்லைப் பாட்டின் ஆய்மகள், விலங்குகள் மீது மானுடர் செலுத்த வேண்டிய உயிர்நேயப் பண்புக்குச் சிறந்த சான்றாகிறாள். சிற்றுயிர்களுக்கும் துன்பம் நேராதவாறு வாழ்வதே பழந்தமிழர் பண்பாடு ஆகும். இதன் பிழிவைப் பின்வரும் நற்றிணைப் பாடலிலும் காணலாம்.

‘புணரி பொருத பூமணல் அடைகரை
ஆழி மருங்கின் அலவன் ஓம்பி
வலவன் வள்பு ஆய்ந்து ஊர’ (நற்றிணை : 8 – 6.11)

கடற்கரை மணலில் தேரோட்டிச் செல்பவன், அங்குள்ள நண்டுகளுக்குத் துன்பம் நேராதவாறு குதிரைகளைத் திருப்புகிறான் என்கிறார் உலோச்சனார். இத்தகைய உயிர்நேயம் உலகோர்

அனைவரும் வியக்கத்தக்கதாகும். இக்கருத்தின் இன்னொரு கோணத்தைக் கவிஞர் இன்குலாப், ‘பவர்ணமி இரவில்’ என்ற தம் கவிதையில், பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளார்.

‘‘பவுர்ணமி இரவின் படகுக்காரரே!
நதிநீரை அலைக்கும் நாணல் புதர்களை
விலக்கிச் செல்கையில்
மெதுவாகச் செல்லுங்கள்!
வழியில் தண்ணீர் வாத்துகள் அடைகாத்த
முட்டைகள் கிடக்கலாம்
கால்கள் - மோதிவிடாதிருக்கட்டும்’’

இத்தகைய உயிர்நேயம், என்றுமுள தென்தமிழன் மானுடக்கொடையாகும்.

**இராணுவ அறம்**

‘இராணுவ அறம்’ என்பது அனைத்துவகை இராணுவச்செயல்பாடுகளையும் குறிப்பதாகக் கொள்ளலாம். இராணுவ அறத்திற்குக் ‘கீழ்ப்படிதல்’ என்பது மிகவும் இன்றியமையாததாகும். இது குறிப்பாகக் போர்க்காலங்களில் கடைப்பிடிக்கப்பட வேண்டியதாகும். நவீன அறிவியல் கருவிகளைப் பயன்படுத்தும் திறனும் விழிப்பும் ஒழுங்கும் இங்குத் தேவைப்படுகின்றன. இத்தேவையைப் பொறுப்புணர்வுடன் நிறைவேற்றுவதை, ‘இராணுவ அறம்’ வலியுறுத்துகிறது.

**இராணுவத்திற்கான ஏழு அறங்கள்**

- பற்றுறுதி (Loyalty)
- கடமை (Duty)
- மதிப்பு (Respect)
- தன்னலமற்ற தொண்டு (selfless service)
- மாண்பு (Honour)
- நம்பிக்கை (Integrity)
- மனத்துணிவு (Personal courage)

**இராணுவ அறத்தின் பாற்பட்ட விலக்க முடியாத விதிகளைப் பின்வருமாறு தொகுக்கலாம்.**

- ஒரு குறிப்பிட்ட சூழலில் படைகளைக் களமிறக்க வேண்டிய நெருக்கடியுள்ளதா என்பதைத் தெளிவாக அறிந்த பிறகே அத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

- போரிடும் போது கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளைக் கண்டிப்பாகப் பின்பற்றவேண்டும்.

- எளிய குடிமக்களின் உயிர்களுக்கு ஊறு ஏற்படாத வகையில், தாக்குதல் நடவடிக்கைகளைக் கட்டுக்கோப்புடன் கையாள வேண்டும்.

- ஒரு நாட்டின் மாண்புக்கும் கண்ணியத்திற்கும் இழுக்கு ஏற்படாத முறையில், இராணுவ நடவடிக்கையைத் தவிர்க்க முடியாமைக்கான நியாயங்களைப் பகுத்தறிவுக் கோட்பாட்டிற்குப் பொருத்துமாறு ஆட்சித்தலைவர்கள் பொதுவெளியில் விளக்க வேண்டும்.

- நவீனப் போர்த்தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்துகையில், அவை நடைமுறை இராணுவ அறவிதிகளுக்கு முரண்படாமலிருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

- அமைதியை நிலைநாட்டுவதற்காக மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள், இருதரப்பிலுமுள்ள வெகுமக்களின் அடிப்படை உரிமைகளுக்குக் கேடு செய்யாதவாறு ஒழுங்குபடுத்தப்படுதல் சாலச்சிறந்ததாகும்.

- சட்டத்தின் அடிப்படையிலும் நியாயத்தின் அடிப்படையிலும் இராணுவ முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

- குழந்தைகள், பெண்கள், நோயாளிகள், முதியோர், எளியோர் முதலியோரைப் பாதுகாக்க வேண்டும்.

- மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள், இரு தரப்பிலுமுள்ள வெகுமக்களின் அடிப்படை உரிமைகளுக்குக் கேடு செய்யாதவாறு ஒழுங்குபடுத்தப்படுதல் சாலச்சிறந்ததாகும்.

- வழிபாட்டிடங்கள், வரலாற்றுச்சின்னங்கள், நினைவில்லங்கள், நூலகங்கள், பூங்காக்கள், மருத்துவமனைகள், கலைக்கூடங்கள் முதலியவற்றைத் தாக்கக்கூடாது.

- சரியான முடிவுகளைத் தவறான காரணங்களுக்காகவோ, தவறான முடிவுகளைச் சரியான காரணங்களுக்காகவோ மேற்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

- போர்க்கைதிகளைக் குற்றவாளிகளைப் போல் நடத்தக்கூடாது அரசியல் கைதிகளைத் தண்டிப்பதற்குரிய சட்டங்களுக்குட்பட்டு அவர்களை அணுகவேண்டும்.

**பெண்ணிய அறம்:**

ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழும் சமத்துவச் சூழலை நோக்கித் தற்கால உலகம் சென்றுகொண்டிருக்கிறது, இச்சூழலில், சமூகத்தின் சரிபாதியான பெண்ணினத்தின் சிக்கல்களைப் பேசவும், அவற்றுக்குத் தீர்வு காணவும் உதவும் ஒரு கோட்பாடாகப் பெண்ணியத்தை வரையறுக்கலாம். இப்பெண்ணியம்வழிப் பெண்நலம் பேணுவது பெண்ணிய அறமாகும்.

பெண்ணிருப்புக்கான நியாயங்களைப் பெண்ணின் கண்ணோட்டத்தின் வழியாகக் காண்பதும் பெண்களின் சமத்துவத்தையும் வளர்ச்சியையும் வலியுறுத்துவதும் பெண்களின் சார்பாகப் போராடுவதும் எல்லா நிலைகளிலும் பெண்களின் பங்கேற்பை உறுதிசெய்வதும் பெண்ணிய அறக்கோட்பாட்டின் இலக்குகளாகும்.

| |
|---|
| சமத்துவம் என்பது போராடிப் பெறும் ஏதோ ஒரு கருத்தியல் இல்லை; அது ஒரு தேவை; புவியீர்ப்பு விசை போன்று இயற்கையானது; ஆண்களும் பெண்களுமாகப் பூமியில் காலூன்றி நிற்பதற்கு அது வேண்டும் அனைத்துப் பண்பாடுகளிலும் உள்ள பெண் வெறுப்பு என்பது மானுடத்தின் உண்மை இயல்பன்று அது ஒரு சமநிலைக் குலைவே. (ஜோஸ் வேடன்) பெண்ணியம், முனைவர் இரா. பிரேமா, தமிழ்ப் புத்தகாலயம் |

சமூக எழுச்சியின் ஒரு பகுதியாகவும் ஓர் அறிவார்ந்த கொள்கையாகவும் போராட்டக் கருவியாகவும் நியாயமான எதிர்ப்புணர்வாகவும் பெண் விடுதலை பற்றிய கருத்தியல் உருவானதாகக் கூறலாம்.

வழி வழியாக வந்த நியாயங்கள், தொடர்ந்து உருவாக்கப்பட்ட மதிப்புகள், விதிக்கப்பட்ட நெறிகள், கற்பிக்கப்பட்ட புனிதங்கள் போன்ற அனைத்தையும் பெண்ணிய அறம் கேள்வி கேட்கிறது.

உரிய இடம், உரிய பங்கு, உரிய மதிப்பு, உரிய அதிகாரம் முதலியவற்றைப் பெண்ணிய அறம் உறுதிசெய்கிறது.

உடலால், உள்ளத்தால், மொழியால், கருத்தால், செயலால், விளைவால் ஆணுக்கிணையாகத் தன்னையும் பெண் வெளிப்படுத்திக்கொள்வதைப் பெண்ணிய அறம் வரவேற்கிறது.

பெண்களின் இயல்பான விருப்பங்கள், உள்ளத்துணர்வுகள், அவற்றின் முறிவுகள், சிதைவுகள், அழுத்தங்கள் முதலியவற்றைப் படைப்பிலக்கியங்கள் மற்றும் பிற கலை வெளிப்பாடுகளின் வழிப் பதிவுசெய்வதைப் பெண்ணிய அறம் ஊக்குவிக்கிறது.

பொதுமொழி என்பது பெரிதும் ஆண் மொழியாகவே உள்ளது. ஆண் மொழியின் சொற்கள், பெண்ணைக் கேலி செய்வதாகவும், அவளின் இருப்புக்குரிய மதிப்பை மறுப்பதாகவும் உள்ளன. இந்நிலையில், ஒரு புதிய பெண் மொழியின் தேவையைப் பெண்ணிய அறம் வலியுறுத்துகிறது. (எ.கா) Chairman – Chairperson, Chairwoman, ஆசிரியன் - ஆசிரியை, ஆசிரியர் : மாணவன் - மாணவி, மாணவர்.

பெண்களுக்குக் கல்வி உரிமை, மணத்தெறிவு உரிமை, சொத்து உரிமை, தொழில் உரிமை, வழிபாட்டு உரிமை, மணவிலக்கு உரிமை, குழந்தைப் பேற்றைத் தீர்மானிக்கும் உரிமை, பேறுகால விடுப்பிற்கான உரிமை, அரசியல் பங்கேற்பு உரிமை, ஓட்டுநர் உரிமை, வேலை பார்க்கும் பெண்கள் சங்கம் (Professional Women's Club) அமைப்பதற்கான உரிமை எனப் பல்வேறு உரிமைகளைப் பெண்ணிய அமைப்புகள் போராடிப் பெற்றுள்ளன.

மரபுவாதப் பெண்ணியம் (Conservative Feminism), தாராளவாதப் பெண்ணியம் (Liberal Feminism), தீவிரவாதப் பெண்ணியம் (Radical Feminism), சமதர்மப் பெண்ணியம் (Social Feminism), பண்பாட்டுப் பெண்ணியம் (Cultural Feminism), ஆன்மீகப் பெண்ணியம் (Spiritual Feminism), சீர்திருத்தப் பெண்ணியம் (Reformist Feminism), தலைமை வேண்டாப் பெண்ணியம் அமைப்பை மறுக்கும் பெண்ணியம் (Rebellion Feminism), புரட்சிகரப் பெண்ணியம் (Revolutionary Feminism), வன்முறை எதிர்ப்புப் பெண்ணியம் (Anti-Violence feminism), கருப்பினப் பெண்ணியம் (Black Feminism), சூழல் பெண்ணியம் (Eco – Feminism) எனப் பலவாறாகப் பெண்ணிய இயக்கங்களைப் பெண்ணியவாதிகள் பகுத்துள்ளனர். இந்தப் பெண்ணிய இயக்கங்கள், உலகம் முழுவதிலும் பரவிப் பெண் உரிமைகளுக்காகப் போராடி வருகின்றன. இவற்றை முதல் கட்டப் பெண்ணியம், இரண்டாம் கட்டப் பெண்ணியம், மூன்றாம் கட்டப் பெண்ணியம் என மூன்றாகப் பகுக்கலாம்.

### முதல் கட்டப் பெண்ணியம் (First wave Feminism)

பெண் கல்வி, பாலினச் சமத்துவம், போதைப்பொருள் மறுப்பு, பெண்ணடிமை ஒழிப்பு முதலியவற்றைக் குறிக்கோளாக்கிப் பெண்ணியத்தின் முதல் அலை (1900 – 1930), உலகம் முழுவதும் எழுந்தது. இது பெண் பற்றிய மரபுவழிக் கருத்துகளைப் பொதுநிலையில் எதிர்த்தது. அடிப்படையான மனித உரிமைகளையே இது கோரியது.

### இரண்டாம் கட்டப் பெண்ணியம் (Second wave Feminism):

ஆண்களுக்கு இணையாகப் பெண்களுக்கும் வாக்குரிமை, வேலை வாய்ப்பு, பணியிடப் பாதுகாப்பு, சம ஊதியம் முதலியவற்றைப் பெரிதும் வலியுறுத்துவதாகப் பெண்ணியக்கத்தின் இரண்டாம் கட்டம் (1900 – 1960) அடைந்தது. இது ஒடுக்கப்பட்டவர்களான நலிந்தோரின் உரிமைகள் அனைத்தையும் தன்னோடு இணைத்துக்கொண்டு வலிமையுற்றது. இவ்வகையில் பெண்களின் அரசியல் பங்கேற்பையும் இது முன்னெடுத்தது.

### மூன்றாம் கட்டப் பெண்ணியம் (Third Wave Feminism):

மானுட உரிமைப் போருக்கான உரையாடலின் ஒரு பகுதியாக, மூன்றாம் கட்டப் பெண்ணியம் (1960 - இன்றுவரை) அமைகிறது. இது ஆண் வெறுப்பில் விளையவில்லை; இரண்டாம் பாலினமாகப் பெண்ணைக் கருதிப் பெண்ணுக்கான உரிமைகளைப் பெறக் கெஞ்சவில்லை; தடைகளைத் தானே உடைத்துத் தனக்கான விடுதலையைத் தானே படைத்துக்கொண்டது.

பெண்ணின் அறம் என்பது ஆண்களுக்கு இணையாகக் கல்வியும் வேலையும் சொத்தும் கேட்டுப் போராடுவதுடன் அமைதி கொள்வதில்லை. அது உலகம் முழுவதும் வாழும் அனைத்து மனிதர்களின் வாழ்வுரிமைகளுக்காகவும் ஒலிக்கும் ஒரு வலிமையான அறக்குரலாகும். இதனால்தான் கார்ல் மார்க்ஸ், 'ஒரு சமூகத்தின் முன்னேற்றத்தை வெள்ளையினப் பெண்களின் முன்னேற்றத்தை வைத்து மட்டுமல்லாமல், கருப்பினப் பெண்களின் முன்னேற்றத்தையும் சேர்த்து வைத்தே அளவிட வேண்டும்'' எனச் சமூக விடுதலையின் முழுமுதற்காரணியாகப் பெண் முன்னேற்றத்தைப் பரிந்துரைக்கிறார்.

### சமயஞ்சாரா அறம்

முன்னேற்றத்தை வெள்ளையினப் பெண்களின் சாதி, மதம், இனம், மொழி, வட்டாரம், பால் பாகுபாடுகளைத் தாண்டிய நிலையில் அறம் என்பது உலகப் பொதுவானதாகும். இத்தகைய பொதுமை அறம் மனிதகுலம் முழுமைக்கும் பயனளிப்பதாகும். இயற்கையைத் தொடக்கத்தில் வழிபட்ட மனிதன், 'அரசு, குடும்பம், சமயம்' ஆகிய நிறுவன அமைப்புகள் உருப்பெற்றநிலையில்

இயற்கையை மீறிய கருத்துருவங்களைச் சிலைகளாகவும் கோவில்களாகவும் பிற வழிபாட்டுச் சின்னங்களாகவும் தொழத் தொடங்கினான். இதன் விளைவாகச் சமயம் என்பது எளிய மனிதர்களின் அன்றாட வாழ்வில் குறுக்கிடும் திட்டவட்டமான இறுகிய விதிகளைக் கொண்ட நிறுவன அமைப்பானது.

பொதுமை அறம் மனிதகுலம் முழுமைக்கும் பயனளிப்பதாகும். இயற்கையைத் தொடக்கத்தில் வழிபட்ட மனிதன், ‘அரசு, குடும்பம், சமயம்’ ஆகிய நிறுவன அமைப்புகள் உருப்பெற்றநிலையில் இயற்கையை மீறிய கருத்துருவங்களைச் சிலைகளாகவும் கோவில்களாகவும் பிற வழிபாட்டுச் சின்னங்களாகவும் தொழத் தொடங்கினான். இதன் விளைவாகச் சமயம் என்பது எளிய மனிதர்களின் அன்றாட வாழ்வில் குறுக்கிடும் திட்டவட்டமான இறுகிய விதிகளைக் கொண்ட நிறுவன அமைப்பானது.

இந்த உலகையும் இங்கு வாழும் வாழ்வையும் பெரிதாகக் கருதாமல் சொர்க்க நரகங்களைச் சமய நிறுவனங்கள் வலியுறுத்தின. அன்பு, அருள், இரக்கம், பரிவு, தோழமை முதலியவற்றை வளர்க்க விரும்பிய சான்றோர் பெருமக்கள், இவற்றுக்குச் சமய நிறுவனங்கள் வேண்டாம் என்று கருதிச் சமயஞ்சாரா அறத்தைச் சிறப்புக்குரியதாகப் பரிந்துரைத்தனர். இங்குச் சமயக் கருத்தியலில் அறம் இல்லை என்பது பொருளன்று; சமயஞ்சாரா மானுட விழுமியங்களில் செறிவும் ஆழமும் கூடிய மனிதப்பண்புகள் மிகுந்துள்ளன எனப் பொது அறத்தைப் பெரியோர் விரிவுபடுத்துவர்.

‘பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோடு தொகுத்தவற்றுள் எல்லாம் தலை’ எனத் திருவள்ளுவர் கூறுவதைச் சமயஞ்சாரா அறக்கோட்பாடாகக் கருதலாம். இதன் நுண்விளக்கத்தைச் சீத்தலைச் சாத்தனார், “அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின், உண்டியும் உடையும் உறையுளும் அல்லது இல்” என்கிறார். “உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே” என்றும், “உடம்பை வளர்த்தோம் உயிரை வளர்த்தோம்” என்றும், உணவையும் உயிரையும் உலகையும் வாழ்வையும் பொருட்படுத்திச் சான்றோர் பேசியுள்ளனர். ‘பசிப்பிணி என்னும் ஒரு பாவி’ என்றும், ‘கையது கொண்டு மெய்யது பொத்தி’ என்றும், ‘அழிபசி வருத்தம்’ என்றும் அடிப்படைத் தேவைகள் நிறைவேறாததால் விளையும் துன்பங்களைப் புலப்படுத்தியுள்ளனர். இவற்றுக்குக் கடவுள் மற்றும் சமயச் சிந்தனைகளைத் தாண்டிய தீர்வுகளை உலக வாழ்விலேயே தேட வேண்டும் எனச் சான்றோர் கருதினர். சமூக அமைதிக்குச் சமயங்களால் பங்கம் வராமல் காத்து நல்லிணக்கத்துடன் மனிதர்கள் அனைவரும் ஒழுங்குகூடிவாழும் இயல்பையே அவர்கள் வலியுறுத்தினர்.

சமயஞ்சாராமை என்பது கடவுள் / சமயங்களின் மறுப்பு என்றும், பல்வேறு சமயங்களின் இடையே எந்தக் குறிப்பிட்ட சார்புநிலையையும் எடுக்காத நல்லிணக்கம் என்றும் இருவகையாகப் பொருள் கூறப்படுகிறது. மனித அறிவுப்புலங்களான தருக்கவியல், நடத்தையியல், நுண்ணறிவியல், சமூகவியல் போன்றவற்றின் அடிப்படையில் தோன்றுவதே சமயஞ்சாரா அறமாகும். இக்கோட்பாடுகள் இயற்கையிறந்த ஆணைகளாலோ சமயங்களாலோ ஏற்பட்டதல்ல. இவை மனிதநேயம், நல்லிணக்கம், சுதந்திரச் சிந்தனை உள்ள எந்த அமைப்புக்கும் பொருந்தும். தொன்மை நியதிகள், சமூக ஒப்பந்தங்கள், சட்ட நெறிகள், பணிப் பண்பாடு போன்ற பகுத்தறிவுக்குப் பொருத்தமான ஒழுகலாறுகள் சமயஞ்சாரா அறத்திற்குரியன.

‘அன்பு, நேர்மை, உண்மை, ஒழுக்கம்’ ஆகிய அறங்களும், வன்முறை எதிர்ப்பும் சமயஞ்சார்ந்த மற்றும் சமயஞ்சாராக் கருத்தியல்களுக்குப் பொதுவானவை. தனிமனித நலனையும் சமூகநலனையும் முன்வைக்கும் அறக்கொள்கைகளை ஏற்பதிலும் இவற்றிடையே ஒற்றுமையுள்ளது. ஆனால், கடவுளையும் கற்பிதங்களையும் சமயஞ்சாரா அறம் ஏற்பதில்லை. இயற்கை கடந்த, உண்மைக்குப் புறம்பான எதையும் ஏற்றுக்கொள்ளாத சமயஞ்சாரா அறவியலாளரின் எடுகோள்களைப் பின்வருமாறு தொகுக்கலாம்.

| |
|---|
| சமயங்களால் குற்றவாளிகள் உருவாவதைத் தடுக்கமுடியுமே தவிர, பண்பார்ந்த மனிதர்களை அவற்றால் உருவாக்கமுடியாது என்றும், பகுத்தறிவு விழுமியங்களே சிந்தவை என்றும் கருதுவர். புகழ்பெற்ற உயிரியல் அறிஞரான ஸ்டீபன் ஜே கௌட் (Stephen Jay Gould), “இயற்கையிடமிருந்து விடைகளை மறுப்பேதும் சொல்லாமல் அப்படியே ஏற்கமுடியாது என்றும், பகுத்தறிவின் மூலமே அறத்தை வரையறுக்க வேண்டும்” என்றும் கூறுகிறார். |

- தமக்கு இயல்பான நற்பண்புகளின் அடிப்படையில், அறங்களைத் தமக்குத் தாமே படைக்கும் ஆற்றல் மனிதர்களுக்கு உண்டு.

- அறக்கோட்பாட்டாளர்கள் எடுக்கும் முடிவுகள் பொதுநலன்களைக் கருதியதாக அமையவேண்டும்.
- காரண காரிய அடிப்படையிலான நன்னெறிகளைக் காலத்திற்கு ஏற்ப மாற்றலாம்; புதுப்பிக்கலாம்.
- தீங்கு பயக்காத நன்னெறிகளையே தனிநபரும் சமூகமும் பின்பற்ற வேண்டும்.
- அறமும் பகுத்தறிவும் உள்ள பண்பட்ட சமூக அமைப்பை உருவாக்க வேண்டும்.

இத்தகைய சமயஞ்சாரா அறக்கருத்துக்களைத் திருக்குறளிலும் காண்கிறோம். கடவுள் பற்றிக் கூறும் போதும், எந்தச் சமயக் கடவுளையும் குறிப்பிடாமல், ''தூய அறிவுடையவன், மெய்யான ஒழுக்கநெறி உடையவன், எண்வகை குணமடையவன், வேண்டுதல் வேண்டாமை இல்லாதவன்'' எனச் சமயப் பொறை பேசுகிறார் வள்ளுவர். அன்புடைமை, அருளுடைமை, அடக்கமுடைமை, அறிவுடைமை, பண்புடைமை, பொறையுடைமை, புறங்கூறாமை, வாய்மை, சான்றாண்மை, ஊக்கமுடைமை, இன்னா செய்யாமை எனச் சமயஞ்சாரா கருத்தியலின் அடிப்படைகளை வள்ளுவர் வரையறுத்துள்ளார். எனவே, எவ்வகை ஏற்றத்தாழ்வும் இன்றி, அனைவரும் உடன்பட்டு வாழும் மானுடநல அறமே 'சமயஞ்சாரா அறம்' எனலாம்.

**நிறைவுரை**

அண்ணல் காந்தியடிகளின் அறநெறிகள், மனிதநேயம் சார்ந்த அறக் கருத்துகள், சூழலியல் அறம், விலங்கு நல அறம், இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள விலங்கு உரிமைகள், பெண்ணிய அறம், இராணுவ அறம், சமயஞ்சாரா அறம் ஆகியவை குறித்து விரிவாக விளக்கப்பட்டுள்ளன. மாணாக்கர் அறிந்துகொள்ளும் வகையில், பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள அண்மைக்கால அறநெறிப்போக்குகள், அவர்தம் வாழ்வில் கடைப்பிடித்து, நன்மாணாக்கராய் உயர வழிகாட்டும் என்பது திண்ணம்.